
கல்கி
சிறுகதைச் சிறப்பிதழ்
KALKI 11-1-1976
75


நடத்திய பரிசோதனைகள் நிரூபிக்கின்றன...
பிஸ்கட் என்றால் இதுதான்—சுவைக்கும்
வைட்டமின்களுக்கும்
போஷாக்குக்கும் இதுதான்:
பிரிட்டானியா
க்ளுக்கோஸ்-D
பிரிட்டானியா க்ளுக்கோஸ்-Dயுடன் மற்றொரு முன்னணி ரக க்ளுக்கோஸ் பிஸ்கட்டை ஒப்பிட்டுப் பார்த்த பரிசோதனைகளில் தெள்ளத் தெளிவாக நிரூபிக்கப்பட்டுவிட்டது: வைட்டமின் சத்திலும், மொத்த போஷாக்குத் தன்மையிலும் உயர்ந்தது க்ளுக்கோஸ்-D பிஸ்கட் தான். இனிமைக்கும், சுவைக்கும், மொறுமொறுப்புக்கும், அதிகமாக விரும்பப்படுகிறது. சக்தி வேண்டுமா— க்ளுக்கோஸையும் விட 20 சத விகிதம் அதிக சக்தியைத் தருகிறது க்ளுக்கோஸ்-D. பிரிட்டானியா க்ளுக்கோஸ்-D பிஸ்கட்— தித்திக்கும் சக்தி!
எனவேதான், வேறெந்த க்ளுக்கோஸ் பிஸ்கட்டையும் விட அதிக மக்களைக் கவர்ந்துள்ளது பிரிட்டானியா க்ளுக்கோஸ்-D
BRITANNIA Glucose
BRITANNIA Glucose-D
இப்போது கண்கவரும் புதிய பேக்கிலே
பிரிட்டானியா பிரிட்டானியா பிஸ்கட்டுகள் மிகச் சிறந்தவை
லின்டாஸ்-BBC-GL-19-140 TM

கல்கி



ராக்ஷஸ
மார்கழி 27
○
ஜனவரி 11
1976
○

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

[இப் பகுதியில் பிரசுரிக்கப் புதுமையான கருத்துக்களைக் கொண்ட புதுக் கவிதைகளை வரவேற்கிறோம்.
— ஆசிரியர்]

மதலை கேட்ட மந்திரம்!

"கையில் பிடிபடாமல்
குழந்தை அழுகிறது
கவிதை என்ன வேண்டிக் கிடக்கிறது?"
மாதர் ஆண்டிடும் மனைவி கடிந்தாள்.
"கட்டிக் காக்கத் துப்பில்லை;
கொஞ்சி மகிழவும் வக்கில்லை!
பாய்கிறாளே!" கூறத் தெம்பில்லாமல்
குழந்தையைத் தூக்கிக் கொண்டேன்.
என்னே ஆச்சரியம்!
எனக்கல்ல; அவளுக்கு!
"அழுகை ஓய்ந்து, குழந்தை உறங்க
என்ன மந்திரம் போட்டீர்கள்?
அந்த ரகசியத்தை
எனக்கும் கற்றுத் தரலாகாதா?"
கெஞ்சினள். விண்டுரைத்தேன்:
"பெரிய பெரிய கவிஞர்களே
கவியரங்கில்
என் கவிதையைக் கேட்டுக்
குறட்டை விடுகிறார்கள்
என்றால்
இந்தக் குழந்தை
எம்மாத்திரம்?"

— குறும்பன்




சமையலுக்குப் பெருந்துணை
ஓய்வில்லாத தாய்மார்கள் சுவையான சமையல் செய்ய சுலபமான வழி! இந்த 3 பெருந்துணைகளைப் பின்பற்றி, பல்வேறு இன்பமூட்டும் தின்பண்டங்களைத் தயாரித்து மகிழுங்கள்!
பிரவுன் & போல்ஸன்
கார்ன்ஃப்ளவர்
சமோசா,
ஆகியவற்றை
அதிமெல்லியதாகவும்
மொரமொரப்பாகவும்
ஆக்குகின்றது.
குழைவான
சுவைமிகு சூப், கிரேவி
ஆகியவற்றைக்
கெட்டியாகத்
தயாரிக்க
உதவுகிறது.
Brown & Polson
Cornflour
பிரவுன் & போல்ஸன்
வெரய்டி
கஸ்டர்டு பவுடர்
6 இனிமையான
சுவை வகைகள்!
குடும்பத்தினரை
மகிழ்விக்க
வீட்டிலேயே
புடிங், பாயசம்,
ஜெல்லி ஆகிய பல்வேறு
இன்சுவையுள்ள
பண்டங்கள் தயாரிக்க
சாலச் சிறந்தது.
6
Brown & Polson
ரெக்ஸ்
பேகிங் பவுடர்
கேக், பிஸ்கோத்து,
பக்கோடா, பூரி,
குலாப் ஜாமூன்
ஆகியவற்றை
சுவைபட அதி
மென்மையாகத்
தயாரிக்க
உதவுகிறது.
சிறிதளவே
சிறப்பாகச் செய்து
முடிக்கிறது!
REX
BAKING POWDER
OBM 5457 TAM
பிரவுன் & போல்ஸன்
மற்றும் ரெக்ஸ்
தரமுயர்ந்த தயாரிப்புகள். அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு பக்குவப்படுத்தப்பட்டவை—கிடைப்பனவற்றிலேயே சிறந்தவை.
கார்ன் பிராடக்ட்ஸ் கோ.
(இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ்,
எச். சோமானி மார்க,
பம்பாய் 400 001.

இரண்டு மகாநாடுகள்

கல்கி

மலர் 35

இதழ் 24

இன்னும் ஒரு வருஷத்துக்குத் தேர்தல் இல்லை என்று சண்டிகாரில் கூடிய புது காங்கிரஸ் மகாநாடு கூறிவிட்டது. அரசே முடிவு எடுத்துவிட்டது போல்தான்.

நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்தாலும் எதிர்க் கட்சித் தலைவர்கள் பலரைக் கைது செய்ய நேர்ந்தாலும் அவை மனவருத்தத்துடன் எடுக்கப்பட்ட தவிர்க்க முடியாத நடவடிக்கைகளே என்றும் தாம் ஜனநாயகத்தில் அசைக்க முடியாத பற்றுள்ளவரே என்றும் உலகுக்கு நிரூபிக்கக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பைப் பிரதமர் ஓராண்டுக்கு ஒத்திப் போட்டிருக்கிறார். தேசத்தில் இப்போதுதான் கடமை உணர்ச்சி பரவி வருகிறது, சுருசுருப்புக் காண்கிறது, பொருளாதாரம் புத்துயிர் பெறத் தொடங்கியிருக்கிறது; எனவே இந்த நிலை இன்னும் கொஞ்ச காலம் நீடிக்கட்டும்; அவசரப்பட்டு மறுபடியும் தேர்தல் களம், வாய்ச் சண்டை என்று ஆரம்பித்து மக்களின் சக்தியைச் சிதற அடித்து விடவேண்டாம் என்று அவர் கணக்குப் போட்டிருந்தால் தவறில்லை.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்தைத் தொடர்ந்து மேலும் ஓராண்டு இயங்கச் செய்யலாம் என்று முடிவெடுத்த பின் அதே நியாயப்படி இயல்பாகத் தமிழகத்தின் சட்டமன்றத்தையும் இயங்க விடுவதுதான் சரியாகும்.

ஒவ்வொரு ஜனநாயகத்திலும் இரண்டு அம்சங்கள் முக்கியமானவை. ஒன்று சட்டத்தின் ஆட்சி; மற்றது தர்மத்தின் ஆட்சி. சட்டத்தின் ஆட்சியை நிர்வகிப்பன நீதிமன்றங்கள். தர்மத்தின் ஆட்சியை நிர்வகிப்பது மனச்சாட்சி. சட்டத்தின் ஆட்சியில் முறையீடு உண்டு; சுப்ரீம் கோர்ட் வரை போகலாம். தர்மத்தின் ஆட்சிக்கு மனச்சாட்சியே ஆரம்பம், முடிவு எல்லாம்.

தமிழகத்தில் சட்டமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி ஆட்சியைக் கொணரச் சட்டம் இடம் தரலாம்; ஆனால் தார்மிகப் பண்பு அதற்கு இடம் தரவில்லை. இந்த நோக்கில் பிரதமருக்குத் தந்தி அனுப்பச் சொல்லி மக்களுக்குக் கோவை மகாநாட்டில் முதல்வர் விடுத்துள்ள வேண்டுகோள் முக்கியத்துவம் பெறுகிறது.

எப்படியாவது தி. மு. க. அரசைப் பதவியிலிருந்து நீக்குவதே காரியம் என்ற சங்கல்பத்துடன் தமிழக புது காங்கிரஸ் உறுப்பினர்கள் சண்டிகாரில் ஏதேதோ குற்றச்சாட்டுக்களை அடுக்கினார்கள். நெருக்கடி நிலையிலும் வதந்திகளைப் பரப்ப அவர்கள் மட்டும் தனி உரிமை பெற்றுள்ளார்கள் போலும்! குஜராத் அமைச்சரவையும் இப்படியே தாக்குதலுக்கு ஆளாகியது. நபது முதல்வரும் குஜராத் முதல்வரும் சளைக்காமல் பதில் கூறியது பெரிதில்லை; சினந்து சீறாதது தனிச் சிறப்பு.


இதே சண்டிகார் புதுக் காங்கிரஸ் மகாநாட்டில் அரசியல் சாஸனத்தைத் திருத்த மக்களின் ஆணையை முதலில் கோரிப் பெறுவேன் என்று ஸ்ரீமதி இந்திரா கூறியுள்ளார்.


ஏற்கெனவே செய்யப்பட்ட ஏராளமான திருத்தங்களுக்கு மக்களின் ஒப்புதலை வாக்கெடுப்பு நடத்தியா பெற்றார்கள்? இப்போது என்ன அவசியம் நேர்ந்தது? என்ற கேள்வி எழுகிறது.

ஏற்கெனவே செய்யப்பட்ட திருத்தங்களுக்கு அதிகமாக அடிப்படை உரிமைகள் பலவற்றைப் பாதிக்கும் திருத்தங்களைச் செய்ய ஆட்சியிலுள்ளோரின் தயக்கத்தை இது உணர்த்துகிறது. இந்தத் தயக்கமும் மக்களின் உரிமைகளை அனுமதியின்றிப் பறிக்க அஞ்சுவதும் நல்லதே.

ஆனால் மக்களின் ஒப்புதலைப் பெறுவதென்றால் என்ன? எப்படிப் பெறப் போகிறார்கள்? இன்னின்ன மாறுதல்களைச் செய்யப் போகிறோம் என்று விவரித்து அதற்கு அனுமதி தாருங்கள் என்று கோரலாம். அல்லது பொதுவாக, நாட்டு நலனுக்கு உகந்த மாறுதல்களை அரசியல் சாசனத்தில் செய்ய ஒப்புதல் அளியுங்கள் எனலாம். இந்த இரு ஏற்பாடுகளுமே இந்திய மக்களுக்கு ஏற்றதல்ல. ஏனெனில் நமது மக்களில் பெரும்பாலோர் இன்னமும் எழுதப்

தமிழ்த்திரு நாட்டினைப் பெற்ற : எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்


இப்ப இது பாருங்களேன்.....
மங்களம்
காங்கி ரஸ்


மத்திய அரசு
மறைத்து வைத்த வருமானம்
அதிக வரி
பலே! ஆனால், வேர் இருக்கும் வரை.....



ஆசாரியர் யார்?

We expect a Certain guidance from Baba.

आचार्यों का अनुशासन स्वीकारो।

आचार्यों का निर्णय मानो।

आचार्य राजगोपालाचारी से आरंभ करो। वे जीवित हैं।

ஆசாரிய வினேபாபாவே அவர்கள் மௌன விரதத்தை முடித்த பொழுது தமிழன்பர்கள் சிலர் அவரைக் காணச் சென்றிருந்தார்கள். நாடு போகும் நிலையை எண்ணிக் கவலை தெரிவித்த அவர்களுக்கு பாவே அவர்கள் எழுத்து மூலம் தெரிவித்த பதில் :

''ஆசாரியர்களின் ஒழுங்கு முறைகளை நிலைநாட்டுங்கள்; ஆசாரியர்களைக் கூட்டுங்கள்.''

''ஆசாரியர்கள் என்று யாரைக் குறிப்பிடுகிறீர்கள் ?''

''ஆசாரியர்களா? ராஜகோபாலாச்சாரியிலிருந்து தொடங்குங்கள்!''

''அவர் உயிருடன் இல்லையே!''

''அவர் உயிருடன் இருக்கிறார்.''

உறுதியோடு எழுதிக் காட்டிய வினேபாவின் கருத்து, நாடு நலம் பெற ஸ்ரீ ராஜாஜியின் கொள்கைகளே உயர்ந்தவை என்பதைத்தானே எடுத்துக் காட்டுகிறது!

படிக்கத் தெரியாதவர்களாகவோ அல்லது அரைகுறைக் கல்வியுடையவர்களாகவோதான் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தங்களுக்கு உள்ள அடிப்படை உரிமைகள் என்னென்ன என்றுகூடத் தெரியாது. நாளைய சாப்பாட்டுக்கு வழி என்ன என்பதுதான் அவர்களுக்குத் தலைபோகிற பிரச்னை. எனவேதான் சென்ற தலைமுறையைச் சேர்ந்த நமது அறிஞர்கள் மக்களுக்கு அடிப்படை உரிமைகள் பல வழங்கி, அவற்றில் யாரும் கை வைக்கக் கூடாது என்றும் ஏற்படுத்தினார்கள்.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் அதன் மூலம் மக்களின் சுபிட்ச வாழ்வுக்கும் நமது அரசியல் சாசனம் தடையாக இருக்கிறது என்று கூறுவது அபத்தம். நம்முடைய கையாலாகாத்தனத்துக்கு அதன் மேல் பழி போடுவதாகத்தான் அர்த்தம்.

நம்முன் உள்ள முக்கிய பிரச்னை அரசியல் சாஸனத்தை மாற்றுவது அல்லது புதுப்பிப்பது அல்ல; தேச சுபிட்சமே. அதனைத் துரிதமாக அடைவதற்கு ஏற்ப ஆள்வோரின் கொள்கைப் பிடிவாதம் தளர்ந்து யதார்த்தப் போக்கில் புது வழிகள் காண வேண்டும்.

ஆவடி காங்கிரஸில் ஆரம்பமாயிற்று சோஷலிஸ கோஷம். இந்த நாள்வரை அதற்கு என்ன அர்த்தம் என்று காங்கிரஸ்காரர்களுக்கே புரியவில்லை. இன்றளவும் குழப்பம் நிலவுவதை இப்போது நடந்த மகாநாட்டில் ஸ்ரீமதி இந்திராவே கூறியுள்ளார். இத்தகைய இருபதாண்டு குழப்பத்துக்கு இன்றேனும் முடிவுகட்டி ராஜாஜி காட்டிய சுதந்திரப் பாதையில் அடியெடுத்து வைத்தால் அரசியல் சாசனம் தடையல்ல, கற்பகத் தரு எனக் காண்போம்.

அதனை வெட்டிவிட வேண்டாம்.


ராஜாஜி சிந்தனை

ஒரு செயல் இரு விளைவுகள்

ஒவ்வொரு செயலுக்கும் இரண்டு பலன்கள் உண்டு. மது அருந்ினால் மயக்கம் உண்டாகிச் செய்யத் தகாத காரியங்களைச் செய்து விடுகிறோம். அது மட்டுமன்று. மறுபடியும் அருந்த வேண்டும் என்ற ஆவலும் உண்டாகிவிடுகிறது. மயக்கம் தெளிந்துவிடும். ஆனால் இந்த ஆவல் தீராது. இதுவே மதுபானம் அளிக்கும் சாகவதத் தண்டனையாகும்.

காப்பி குடிக்கிறீர்கள். வயிறு கெட்டுப் போகிறது. அதுமட்டுமன்று. காப்பியை மறுபடியும் குடிக்க வேண்டும் என்ற ஆவல் உண்டாகிறது. அப்படியே காப்பி குடிக்கும் வழக்கம் ஏற்பட்டுவிடுகிறது. அந்த நோயைக் குணப்படுத்த முடியவில்லை. ஆகவே கர்மம் என்ற நியதியை அறிந்துகொள்ள வேண்டுமானால் ஒவ்வொரு செயலுக்கும் இந்த விதமாக ஏற்படும் இரண்டு விளைவுகளையும் அறிந்துகொள்ள வேண்டும். காப்பிக் குடிப் பழக்கத்தை ஒழிக்க வேண்டுமானால் அதற்குப் பதிலாக வேறொன்று குடிக்கும் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். அதுபோல் தீய செயல் செய்வதை நிறுத்த நல்ல செயல் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

— சமயம் என்ற கட்டுரையில்



அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை

கோடி அர்ச்சனை

நாடு வளம்பெற, மக்கள் நல்வாழ்வு பெற்று மகிழ, அறம் தழைக்க, நல்லாட்சி நிலைபெற, எல்லா உயிர்களும் இன்புற்று வாழ அருள்மிகு மீனாட்சி அம்மனுக்கு கோடி அர்ச்சனை, வரும் 7-12-1975-ம் தேதி முதல் நடைபெறுகிறது. அன்பர்கள் அனைவரும் இக் கோடி அர்ச்சனையில் பங்கு கொண்டு அன்னையின் திருஅருள் நோக்கும், புனித பிரசாதமும் பெற வேண்டுகிறோம்.

சகஸ்ரநாமம் அர்ச்சனை டிக்கட் 1க்கு ரூ. 15.00
லட்சார்ச்சனை செய்ய ... ரூ. 1,500.00

திரு என். பொன்னப்பன் அவர்கள்
தலைவர், அறங்காவலர் குழு

திரு டி. தியாகையா அவர்கள்.
திரு ஆர். கோபால்சாமி அவர்கள்
திரு கே. எஸ். இராமகிருஷ்ணன்,
எம். எல். ஏ., அவர்கள்
திரு எம். பி. என். பொன்னுச்சாமி அவர்கள்
அறங்காவலர்கள்

ஆர். திருவேங்கடசுவாமி,
உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரி

வையம் பரவிய வைதிக மதம் ②

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

ஹீப்ரு மதங்களில் ஆதம் ஈவாள் கதை (Adam and Eve) என்று கேட்டிருப்பீர்கள். ''அறிவு மரம்'' (Tree of knowledge) என்று ஒன்று இருந்தது. அதன் பழத்தைப் புசிக்கக் கூடாது என்பது ஈசுவராக்ஞை. ஆதம் அப்படியே சாப்பிடாமல் இருந்தான். ஆனால் ஈவ் அதைச் சாப்பிட்டாள். அதன் பிறகு, 'வாழ்வோ, தாழ்வோ அவளுக்கு என்ன சம்பவிக்கிறதோ அதுவே தனக்கும் சம்பவிக்கட்டும்' என்று ஆதமும் அந்தப் பழத்தைச் சாப்பிட்டான் என்பது பைபிள் பழைய ஏற்பாட்டின் (Old Testament) முதல் கதை (Genesis). இது கிறிஸ்து காலத்துக்கும் முற்பட்ட மதத்தில் உள்ள கதை.

யூதர் மதம், கிறிஸ்துவ மதம் இவை இரண்டுக்கு மட்டுமின்றி இஸ்லாத்துக்கும் அடிப்படையான கதைகள், தத்வங்கள் இந்த ஓல்ட் டெஸ்ட்மெண்டில் இருக்கின்றன. சில பெயர்களைப்பார்த்தாலே, இந்த ஒற்றுமை தெரியும். கிறிஸ்துவத்தில் 'ஆப்ரஹாம்' என்றிருப்பது இஸ்லாத்தில் 'இப்ராஹீம்' என்றும், அதில் 'ஸாலமான்' என்பது இதில் 'ஸுலைமான்' என்றும், ஒன்றில் 'டேவிட்' என்பது இன்னொன்றில் 'தாவூத்' என்றும் இருக்கும். அவற்றுக்குள் உள்ள ஒற்றுமை ஒரு பக்கம் இருக்கட்டும். நான் சொல்ல வந்தது எல்லாவற்றுக்கும் வேத அடிப்படை இருக்கிறது என்பதே.

நம் உபநிஷத் தத்துவங்களில் ஒன்றுதான் மேலே சொன்ன ஆதம் - ஈவாள் என்ற கதா ரூபமாயிருக்கிறது. அப்படி ஆகும் போது, காலம், தேசம் இவற்றின் மாறுபாட்டால் குழறுபடியும் உண்டாகியிருக்கிறது — மூல தத்வமே மறைந்து போகிறாற்போல்.

உபநிஷத்தில் என்ன சொல்லியிருக்கிறது? 'பிப்பல மரத்தில் இரண்டு பட்சிகள் இருக்கின்றன. ஒன்று பிப்பலத்தைச் சாப்பிடுகிறது: இன்னொன்று சாப்பிடாமல் · மற்றதைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறது' என்று முண்டக உபநிஷத்து சொல்லுகிறது. சரீரம் தான் அந்த விருட்சம். அதில் ஜீவாத்மாவாக ஒருத்தன் தன்னை நினைத்துக்கொண்டு, விஷயாநுபவங்கள் என்ற பழத்தைத் தின்று கொண்டிருக்கிறான். இவன் ஒரு பட்சி. இந்தச் சரீரத்திலேயே பரமாத்மா இன்னொரு பட்சியாக இருக்கிறான். அவன்தான் ஜீவனை ஆட வைக்கிறவன். ஆனாலும் அவன் ஆடுவதில்லை. சர்வ சாட்சியாக அவன் ஜீவனின் காரியங்களைப் பார்த்துக் கொண்டு மாத்திரம் இருக்கிறான். இந்த ஜீவனுக்கு அவனே ஆதாரமானாலும் அவன் விஷயங்களை அநுபவிப்பதோ — அதாவது பழத்தைச் சாப்பிடுவதோ — அதற்கான கர்ம பலனை அநுபவிப்பதோ இல்லை. இதைத்தான் உபநிஷதமானது பழம் — அதைச் சாப்பிட்ட பட்சி — சாப்பிடாத பட்சி என்று கவித்வத்தோடு சொல்கிறது. 'சாப்பிடுபவன் ஜீவன், சாப்பிடாதவன் பரம்பொருள் — தன்னை ஆத்மாவாகவே உணர்ந்திருப்பவன்.

இந்த ஜீவன்தான் ஹீப்ரு மதங்களில் ஈவ் ஆகியிருப்பது. 'ஜீ' என்பது 'ஈ'யாவது ஒரு வியாகரண விதி. 'ஜ' வரிசை சப்தங்கள் 'ய' வரிசையாக மாறிவிடுவது சகஜம். இப்படித்தான் யமுனா ஜமுனாவாயிற்று. 'யோகீந்திர' என்பது 'ஜோகீந்தர்' என்றாயிற்று. கிறிஸ்தவர்கள் 'ஜோஸப்' என்பது முஸ்லிம்கள் சொல்லுகிறபோது 'யூசப்' என்றாகிறது. 'ஜீவ்' என்பது 'ஈவ்' என்றாயிற்று. 'ஆத்மா' என்பது 'ஆதம்' ஆக மாறிவிட்டது. பிப்பலம் என்பது ஆப்பிள் (apple) என்றாயிற்று. அறிவு விருட்சம் என்பதும் நம் 'போதி விருட்சம்' தான். 'போதம்' என்றால் ஞானம். புத்தருக்கு போதி விருட்சத்தின் கீழ்தான் ஞானம் உண்டாயிற்று என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதானே? (ஆனால் அவருக்கும் முந்தியே அரச மரத்துக்கு போதி விருட்சம் என்ற பெயர் இருந்தது பலருக்குத் தெரியாது.)

உபநிஷதமானது தூர தேசம் ஒன்றில், அதன் கிரமமான அத்யயனமும், கர்மாநுஷ்டானமும் போய் எத்தனையோ காலத்துக்குப் பிற்பாடு மாறி மாறிப் புது ரூபம் எடுக்கிறபோது மூல தாத்பரியம் மாறிப்போயிற்று. ஒருபோதும் விஷயாநுபோகத்துக்கு ஆளாக முடியாத ஆத்மாவும் பழத்தைச் சாப்பிட்டதாக பைபிள் கதை திசை திரும்பிவிடுகிறது. விஷய சுகம் யாவும் அடிபட்டுப் போகிற அறிவை நம்முடைய போதி விருட்சம் குறிப்பிடுகிறது என்றால், அவர்களோ, விஷய சுகத்தைப் பழக்கிற லௌகிக அறிவையே Tree of knowledge என்று சொல்லி விட்டார்கள். ஆனாலும் ஓல்ட் டெஸ்டமெண்ட் காலத்திலேயே இந்த உபநிஷத சமாசாரம் அங்கே இருந்தது என்றால் நம் வேத மதம் ஆதியில் அங்கே இருந்திருக்கிறது என்பதற்கு இதுவே அத்தாட்சியாகிறதோ, இல்லியோ?

ஓல்ட் டெஸ்டமெண்டின் இன்னொரு முக்கியமான கொள்கையும் நம் வேத மதத்தின் ஆதார தத்துவங்களில் ஒன்றாகவே இருக்கிறது. சப்த ப்ரம்மம், நாத ப்ரம்மம் என்றெல்லாம் நாம் சொல்கிறோம். சப்த ப்ரம்ம வாதம் என்றே வியாகரண சாஸ்திரத்தில் ஒன்று உண்டு. 'சப்தமே, நாதமே பிரம்மத்தின் மூலமான வெளிப்பாடு (manifestation); அப்புறம்தான் கண்ணால் பார்க்கிற பிரபஞ்சம் உண்டாயிற்று' என்பது வேதக் கோட்பாடு.

(தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள் ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது.]



குவாலாலம்பூர்: குமுறிய உள்ளமும் குதூகல வெள்ளமும்




போலீஸ் கமிஷனர் குலசிங்கம் சமூக விரோதிகளைப் பிடிப்பதற்காக நெடுஞ்சாலையில் நின்று கொண்டிருந்தார். அவர் கண்கள் பரபரப்புடன் கூர்ந்து நாலா திசைகளிலும் நோக்கியபடியிருந்தாலும் மனம் இன்னும் பத்து நாட்களில் தாம் கேட்கப் போகிற ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் கச்சேரி பற்றியே எண்ணிக் கொண்டிருந்தது. அன்று மாலைதான் அவர் வாங்கிய டிக்கெட் பாக்கெட்டில் இருந்தது. அப்புறம் கிடைக்காமல் போய்விடலாம் என்பதற்காக முன்கூட்டியே வாங்கி விட்டார்.

சாலையில் வரிசையாகச் சில மோட்டார் சைக்கிள்கள் வந்தன. அவரைத் தாண்டிச் செல்கையில் ஒரு மோட்டார் சைக்கிளின் பின்னால் உட்கார்ந்திருந்த சுயவனிடமிருந்த மெஷின் கன் எட்டிப் பார்த்தது. தோட்டாக்களைக் கக்கியது. ஒன்று, இரண்டு, மூன்று என்று பதினொன்று தோட்டாக்கள் குலசிங்கத்தின் உடலில் பாய்ந்தன, உராய்ந்து சென்றன. மோட்டார் சைக்கிள் போய் விட்டது.

கடமையே கண்ணாயிருக்கும் குலசிங்கத்துக்கு இத்தகைய விரோதிகள் இருந்ததிலும் அவர்கள் வன்மம் தீர்த்துக்கொள்ள முனைந்ததிலும் வியப்பில்லை. திடகாத்திரரான குலசிங்கத்தின் மனம் உடலைவிட உறுதியானது. அது ஆஸ்பத்திரியை நாடவில்லை. போலீஸ் நிலையத்துக்குப் போய்க் கடமையாற்றியது! பிறகுதான் குலசிங்கம் மருத்துவ மனைக்குப் போனார்.

ஸ்ரீ சதாசிவம் தம்பதிக்கு இந்த விவரங்களை ராஜலிங்கம்தான் கூறினார். பிறகு சொன்னார்: ''உடலெல்லாம் கட்டுக்களுடன் குலசிங்கம் ஆஸ்பத்திரியில் இருக்கிறார். ஆனால் அவருக்கு அது பெரிதாகப் படவில்லை. 'எம். எஸ். அவர்களின் கச்சேரியைக் கேட்க ஆவலாக டிக்கெட் வாங்கினேனே பயன்படுத்த முடியவில்லையே' என்றுதான் ஏங்குகிறார்!''

சதாசிவம் தம்பதியின் மனம் உருகி விட்டது. ''கவலைப்படாதீர்கள். குலசிங்கம் எம். எஸ். பாட்டை நிச்சயம் கேட்பார்'' என்று உறுதியளித்தார் சதாசிவம். பல்வேறு அலுவல்களுக்கிடையில் நேரம் ஏற்படுத்திக் கொண்டு குவாலாலம்பூரில் சதாசிவம் தம்பதியர் ஸ்ரீமதி ராதாவுடன் குலசிங்கத்தைக் காண ஆஸ்பத்திரிக்குப் போனார்கள். அங்கே கட்டிலின் அருகில் அமர்ந்து ஸ்ரீமதி எம்.எஸ். 'சம்போ மகாதேவா' என்ற தமிழ்ப் பாடலைப் பாடினார். குலசிங்கத்தின் இரும்பு நெஞ்சம் இளகி உருகி ஆனந்தக் கண்ணீராகப் பெருகி வழிந்தது. ஸ்ரீ சதாசிவம் குலசிங்கத்திடம் விடை பெறுமுன் அவரது நீண்ட ஆயுளுக்குப் பிரார்த்தனை செய்வதாகக் கூறித் திருப்பதி மஹாப் பிரசாதமும் ஸ்ரீ காஞ்சி முனிவரின் படமும் கொடுத்தார்.



இந்த நீண்ட முன்னுரையைப் படித்து விட்டு நேயர்களுக்குச் சற்று இருக்கிறதோ என்னவோ, ஸ்ரீபதி ராஜ விசுவநாதன் இடையில் குறுக்கிடக் கேட்டபோது எங்களுக்குத் தோன்றியதை எண்ணி வியக்கலாம். சிரித்துப் போய்விட்டோம். சற்று நேரம் ஒன்றும் பேச முடியாமல் மௌனம் சாதித்துவிட்டுப் பிறகுதான் கேட்டோம்: "குவாலாலம்பூர் நகரைப் பற்றிச் சொல்லுங்களேன்" என்று.

"பகலையிலே நல்ல நேரம். சிங்கப்பூரைப் போல் அத்தனை பரபரப்பைக் காணமுடிய வில்லை. என்றாலும், அயல்நாட்டு உல்லாசப் பயணிகளை அப்படியும் இந்நாட்டில் வளம் பெருக்குவதிலும் மலேசியா போட்டி போட்டுக்கொண்டு வேகமாக முன்னேறி வருகிறது. கேரளா நாட்டைப் போல் மலைநாட்டுப் ஏற்றம், இறக்கம் மிக்க சாலைகள் பல. போக்குவரத்தைச் சமாளிக்க ஒரு வழிப் பாதைகள் ஆகிவிட்டன. எனவே ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் போகக் காலதாமதமும் ரொம்ப ஆகிறது. போதாக் குறைக்கு விமான நிலையமும் நகரிலிருந்து ரொம்பத் தொலைவில் இருக்கிறது. குவாலா லம்பூரிலிருந்து நாங்கள் கிளம்பி விமானத்தில் சிங்கப்பூர் சேர்ந்து, ஜாகையை அடைந்து குவாலாலம்பூருக்கு டெலிபோன் போட்டு நாங்கள் பத்திரமாக வந்து சேர்ந்துவிட்டதைத் தெரிவித்தோம். 'அப்படியா? உங்களை விமான நிலையத்தில் வழியனுப்பிவிட்டு நாங் களும் இப்பத்தான் வந்து வீட்டுக்குள் நுழை கிறோம்' என்று பதில் கிடைத்தது!"

"குவாலாலம்பூர் விமான நிலையம் ரொம்ப அழகானது என்று பெயர் பெற்றதாயிற்றே?"


"வாஸ்தவம். ஆனால் அதனை நன்றாகக் கவனித்துப் பேணி வருவதாகக் கூற முடி யாது. இத்தனை அழகிய கட்டிடத்தை இன் னும் கூட நன்றாக வைத்துக் கொள்ளலாமே என்று தோன்றியது. இதேபோல் நவீனக் கட்டிடக் கலை வடிவங்கள் வேறு பலவும் குவாலாலம்பூரில் பிரசித்தி யடைந்துள்ளன. ஒரு பகுதியைக் கூடச் சம்பிரதாயப் பாணி களை ஒதுக்கிவிட்டு ரொம்ப 'மாட்' ஆக அமைத்திருக்கிறார்கள்."

"இன்னும் என்ன பார்த்தீர்கள் குவாலா லம்பூரில்?"

"உண்மையைச் சொல்லி விடுகிறேன். எங் களுக்கு ஓய்விருந்த நேரத்தில் மழை ஓய வில்லை. மழை ஓய்ந்தபோது எங்களுக்கு ஓய்வில்லை. எனவே அதிகமாகப் பார்க்க முடியவில்லை. ஆனால் மழையின் காரணமாக ஏற்பட்ட விநோத விளைவு ஒன்றைப் பார்த் தோம். அதுதான் பட்டு குகைகள். பட்டு என்றால் பாறை என்று அர்த்தம். இங்கே பாறையில் உள்ள நுண்ணிய விரிசல்கள் வழி யாக மழை நீர் உட்புகுந்து பலவித தாது உப்புக்களை உடைய பாறைகளை அரித்திருக் கிறது. எனவே காலக் கிரமத்தில் குகைகள் பல உருவாகியுள்ளன. பலரக உப்புச் சுவர் களும் இயற்கைத் தூண்களும் விளக் கொளியில் நீலம், சிவப்பு, பச்சை போன்ற நிறங்களில் ஜொலித்து ஒரு விநோத சொப் பன உலகுக்கு வந்து விட்டது போன்ற பிர மிப்பை ஏற்படுத்துகின்றன. இதே குன்றில் உள்ள முருகன் கோயில் மலேசியாவில் 'பத்து மலை' என்பதாக ரொம்பப் பிரசித்தி. பட்டு என்பதே பத்து ஆயிற்று. தைப் பூசத் தன்று இங்கே கூட்டம் நெரியும். குவாலா லம்பூரிலிருந்து வடக்கே ஆறு மைல் தூரத்தில் உள்ளது இக்குன்று."

"சிங்கப்பூரில் சீனர்கள்தான் அதிகம் என்றீர்கள். மலேஷிய மக்கள் எப்படியோ?"





✻ சென்னை விமான நிலையத்தில் வழியனுப்பு வைபவம். ஸ்ரீ சதாசிவம் ஸ்ரீமதி எம். எஸ். ஆகி யோருடன் திருவாளர்கள் வேதாஜு, ரங்கப்பா, சீர்காழி கோவிந்தராஜன், அவர் மகன், எஸ். டி. சுந்தரம், அமுது வேதாசலம் ஆகியோர்.

✻ நெடிதுயரும் மாளிகைகளும் வழுவழுப்பான சாலைகளும், குவாலாலம்பூர்-ன் எழில்தோற்றம்.

✻ பட்டு குகைகளுள் ஒரு பகுதி.

✻ ஸ்ரீமதி எம். எஸ். — ஸ்ரீ ராஜலிங்கம். பின்னணி யில் ஸ்ரீ ஆனந்தநாதன், ஸ்ரீ சதாசிவம்.

✻ குவாலாலம்பூரில் நவீன பாணியில் அமைந்த பகுதி.

''இங்கே மலாய்க்காரர்கள்தான் அதிகம். இவர்கள் பேசுவது மலாய் மொழியானாலும் எழுதுவது ஆங்கில எழுத்தில்தான்! முன்பெல்லாம் உருது முறையில்தான் வலமிருந்து இடமாக எழுதி வந்தார்கள். சமீபகாலமாக அதைக் கைவிட்டு மலாய் மொழியைப் பள்ளிக்கூடங்களில் ரோமன் எழுத்துக்களிலேயே இடமிருந்து வலமாக எழுதப் படிக்கக் கற்றுத் தருகிறார்கள். ஆங்கிலம், மலாய் ஆகிய இரு மொழிகளையும் எளிதில் பயில இது சௌகரியமாம். மலேசியாவில் தமிழில் கற்பிக்கப் படுவதில்லை. தமிழ் பயில வேணுமானால் ராஜலிங்கம் நடத்துவது போன்ற தனியார் பள்ளியில் சேர்ந்தால்தான் உண்டு.''

''மொழிப் பிரச்னை மட்டும் எங்கே போனாலும் ஆளை விடாது போலிருக்கிறதே !''

''அதுவும் மலேசியாவில் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். 'இவர் என்ன சீனர்தானே? தமிழ் எங்கே தெரியப் போகிறது' என்று நினைத்தால் ஏமாந்துவிடுவோம் ! பினாங்கில் எங்களைப் புகைப்படம் எடுத்த ஒரு சீனக் கலைஞர், 'மாமி! கொஞ்சம் சிரிங்கோ!' 'தயாரா?' என்றெல்லாம் கேட்டு எங்களை வியப்பில் ஆழ்த்தினார். அப்புறம்தான் இவரைப் போல் தமிழ் அறிந்த சீனர்கள் ஏராளமாய் இருப்பதாகத் தெரியவந்தது.

''சிவராஜ் என்று ஒரு இளைஞர். காஞ்சிப் பெரியவர்களிடம் இவருக்கு ரொம்ப பக்தி. அம்மாவின் பாட்டில் உயிர். அவரிடம் கொஞ்சம் பழகின பிறகுதான் அவரது உண்மைப் பெயர் சார்ல்ஸ் ராஜ் என்பதும் அவர் ஒரு கிறிஸ்துவர் என்பதும் புரிந்தது. இவர் புகை பிடிப்பதோ, புலால், மது அருந்துவதோ இல்லை. எனவே சார்ல்ஸ் ராஜை நண்பர்கள் வேடிக்கையாக சிவராஜ் என்று அழைக்க ஆரம்பித்தார்கள். அந்தப் பெயரே நிலைத்து விட்டது. பெருஞ் செல்வந்தர் இவர்.''

''வேறு பல முக்கியஸ்தர்கள், பிரபலஸ்தர்களையும் சந்தித்திருப்பீர்களே ?''

''ஓ ! சட்டத் துணை மந்திரி திரு ஆதி நாகப்பன், தகவல் செய்தித் தொடர்பு மந்திரி திரு மாணிக்கவாசகம் ஆகிய இருவர் இல்லங்களிலும் அப்பா அம்மாவுக்கு விருந்துபசார வைபவங்கள். இது போன்று உபசரிப்பவர்களுக்கு நன்றி கூறும் விதமாக அம்மா அங்கங்கே இரண்டு பாட்டுக்களைப் பாடி விடுவாள்.

''ஆயிரம் வார்த்தைகள் பேசினாலும் ஏற்படுத்த முடியாத திருப்தியை இந்த இரண்டு பாட்டு அவர்களுக்கு உண்டாக்கி விடும். இவர்களைப் போன்ற பெரிய மனிதர்கள் 'துன்' அல்லது 'தத்தோ' என்ற கௌரவப் பட்டம் பெறுகிறார்கள். அவர்களது துணைவியர்களை 'தத்தின்' என்கிறார்கள். நம் நாட்டில் 'ஸர்' பட்டம், 'லேடி' என்கிற கௌரவம் எல்லாம் இருந்ததல்லவா ? அந்த மாதிரி. பிரதமரின் பெயர் அப்துல் ரஸாக். ஆனால் துன் அப்துல் ரஸாக் என்று எழுதுகிறார்கள்.''

''குவாலாலம்பூரில் பத்திரிகைகள் பேட்டி இருந்திருக்குமே ?''

''பத்திரிகை, டெலிவிஷன், ரேடியோ போன்ற எல்லாப் பேட்டிகளும் இருந்தன. டெலிவிஷன் பேட்டி நடத்தியவர் பய்ரோஜி நாராயணன். இவர் திரைப்பட நடிகர் ரவிசந்திரனின் சகோதரர்! பேட்டியின்போது ஓரளவு நுணுக்கமான கேள்விகளைக் கேட்டது மகிழ்ச்சியாயிருந்தது. உதாரணத்துக்கு ஒன்று சொல்கிறேன்.'' உங்கள் பாட்டில் நாதஸ்வரப் பிடிகள் ரொம்ப அதிகமாய் இருக்கிறதே, அது எப்படி ?'' என்று ஒருவர் வினவினார். நம் கர்நாடக இசைக்கே ஓர் ஆதார வாத்தியமான அதனைப் பல மேதைகள் திருவிழாக்களிலும் உற்சவங்களிலும் வாசிக்கக் கேட்கும் சந்தர்ப்பங்கள் சின்ன வயதிலேயே தனக்கு ஏற்பட்டதை அம்மா விளக்கினாள். சிங்கப்பூரி தமிழ் முரசு ஆசிரியர் இசைஞானம் தேர்ந்த சங்கீத ஞானம் உடையவர் என்பதை அவர் விமரிசனங்கள் புலப்படுத்தின.''

''இத்தனை ஆர்வம் இருப்பதைப் பார்த்தால் கர்நாடக இசைக் கலைஞர்கள் அங்கேயே பலர் இருக்கலாம் என்று தோன்றுகிறதே?''

''ரொம்பப் பேர் இருக்கிறார்கள். குவாலாலம்பூரில் சங்கீத அபிவிருத்தி சபை என்ற பெயரில் ஓர் இசைப் பள்ளியே நடக்கிறது. இது தவிர மேற்படி சங்கீத அபிவிருத்தி சங்கத்தில் படித்த மாணவிகள் சங்கம் ஒன்று தனித்து இயங்குகிறது ! ரிஷிகேசம் சிவானந்தா ஆசிரமத்திலிருந்து வந்திருந்த சுவாமி சாந்தானந்தா என்பவர் பஜனை பத்ததிகளில் இவர்களில் பலருக்கும் ஆர்வத்தை வளர்த்து வைத்திருக்கிறார்.''

''கச்சேரிக்குச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் எல்லாம் எப்படி ? திருப்திதானே ?''

''நாங்கள் அடைந்த திருப்தியை அம்மாவின் பாட்டைக் கேட்டுக் குவாலாலம்பூர் மக்கள் அடைந்த மன நிறைவோடுதான் ஒப்பிடலாம். விமானத்தைவிட்டு இறங்கியதுமே மங்கல வாத்தியம் கேட்டது. எங்களைத் தருவித்த திரு ராஜலிங்கம் குவாலாலம்பூரில் தமது மூத்த சகோதரி திருமதி விக்னேச்வரி ஸோமாஸ்கந்தன் வீட்டில் கொடுத்த வரவேற்பு ராஜ மரியாதையாய் இருந்தது! பூர்ண கும்பம் கொடுத்து, ஒவ்வொருவரையும் மலர் மாலைகளால் கௌரவித்துடன், கேட்டிலிருந்து வீட்டுக் கூடம் வரை வெண்பட்டு விரித்து அதன் மேல்தான் நடந்து வரச் செய்தார் ! அம்மா அம்மாளை நடத்தியது போலவே இசைக் குழுவைச் சேர்ந்த ஒவ்வொருவரையும் கவனித்துக் கொண்டார். அவர் அளித்த டின்னர் விருந்துபசாரத்துக்குப் பல்வேறு நாட்டுத் தூதர்களும் நகரின் பிரபலஸ்தர்கள், முக்கியஸ்தர்களும் ஏராளமாய் வந்திருந்தார்கள்.''

ராஜலிங்கத்தின் சகோதரிகள் ஐந்து பேர். ஒவ்வொருவரும் ஒரு ஈசுவரி ! விக்னேசுவரி, மகேசுவரி, லோகேசுவரி, ராஜேசுவரி, கோமடீசுவரி என்று பெயர். அவர்களை அறிமுகப்படுத்தியதும், ''தனித் தனியே அப்படி அழைக்கலாம். மொத்தமாக எல்லாரையும் கூப்பிட வேண்டியிருந்தால் சர்வேசுவரி என்று அழைப்பீர்களாக்கும் !'' என்று ஒரு போடு போட்டார், இசைக் குழுவினருடன் சென்றிருந்த கோகுலம் பத்திரிகை ஆசிரியர் திரு ஆத்மநாதன்.

இதனை ஸ்ரீமதி ராதா கூறக் கேட்டபோது நமக்கே சிரிப்பு பீறிட்டு வந்தது என்றால் அங்கே குதூகலம் எப்படிப் பொங்கிப் பிரவகித்திருக்கும் என ஊகிக்கலாம்.

(அடுத்த இதழில் : பினாங், மலாக்கா)

காணக் கண் கோடி வேண்டும்...

பொங்கல் சிறப்புத் தள்ளுபடி

20%
பருத்தித்
துணிகள் மீது

10%
பட்டுத் துணிகள்,
ரெடிமேடுகள் மீது



மிக நேர்த்தியான,
உயர்தர நூல்
புடவைகள்,
பட்டுப் புடவைகள்.
இந்தியாவின் பல
பாகங்களிலிருந்து
தருவிக்கப்
பட்டவை.
கல்யாண சீசனைக்
கட்டியம் கூறும்
சேலைகள்.

• ஞாயிற்றுக் கிழமை
கடை உண்டு.

**ஹேண்ட்லூம்
ஹவுஸ்**

9, ரத்தன் பஜார்,
சென்னை - 600 003

சென்னை, சுற்றுலாப்
பொருட்காட்சியில்
ஹாண்ட்லூம் ஹவுஸ்
பெவிலியனுக்கு வாருங்கள்.


ADWAVE/HH/393 TAM

சேரமான் காதலி

கண்ணதாசன்

அத்தியாயம் 7

ராஜயோகி



பத்மாவதி புறப்பட்டு விட்டதைக் கண்டதும், ''வேறு கேள்விகள் இல்லையா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் கோதை.

''இப்போது நானே ஒரு கேள்வியாக நிற்கிறேன்'' என்று கூறிவிட்டு வெளியேறிய பத்மாவதி தேரில் ஏறி உட்கார்ந்தாள்.

மார்த்தாண்ட வர்மன் அவளது வருகைக்கு எந்தவித புதுவித அர்த்தத்தையும் காணவில்லை. ஆதலால் அவளிடம் வேறு எதையும் கேட்கவில்லை.

தேர் மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது.

'' எங்கே போகட்டும் ?'' என்று கேட்டான் சாரதி.

''எங்கே குழப்பங்கள் இல்லையோ, எங்கே நிம்மதி இருக்குமோ அங்கே போ!'' என்று அலுப்போடு சொன்னாள் பத்மாவதி.

தேரோட்டி நேரே அரசரின் இருக்கைக்குத்தேரைக்கொண்டு போய் நிறுத்தினான்.

அதுவரையில் ஏதோ சிந்தனையில் இருந்த பத்மாவதி திடீரென்று விழித்தவள் போல், ''ஏன் இங்கே கொண்டு வந்து நிறுத்தினாய்? நான் அரசரைப் பார்க்க விரும்பியது உனக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள்.

''தேவி, இங்கேதான் குழப்பங்கள் இல்லை; இங்கேதான் நிம்மதி இருக்கிறது!'' என்று விளக்கினான் சாரதி.

அதிர்ச்சியுற்ற பத்மாவதி 'அந்தக் குழப்பத்தை உண்டாக்க நான்தான் பிறந்திருக்கிறேன்' என்று தனக்குள்ளே முணுமுணுத்தபடி கீழே இறங்கினாள்.

கால்கள் நடுநடுங்க, நெஞ்சம் படபடக்கக் கையிலே ஓலையோடு அரசிருக்கைக்கு உள்ளே நுழைந்தாள்.

அங்கே பெரும் கூட்டம் கூடியிருந்தது. அரசர் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தார். வழிபாடுகள் முடிந்துவிட்ட நிலை.

அரசரின் அருகே நின்ற நாராயண நம்பூதிரி சில கோயில்களுக்கான புதிய நிபந்தங்களை அறிவித்துக் கொண்டிருந்தார். அதோடு சில ஊழியர்களுக்கான மானியங்களும் அறிவிக்கப்பட்டன. அரசர் பத்மாவதியிடம் கூறியிருந்தபடி, பத்மாவதிக்கும், ரவிவர்மனுக்கும் இரண்டு கிராமங்கள் மானியமாக அறிவிக்கப்பட்டன. அதைக் கேட்ட வண்ணம் தலைகுனிந்து நின்றாள் பத்மாவதி. பின்னாலேயே மார்த்தாண்ட வர்மனும் மெல்லிளங்கோதையும் வந்து நின்றார்கள். 'இந்த நேரத்தில் அரசரோடு தனியாகப் பேசுவது எப்படி?' என்று தயங்கினாள் பத்மாவதி.

அரசர் புறப்படச் சித்தமானார்.


ஒவ்வொருவரும் அவரது காலைத் தொட்டு நமஸ்கரித்தார்கள். பிறகு ஒரு தங்கத் தாம்பாளத்தில் வெற்றிலை பாக்கு பழம் புஷ்பம் தேங்காய் வைத்து அரசரிடம் கொடுத்தார்கள். அரசர் ஒவ்வொன்றாக வாங்கித் தன் கூட வர இருந்த அடியவர்களிடம் கொடுத்தார்.

பத்மாவதி திடீரென்று ஏதோ நினைவுக்கு வந்தவளாய்த் தானும் ஒரு தாம்பாளத்தை வாங்கிப் பழங்கள், புஷ்பங்களுக்கு அடியில் மடியில் இருந்த ஓலையை மறைத்து வைத்து அரசரிடம் வழங்கினாள். அரசர் அதைக் கையிலே வாங்கிக் கொண்டார். ஓலையைக் கவனிக்காமல் அடியவர்களிடம் தாம்பாளத்தை நீட்டினார். யாரிடமும் பேசாத அரசர், ஏன் மார்த்தாண்ட வர்மனிடம் கூடப் பேசாத அரசர் பத்மாவதியிடம் பேசினார். ''உன் கணவனைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்'' என்பதே அது.

அரசரின் பல்லக்குப் புறப்பட்டபோது, மார்த்தாண்ட வர்மனும், கோதையும் கதறி அழுது விட்டார்கள்.

பத்மாவதி மூர்ச்சித்து விழுந்தாள்.

எல்லாவற்றையும் கவனித்த நாராயண நம்பூதிரி இன்னொன்றையும் விசேஷமாகக் கவனித்தார். பாஸ்கர ரவிவர்மன் வழியனுப்பு விழாவுக்கு வரவில்லை என்பதுதான் அது. அவரது வலது கை ஆட்காட்டி விரல் ருத்திராட்சத்தை மேலும் ஒரு தட்டுத் தட்டிற்று.



இது திருவரங்கம்.

நான்கு புறமும் மதில் சுவர்கள் எழுப்பி நடுவிலே கோவில் கண்டு பள்ளி கொண்டிருக்கின்ற திருவரங்கன். படுத்த படுக்கையைச் சுருட்டாமலேயே பாராளும் அரங்கன், படுக்கை கொள்ளாமல் சுற்றிக்



கொண்டிருக்கும் மன நோயாளிகளைக் கவர்ந்து இழுக்கிறுன்.

குலசேகர ஆழ்வார் மன நோயாளி அல்ல; சொல்லப் போனுல் மனத் தெளிவு பெற்ற ஞானி.

பகைவர்கள் கையில் மணி முடியை இழந்தவர்கள் கூட மாறு வேடத்தில் அரண்மனையையே சுற்றிக் கொண்டிருக்கும் காலத்தில், இருந்த மகுடத்தையும் எடுத்து வைத்துவிட்டு வருகின்றவர். திருவரங்க நகரமே எழுச்சி கொண்டிருந்தது. உற்சவ காலத்திலும் கூடாத பெருங் கூட்டம் அங்கே கூடியிருந்தது.

'கோழியர்கோன்' எனப் பெயர் பெற்ற உறையூர்ச் சோழன் அவரை வரவேற்கத் திருவரங்க வாசற் சாலையில் காத்திருந்தான்.

கோவிலின் கோட்டை வெளியில் ஏராளமான பெண்கள் கூடியிருந்தார்கள். அவர்கள் முன்னிலையிலே ஒரு மேடை போடப்பட்டிருந்தது. அந்த மேடையில் இருந்தபடியே ஞானியார் ஒருவர் ராமாயணத்துக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தார்.

''தர்மத்தின் மீது நம்பிக்கை உள்ளவனுக்குப் பதவி எதற்கு? அவன் எது நடக்கவேண்டும் என்று விரும்புகிருனே, அதை யாராவது நடத்திக் காட்டுவார்கள்.

''யாராவது என்றுல் யார், யார்? அவர்கள் இறைவனுடைய பிரதிபிம்பங்கள்.

''அரண்மனையில் இருந்தவரை ஸ்ரீ ராமனுக்கு இருந்த தம்பியர் மூன்று பேர். ஆனுல் அவன் பதவி இழந்த பிறகு அவனுக்குக் கிடைத்த சகோதரர்கள் மேலும் மூன்று பேர். பதவியில் அவன் அமர்ந்திருந்தால் அவர்களை எப்படி அவன் கண்டுகொள்ளப் போகிறுன்? நல்லவனுடைய இழப்பு நன்மையிலேயே முடியும். இழந்தது போல் தெரிவதெல்லாம் ஏதோ வரப்போவதற்கு அறிகுறி.

''நல்லவன் படகில் போகும்போது, துடுப்பு தண்ணீருக்குள் மூழ்கிவிட்டால் நதியே திசை மாறி அவன் சேர வேண்டிய இடத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விடும்.

''பதவி துறந்த ஸ்ரீராமனுக்குத் தேவைப்பட்ட போதெல்லாம் உதவி கிடைத்தது.

''கங்கையைக் கடக்க நினைந்தான்; உடனே குகன் கிடைத்தான். அடுத்து அங்கதன் கிடைத்தான். இலங்கையில் சீதையைக் கண்ட பின் போருக்கு முன்னுலேயே விபீடணன் கிடைத்தான். போர் முடிந்த பின் நாடு கிடைத்தது.

''எதை அவன் இழந்தான்?

''பதினுன்கு வருடங்கள் அவன் காடு சென்றுனே, அதன் மூலம்தான் தர்மத்தின் வெற்றி நிலைநாட்டப் பெற்றது.

''அவனுக்கு முடி சூட்டுவதற்குக் கைகேயி ஒப்புக் கொண்டிருந்தால், சீதையின் கற்பைப் பற்றி யார் அறிவார்? ராமனின் கோதண்ட மகிமை எப்படிப் புலனுகியிருக்கும்?

''பதவி வேண்டாம் என்று சொல்வது எல்லோருக்கும் எளிதன்று. தெய்விக புருஷர்களுக்கே அது இயலும்.

''ஆசை வலயத்தில் கட்டுண்ட மனிதனை ஆட்டிப் படைப்பவை மூன்று. அவை: பதவி, பொருள், பெண்.

''நோயாளி பதவியைத் துறப்பதும், சாகக் கிடப்பவன் பொருளைத் துறப்பதும், அனுபவிக்க முடியாதவன் பெண்ணுசையைத் துறப்பதும் ஆற்றுமையின் விளைவுகள். அனைத்திலும் வல்லவன் அனைத்தையும் துறப்பதே ஆண்மை மிக்க துறவு.

''பரதனுக்காக நாடு இழந்த ராமன் பரதனே வந்து அழைத்தபோது திரும்பிச் சென்றிருக்கலாம் அல்லவா? செல்வது நியாயம்கூட அல்லவா? அந்த நியாயத்தையே கூட அவன் ஏற்றுக் கொள்ளவில்லை. அன்னைக்குத் தந்தை கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதே நியாயம் என்று கருதினுன். தந்தை தான் இறந்து விட்டானே, இனி நாம் பதவியில் இருந்தால் என்ன என்று ஸ்ரீராமன் எண்ணியதில்லை.

''நல்லவனுக்குக் கையெழுத்து தேவையில்லை; தீயவனிடம் கையெழுத்து வாங்கினுலும் பயனில்லை. தர்மம் மனத்திலிருந்தே வருகிறது.

''அது சூழ்நிலைகளால் ஆசை காட்டப்பட்டாலும் மயங்குவதில்லை.

''இத்தனைக்கும் நீ காட்டுக்குப் போக வேண்டும் என்று ராமனிடம் தசரதனு சொன்னுன்? பரதனுக்கே நாடு என்பதும் அவன் சொன்ன வாசகமா? இல்லை; அவன் சொன்னதாகக் கைகேயி சொன்னுள்; அவ்வளவுதான்.

''தந்தையே நேரில் ஆணையிட்டாலும் வாள் தூக்கும் உலகத்தில், தர்மத்தைக் காப்பாற்றியவன் ஸ்ரீ ராமன்.

''ஸ்ரீ ராமனே, கிருஷ்ணன், கிருஷ்ணனே திருமால்; திருமாலே திருவரங்கன்.

''அந்தத் திருவரங்கனைத் தேடி முடி துறந்து வரும் ஒரு மாமன்னரை—ராஜயோகியை நாம் இங்கே சந்திக்க இருக்கிறோம்.''

—ஞானியார் பேசிக்கொண்டிருக்கும் போதே வெளியில் ஆரவாரம் கேட்டது.

(தொடரும்)

உங்கள் அன்னையின் அறிவுரையை நம்புங்கள்



உங்கள் குழந்தை
அழும் போது
உங்கள் பாட்டி
சொன்னதைப் போலவே
உங்களையும்
உபயோகிக்கச் சொல்வார்
உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டரை

100 ஆண்டுகளுக்கும் மேலாக
தாய்க்குலம் நம்புவது



OPCM-1-75 TAM

அதிசயக் கனவு

இரும்புக் கரம்

என் திருமணத்துக்கு இரண்டு மாதங்களே இருந்தபோது என் அன்புத் தந்தை மாரடைப்பினால் இறந்து விட்டார். உயிர் பிரியும் தறுவாயிலும், 'உன் திருமணத்தைப் பார்க்காமலே போகிறேனே' என்று புலம்பிக் கொண்டிருந்தார். பின்வரும் கனவு கண்டபோது நான் மூன்று மாதம் கருவுற்றிருந்தேன்.

கனவில் என் வீட்டு வாயிலில் என் தந்தையின் முகம் தெரிகிறது. அவர் கண்களினின்றும் கண்ணீர் பெருகுகிறது. ''அப்பா, ஏன் அழுகிறீர்கள்? உள்ளே வராமல் ஏன் வாசலிலேயே நிற்கிறீர்கள்? '' என்று கேட்டபடி அவரிடம் செல்கிறேன். நான் அவரை நெருங்க நெருங்க அவர் விலகிப் போகிறார். ஏக்கமும் அன்பும் நிறைந்த அவர் பார்வை என்னை என்னவோ செய்கிறது. அவர் முகமெல்லாம் வியர்வை. ''குழந்தை, நான் உன் வீட்டுக்குள்ளே வரத் தவிக்கிறேன். ஆனால் ஓர் இரும்புக் கரம் என்னை இழுக்கிறது. என்னால் அதனிடமிருந்து தப்பி உன்னிடம் வர இயலவில்லையே !'' என்று அழுகிறார். நானும் அழுகிறேன். ''எப்படியாவது விடுபட்டு அடுத்த முறை வருகிறேன்'' என்கிறார். அவர் மறைந்துவிடுகிறார். உடன் ஒரு தங்கத் தொட்டிலில் அழகிய ஆண் குழந்தையைக் காண்கிறேன். முகம் மட்டும் பெரிதாய் என் தந்தையின் முகமாகத் தெரிகிறது. மிக ஆர்வத்தோடு தொட்டிலை நெருங்குகிறேன். ஆனால் விர்ரென்று வில்லினின்று புறப்பட்ட அம்பு போல் தொட்டில் பறக்கிறது. வெகு வேகமாய்த் தொடர்ந்து ஓடுகிறேன். ஆனால் தொட்டில் கடலில் அமிழ்ந்து விடுகிறது.

இதற்குச் சிறிது காலத்துக்குப்பிறகு கருச்சிதைவுக்குள்ளானேன். ஆனால் மறுவருடமே அழகிய ஓர் ஆண் குழந்தை என் தந்தையின் இரண்டாவது நினைவு நாள் கழித்து சில நாட்களில் பிறந்தது. குழந்தையைக் கண்டவுடன் உடல் சிலிர்த்தது. ஜாடை மட்டுமின்றி என் தந்தையின் கையில் அமைந்திருந்த தட்டையான மச்சம்கூட என் குழந்தையின் கையிலும் அதே வடிவில் அமைந்திருந்தது. முதல் முறை பிரிக்கப்பட்ட என் தந்தையே அடுத்த முறை இரும்புக் கரத்தினின்றும் விடுபட்டு என் குழந்தையாகவே பிறந்துவிட்டார் என்றே தோன்றுகிறது. என் வீட்டுத் தொட்டிலிலேயே ஆட வந்து விட்டார்.


பம்பாய் விஜயலக்ஷ்மி சீனிவாசன்



காசோலை விஷயம்

நான் வேலை செய்வது ஓர் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் கம்பெனியில். சில சமயம் வியாபாரிகள் தரும் காசோலைகளைப் பெற்றுக் கொண்டு உடனே டெலிவரி ஆர்டர் கொடுக்க வேண்டியதாகி விடும். இது ரொம்ப நம்பிக்கைக்குப் பாத்திரமான வியாபாரிகளுக்கு மட்டும் வழங்கப்படும் சலுகை. அதே மாதிரி ஒரு முறை ஒரு வியாபாரியின் கணக்காளர் கொடுத்த ரூ. 10,000த்துக்கான காசோலையைப் பெற்றுக் கொண்டு டெலிவரி ஆர்டரும் கொடுத்து விட்டேன். அன்று டெலிவரி ஆர்டர் கொடுக்கும் போதே மணி ஐந்து ஆகிவிட்டதால் மறுநாள் டெலிவரி எடுத்துக் கொள்ளும்படி அந்த வியாபாரியின் கணக்காளரிடம் கூறிவிட்டு வீடு சென்றேன். அன்றிரவு ஒரு கனவு கண்டேன். அந்த வியாபாரி மஞ்சள் கடுதாசு கொடுத்து விட்டுத் தற்கொலை செய்து கொள்வதாகவும் அந்த வியாபாரியின் கணக்காளர் கொடுத்த காசோலை திரும்பி வந்து விடுவதாகவும். எழுந்தவுடன் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அந்த வியாபாரியோ மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். அவர் மீது சந்தேகம் என்று தெரிந்தாலே என் வேலையைப் போக்கும் அளவுக்குச் செல்வாக்கு வாய்ந்தவர். அதேபோல் என் கனவு





உண்மையாகி அந்தக் காசோலைக்குப் பணம் கிடைக்காவிட்டாலும் என் வேலை அம்போதான்! 'சரி என்ன ஆனாலும் ஆகட்டும்' என்று சிறிது முன்னதாகவே கோடவுனுக்குச் சென்று அந்தக் கணக்காளர் வந்தால் பொருட்கள் தயாராக இல்லை; இன்னும் இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் கிடைக்கும் என்று சொல்லும்படி கூறிவிட்டு அலுவலகம் சென்றேன். சிறிது நேரத்தில் அந்தக் கணக்காளர் வந்து என் மேலதிகாரியிடம் சண்டையோ சண்டை என்று போட்டுவிட்டு இனி உங்களிடம் பொருள் வாங்குவதற்கான எண்ணமே எனக்கு இல்லை என்று கூறிவிட்டுப் போய்விட்டார். என் மேலதிகாரி அவர் சென்ற பிறகே என்னைக் கூப்பிட்டு விசாரித்தார். நானும் உண்மையை மறைக்காமல் கூறிவிட்டு, "ஸார்! நான் பண்ணுவது சரியோ தப்போ எனக்குத் தெரியாது. என்ன வந்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயார்" என்று கூறிவிட்டு வந்து விட்டேன். என் மேலதிகாரி என்னை அப்போது பார்த்த பார்வையில் கலந்திருந்தது இரக்கமோ அல்லது ஏளனமோ எனக்குப் புரியவில்லை. ஆனால் என்ன ஆச்சரியம்! மறுநாள் அலுவலகம் சென்றதும் நான் கேட்ட முதல் செய்தியே அந்த வியாபாரி தற்கொலை செய்து கொண்டு இறந்தார் என்பதுதான்.

ஸ்ரீமதி எஸ். கே. மூர்த்தி
சென்னை-1

பட்டப் படிப்பு

பட்டமளிப்பு விழா. பெரும் திரளான மாணவர் கூட்டம். ஏ. எல். முதலியார் கையிலிருந்து என் பி. ஏ. பட்ட சர்டிபிகேட்டை அதற்கான உடுப்புடன் பெற்றுக் கொள்கிறேன். 1961ல் இப்படி ஒரு கனவு. நம்புவதற்குச் சாத்தியமில்லாத கனவு. விடாத தலைவலி காரணமாக 1952ல் என் இன்டர் படிப்புடன் கல்லூரியை விட்டுக் கழன்று கொண்டு விட்டேன். இனி எப்படி ஏ.எல். முதலியார் கையால் பட்டப் படிப்புச் சான்றிதழ் பெற முடியும்? மறு நாள் காலைத் தபாலில் எங்கள் ஊர் சிதம்பரம் மாரியம்மன் கோயில் பிரசாதம் ஒரு கவரில் வந்தது. விலாசத்தில் பி. பாலகப்பிரமணியன் பி. ஏ. என்றிருந்தது. கண்ணைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தேன். ஆமாம், அதில் என் பெயருடன் பி. ஏ. ஒட்டிக் கொண்டுதான் இருந்தது!

ஆறு மாதம் சென்றது. தில்லி பல்கலைக் கழகம் அறிவிப்பு எனக்குப் பாலைவனத்தில் ஊற்றுப் போல வந்தது. அது தபால் மூலம் அரசாங்க ஆதரவில் மேல் படிப்புக்கு மாணவர்களை வரவேற்றது. பி. ஏ.யில் சேர்ந்து கொண்டேன். மூன்று வருடம் ஓடியது. ஆண்டவன் அருளால் பி. ஏ.யில் பாஸ்.


ஆனாலும் கனவில் ஒரு சிறு மாறுதலோ என்று நினைத்தேன். வி. டி. தேஷ்முக் அல்லவோ எங்களுக்கு வி.ஸி.? ஏ. எல். முதலியார் கையில் அல்லவா பட்டம் பெற்றேன், கனவில்?

ஆனால் என்னென்பேன்! இதைவிட ஆச்சரியம் என் வாழ்வில் இல்லை. தில்லி பட்டமளிப்பு விழாவுக்கு ஏ. எல். முதலியாரை அழைத்துப் பட்டமளிக்க ஏற்பாடு செய்திருந்தார்கள்!

—என். பாலகப்பிரமணியன்

பிள்ளையார் கரைந்தார்

எங்கள் வீட்டில் பிள்ளையார் சதுர்த்திக்கு வாங்கி வந்த மண் பிள்ளையார் ஒன்று கங்கையில் விடாமல் நிரந்தரமாகப் பூஜை அறையிலேயே இரண்டு வருடங்களாகப் பூஜையைப் பெற்றுக்கொண்டு உட்கார்ந்திருந்தது. இரண்டு மாதங்களுக்கு முன் என் கனவில் வயது முதிர்ந்த ஓர் அம்மாள் தோன்றி, அந்தப் பிள்ளையாரை என்னிடம் காட்டி "பூஜைக்காக வாங்கி வரும் பிள்ளையாரை பூஜை முடிந்ததும் கங்கையில் விட்டுவிடுவதுதான் முறை." என்று சொல்லி மறைந்து விட்டார். மறுநாள் காலையில் கனவைப் பற்றி என் கணவரிடம்



சொல்லிப் பிள்ளையாரை ஆற்றில் விட்டுவிடலாம் என்று சொன்னேன். "இரண்டு வருடமாகப் பூஜை செய்துவிட்டு இப்போது எப்படி விடுவது. பிள்ளையாரை அந்த இடத்தை விட்டு நகர்த்தக் கூடாது" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். அன்று மதியம் மூன்று மணி அளவில் பூஜை அறையில் ஒரு பெரிய சத்தம் கேட்டு வீட்டிலுள்ளவர்கள் ஓடிப் பார்த்தோம். நாங்கள் அடைந்த அதிர்ச்சி சொல்லி முடியாது. பூஜை அறைச் சுவரில் எல்லாச் சுவாமி படங்களும் சட்டம் அடித்து அழகாக மாட்டி வைத்திருக்கிறோம். அதில் மண் பிள்ளையாருக்கு நேரே மாட்டியிருந்த முருகன் விழுந்து பிள்ளையாரை உருத் தெரியாமல் அழித்து விட்டு அதே நிலையில் சுவரில் சாய்ந்த நிலையில் புன்னகை புரிந்து கொண்டிருந்தான். முருகன் படத்துக்குச் சேதமில்லை. சிதறிக் கிடந்த பிள்ளையாரைக் கூட்டி என் கணவரே கங்கையில் கொண்டு போய் விட்டார்.

பி. சாரதாம்பாள்
கடலூர்-3

ஒவ்வொரு தடவையும் டென்னிஸ் அமிர்தராஜ் சகோதரர்கள் அயல் நாட்டு விஜயம் செய்துவிட்டுத் திரும்பும் போது அவர்கள் தாயார் அவர்களை வாசலில் நிற்க வைத்து திருஷ்டி சுற்றிப் போட்ட பிறகுதான் உள்ளே அனுமதிப்பார். அவர்கள் கிறிஸ்தவர்களாயினும் இந்த இந்து மத சம்பிரதாயத்தைக் கடைப்பிடிக்கிறார்கள்.

— இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி - பாபு



பிரிட்டனில் 'ஈஸ்ட் லண்டன் டெய்லி டெஸ்பாட்ச்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் டொனால்ட் வுட்ஸ் என்பவருக்கு ஆறு மாதச் சிறைத்தண்டனை கிடைத்துள்ளது. அவர் செய்த குற்றம்:

கறுப்பு (நீக்ரோ) இனத்தாரின் முன்னேற்றத் திட்ட அலுவலகத்தைக் காவல் காத்து நின்ற போலீசாரே, அவ்வலுவலகத்தைத் தாக்கிக் கொண்டிருந்தாராம். இதை நேரில் பார்த்தவர் தெரிவிக்கவே, செய்தியை ஆசிரியர் தமது பத்திரிகையில் பிரசுரித்தார். அவருக்குத் தகவல் கொடுத்தவரின் பெயரைச் சொல்லும்படி அரசாங்கம் கேட்டதற்கு மறுக்கவே, ஆறு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்!

தண்டனை பெற்றாலும் பத்திரிகைத் தர்மத்தைக் காப்பாற்றி விட்டார் ஆசிரியர்.

• • •

பிரிட்டனில் சில பிரபல தினப் பத்திரிகைகள் தினந்தோறும் பிரசுரித்து வந்த அரை நிர்வாண, முழு நிர்வாணப் பெண்களின் படங்கள் இனி வெளியாகா. பிரிட்டிஷ் பத்திரிகையாளர் சங்கம், இனி பெண்களுக்குக் கௌரவம் அளிக்குமாறும் செய்திகளில் ஆண்களுக்குச் சமமாக அவர்களுக்கு இடம் ஒதுக்கும் படியும் கோரியுள்ளது. மேல்நாட்டிலிருந்து நமது நாட்டுக்குப் பால் உணர்ச்சியைத் தூண்டும் படங்களும் கதைகளும் வந்தன. இப்போது மேல்நாட்டில் அந்த வேகம் திசை மாறி விட்டது என்பதை நமது நாட்டுப் பத்திரிகைகளும் ஆசிரியர்களும் உணர வேண்டும்.

• • •

கடப்பையில் சர்க்கார் பெண்கள் பள்ளி மாணவிகள் 313 பேர், 1976ல் தாங்கள் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை என்று தீர்மானித்திருக்கிறார்கள். ஜனத்தொகைக் கட்டுப்பாட்டுக்கு அவர்களாலான தொண்டு.

• • •

ஐம்பத்தொன்பது வயதான ஒரு ஜப்பானிய மாது, தம் அண்டை வீட்டுக்காரரின் மேல் வழக்குத் தொடுத்ததில் வெற்றி பெற்று 1300 டாலர் பெற்றிருக்கிறார்.

அண்டை வீட்டுக்காரரின் நாய் குலைத்ததினால் அம்மாதிற்கு நரம்புத் தளர்ச்சியும், ரத்த அழுத்தமும் அதையொட்டிய நோய்களும் ஏற்பட்டன என்றும், அதற்கு நஷ்ட ஈடாக 4000 டாலர் தர வேண்டும் என்றும் கோரினார். நீதிமன்றமும், ஜன நெருக்கமுள்ள பகுதியில் வசிப்பவர் தம் நாய் குரைக்காதிருக்குமாறு கவனித்துக் கொள்ள வேண்டும்; அக்கடமையில் தவறியதால் 1,300 டாலர் அந்த அம்மையாருக்கு ஆறுதல் பணமாக வழங்க வேண்டியதுதான் என்று தீர்ப்பு அளித்தது.

சத்தம் படுத்தும் பாடு என்ன என்று புரிகிறதா? நம்மூரில் ஒலிபெருக்கிச் சத்தம் என்று ஓயும் சொல்லுங்கள்!

• • •

சென்னை கவர்னர் திரு கே. கே. ஷா, வலியை மறக்கடிக்கச் செய்யும் சீன வைத்திய முறையான 'அக்குபஞ்சர்' முறை இந்தியாவிலிருந்துதான் சீனாவுக்குப் போனதாக, சென்னையில் நடைபெற்ற அனஸ்தடிக் டாக்டர்கள் மகாநாட்டில் ஒரு கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

ஆதாரம் இல்லாமல் கவர்னர் சொல்லியிருக்க மாட்டார் என்று நம்புகிறோம்!

• • •

காங்கிரஸ் மகாநாட்டில் பிரதமர் பேசிக் கொண்டிருந்தபோது ஒலிபெருக்கி பழுதாகி விட்டது. அதைச் சீர்படுத்துவதற்குப் பதினைந்து நிமிஷங்களுக்கு மேல் ஆகி விட்டது.

ஒலிபெருக்கி மீண்டும் வேலை செய்யத் தொடங்கியவுடன் பிரதமர் இந்திரா, ''பின்வரிசையிலுள்ளவர்கள் ஒலிபெருக்கியின் உதவியின்றி என் குரலைக் கேட்க முடிந்ததா?'' என்று கேட்டார்.

''இல்லை! இல்லை!'' என்றார்கள் மக்கள்.

''இந்த ஒழுங்கும் கட்டுப்பாடும் தான் தேசத்தை முன்னேற்றப் போகிறது!'' என்றார்.

அதாவது பிரதமர் பேச்சு காதில் விழா விட்டாலும், அமைதியாக மரக்கட்டை போலிருந்த தன்மையைத்தான் பிரதமர், ''டிஸிப்ளின்'' என்று குறிப்பிட்டார்!

• • •

ருஷ்யாவில், காய்கறி பதம் செய்து டப்பாக்களில் அடைத்து வெளியிடும் கான்னிங் தொழிற்சாலையைச் சேர்ந்த ஐவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் செய்த குற்றம் 90 லட்சம் ரூபின் பெறுமான முள்ள காய்கறிகளை வாங்கியதாகப் பொய்க் கணக்கு எழுதி அரசாங்கத்தை ஏமாற்றியது தான்!

• • •

சமீபத்தில் பஞ்சாபில் நடைபெற்ற 75வது காங்கிரஸ் மகாநாட்டு மலரின் பக்கங்கள் 600; விலை: ரூபாய் 50-; எடை: 3 கிலோ.

பெரிய மனிதர்களின் நல்வாழ்த்துக்கள் இதில் கிடையாதாம். ஆனால் பிரதமர் இந்திரா, காங்கிரஸ் தலைவர் டி. கே. பரூவா அவர்களோடு நிகழ்த்திய பேட்டிக் கட்டுரைகள் உண்டு. பிரதமரின் இருபது அம்சத் திட்டம் படங்களுடன் இடம் பெற்றிருக்கின்றன. இப்படி எல்லா விதத்திலும் கனமான காங்கிரஸ் மலர்!

பொன்னியின் புதல்வர்



சுந்தா

15. உண்மையும் கதையும்

நம்பினாலும் கதை
நம்பாவிட்டாலும் கதை

கல்கியின் கதைகள் பல; அவற்றின் விதங்களும் பல. எந்த விதமாயினும் அது நிச்சயம் கதையாகவே இருக்கும்.

தமது கதைகள் எல்லாம் கதைகளே என்பதை அடிக்கடி அவர் எச்சரிக்கை விடுத்துக் கொண்டும் ஞாபகப் படுத்திக் கொண்டும் இருந்தார். ''ஸுசீலா'' என்ற கதையைக் கடந்த காலத்தில் நிகழ்ந்ததாய் அல்லாமல் எதிர்காலத்தில் நிகழப் போவதாய் அவர் தொடங்கி விட்டுச் சொல்லுவார்: ''இது கதை என்று வாசகர்களை நம்பச் செய்வதற்கு எனக்கு வேறு வழி ஒன்றும் தோன்றவில்லை. இந்த நாளில் நிஜத்தை நிஜம் என்று நம்பச் செய்வதே கடினமாய் இருக்கிறது. கதையைக் கதை என்று நம்பச் செய்வது அதைவிடக் கஷ்டமானதல்லவா?''

கதையைக் கதையாய் நம்ப வேண்டும் என்றால், கதையில் நம்பக் கூடாததாய் நிகழ்வதையும் நம்பத்தான் வேண்டும். அப்படியும் நம்பத் தயங்குவோருக்கு, ''கட்டுக் கதையைவிட விந்தையானது உண்மை'' என்ற ஆங்கிலப் பழமொழியை நினைவூட்டும் விதத்தில், ''இடிந்த கோட்டை'' என்ற கதைக்கு கல்கி பீடிகை போட்டார்:

கதையில் கற்பனை செய்ய முடியாத அத்தனை அதிசயமான சம்பவங்கள் வாழ்க்கையில் நடக்கின்றன. ஒரு விசேஷம் என்னவென்றால், அந்த அதிசயச் சம்பவங்களைக் குறித்து யாருக்கும் சந்தேகம் உண்டாகவில்லை. இப்படியும் நடக்குமா என்று எண்ணுவதில்லை. வெகு தூரத்தில் நடந்த சம்பவமானாலும் பத்திரிகைகளில் வந்து விட்டால் பூரணமாக நம்பி விடுகிறார்கள்.

உதாரணமாக, சென்ற மாதத்தில் நடந்த ஒரு விபரீத அதிசயத்தைக் கேளுங்கள்: பங்களூரில் ஒரு விவாகம் நடந்தது. மணமகனும் மணமகளும் ஏழைகள். கல்யாணம் ஆனதும், மாப்பிள்ளையும் பெண்ணும் இன்னும் அவர்களைச் சேர்ந்தவர்களும் சாலையோடு போய்க் கொண்டிருந்தார்கள். மணப்பெண் அவளுடைய தோழி ஒருத்தியுடன் ஒரு மரத்தடியில் ஒதுங்கிச் சற்று இளைப்பாற உட்கார்ந்தாள். அப்போது அந்த மரத்தின் கிளை ஒன்று ஒடிந்து விழுந்தது. அது அந்த மணப்பெண்ணின் தலையில் விழுந்தது! மணப்பெண் தட்சணம் உயிர் துறந்தாள்.

இந்தப் பரிதாப சம்பவம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதுவே ஒரு கதையில் வந்திருந்தால், நாம் இலேசில் நம்பி விடுவோமா? ''அந்த மணப் பெண் அந்த மரத்தடிக்குத்தானா போயிருக்க வேண்டும்? வேறு மரத்தடிக்குப் போயிருக்க கூடாதா? அந்த மரக்கிளை ஐந்து நிமிஷத்துக்கு முன்பே ஒடிந்து விழுந்திருக்கக் கூடாதா? அதுவும் மணப்பெண் தலையில் பார்த்துத்தானா விழ வேண்டும்? பக்கத்திலுள்ள யார் தலையிலாவது விழக் கூடாதா?'' என்று ஆயிரம் ஆட்சேபங்களைச் சொல்வோம்.

ஒருயிர் விபத்துக்குள்ளானது பற்றிய வாக்கியங்கள் இவை. விபத்து ஒன்றிலிருந்து ஒருவர் தப்பியது பற்றிய சம்பவம் ஒன்றை, கல்கி காலத்தில் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் சம்பந்தப்பட்டிருந்தவர்கள், இன்னமும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒருநாள் மாலை, அந்தச் சங்கத்தின் செயற்குழு கூடவிருந்த அறையில், சங்கத் தலைவர் கல்கியின் வருகைக்காக உறுப்பினர்கள் காத்திருக்கையில், உயரே சுழன்று கொண்டிருந்த மின் விசிறி திடீரெனக் கழன்று விழுந்தது. நல்ல வேளையாய் அது விழுந்த இடத்தில் யாரும் உட்கார்ந்திருக்கவில்லை. ஆனால், அதற்கு ஒரு நிமிடத்திற்கு முன்னால் வரை அதே இடத்தில் திரு வெ. சாமிநாத சர்மா அமர்ந்திருந்தார். அவர் அங்கேயே உட்கார்ந்திருந்தாலோ, எழுந்து நகர்ந்ததில் ஒரு நிமிடம் தாமதம் ஏற்பட்டிருந்தாலோ

என்ன நேர்ந்திருக்கும் என்பதை எண்ணி எல்லோரும் சிலிர்ப்புற்றார்கள். அவர்கள் பரபரப்புடன் பேசிக் கொண்டிருக்கையில், கல்கி வந்தார். நடந்ததை அறிந்து அவரும் சிலிர்த்துப் போனார். ஒரு நிமிட வித்தியாசத்தினால் ஆபத்திலிருந்து தப்பிய சர்மாவை அவர் — பாராட்டி விட்டு, அருகிலிருந்த நாரண துரைக்கண்ணனைப் பார்த்து, ''இப்படி நிஜமாய் ஒரு அதிசயம் நடந்திருக்கிறதே. இதுமாதிரி ஒன்றை நாம் கதையில் எழுதினால் ஏன் நம்ப மாட்டேன் என்கிறார்கள்?'' என்று கேட்டார்.

கல்கியே முன்பு ஒரு சமயம், கண நேர வித்தியாசத்தில், அல்லது ஓரடிக்கும் குறைவான வித்தியாசத்தில், கோர மரணத்திலிருந்து தப்பினார். அவரே அதைப்பற்றி எழுதி இருக்கிறார்.

பூனாவில் நடந்த லக்ஷ்மி-தேவதாஸ் திருமண வைபவத்தில் கல்கி கலந்து கொண்டதை முன்னொரு அத்தியாயத்தில் பார்த்தோம் அல்லவா? கலியாணத்துக்கு மறுநாள், புதுமண தம்பதியரும் மற்றும் சிலரும், சிவாஜியின் மலைக்கோட்டை அமைந்துள்ள ''ஸிம்மகட்'' என்னும் குன்றின் மேல் உல்லாசமாய்ப் பொழுது போக்கச் சென்றார்கள். கல்கியும் உடன் சென்றிருந்தார்.





மலையுச்சியில் நாங்கள் தங்கிய சில மணி நேரமும் வெகு குதூகலமாய்க் கழிந்தது. குளிர்ந்த காற்று விர் விர்ரென்று வீசிற்று. சிலுசிலுவென்று மழை பொழிந்தது. என் உள்ளத்தில் எழுந்த உற்சாகத்தைச் சொல்லி முடியாது. அங்கு சிதிலமாய்க் கிடந்த கோட்டைச் சுவர்களையும் வாசல்களையும் பார்த்ததும், என்னவெல்லாமோ எண்ணங்கள் உண்டாயின. சிவாஜியின் வீர தீரங்களைப் பற்றிப் படித்திருந்ததெல்லாம் ஞாபகம் வந்தன. ஆ! அந்தக் காலத்தில் இந்தக் குன்றின் உச்சியின் மேல் ஸம்ராட் சிவாஜியின் பாதங்கள் நடமாடின. சிவாஜியும் அவனுடைய வீரத் துணைவர்களும் கூடி, பாரத நாட்டில் மறுபடியும் ஹிந்து சாம்ராஜ்யத்தைச் ஸ்தாபிக்கத் தீர்மானித்தது இவ்விடத்திலேதான். அந்நாளிலே இங்கே எவ்வளவு அல்லோலகல்லோலமாய் இருந்திருக்க வேண்டும்! போர்க் களத்திலிருந்து திரும்பிய வீரர்களை, வீர மகராஷ்டிர மங்கையர் எவ்வாறு மங்கள கீதத்துடன் எதிர் கொண்டழைத்து வெற்றி மாலைகள் சூட்டி இருக்க வேண்டும்? அந்த வீரர்கள் எல்லாரும் இப்போது எங்கே?... மலைமேல் ஒரு காவிப்பட்டுக் கொடி எங்கள் ஞாபகார்த்தமாய் அமர்த்தப் பட்டிருந்தது.

அங்கே மற்றவர்களை விட்டு விட்டு, நானும் தேவதாஸும் மலையைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம்... ...

சுமார் ஒரு மணி நேரம் மலையைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தோம். மூடுபனி சூழ்ந்திருந்ததால் எதிரில் கொஞ்ச தூரத்துக்கு மேல் பார்க்க முடியவில்லை.

''ஜாக்கிரதை! எதிரே பாருங்கள்!'' என்றார் தேவதாஸ்.

யாரைப் பார்த்தேன் என்று நினைக்கிறீர்கள்? சாக்ஷாத் யம தர்மராஜனை! தேவதாஸ் எச்சரித்த இடத்தில், எனக்கு ஒரு சாணுக்கு எதிரில், மலை செங்குத்தாய்க் கீழே போயிற்று. (ஆ. வி. 10-7-33)

நேர்ந்த விபத்துக்கள், நேரவிருந்த விபத்துக்கள், நல்லதும் கெட்டதுமான திடீர்த் திருப்பங்கள், எதிர்பாராத

விழாவுகள் எதிர்பார்த்தபடி நடவாத ஏமாற்றங்கள், அதிசயமான சம்பவப் பொருத்தங்கள், ஆள் மாருட்டங்கள், மர்மம், மலைப்பு, திகைப்பு, சிக்கல் — இவையும் இவை போன்ற இன்னும் பலவும் வாழ்க்கையில் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கின்றன. ஆகவே கதைகளிலே இவை இடம் பெறத் தக்கவைதாம். ஆயினும், அபரிமிதமாகவே இவை கல்கியின் கதைகளில் நிகழ்கின்றன. அப்படி நிகழ்வதே, மிகப் பெரும் தொகையான வாசகர்கள் அவருடைய கதைகளை விரும்பிப் படிக்க ஒரு காரணமும் ஆகிறது; அதே சமயம், இலக்கியத் திறனாய்வாளர்கள் சிலர் குறை கூறவும் காரணமாய் இருக்கிறது.

''மகுடபதி'' நாவலில், மர்மத்துக்கு மேல் மர்மமும், திடீர் திடீர்த் திருப்பங்களும்; வழக்கத்துக்கும் அதிகமாய் உள்ள காரணத்தால், அதன் ஆசிரியரே, இடையிடையே குறுக்கிட்டு, அதைக் கதைதான் என்பதை நினைவிற் கொண்டு படிக்கும்படி வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறார். ஆனால், அந்த நாவலுக்கு முகவுரை வழங்கிய டி.கே.சி. அவ்வித ஆசிரியர் கூற்றுக்கு அவசியம் இல்லை என்று கருதினார் போலும். கொங்கு நாட்டின் காட்சிகளையும் மக்களையும் அற்புதமாய் அதில் கல்கி சித்திரித்திருப்பதைப் பாராட்டிய பின் அவர் சொல்கிறார்:

எதிர்பாராத சம்பவங்களாய் இருக்கின்றனவே எல்லாம் என்று நினைக்கத் தோன்றும். எதிர்பார்க்கின்ற சம்பவங்களே கதையில் நிகழ்கின்றன என்றால், புஸ்தகத்தை அப்படியே மூடி வைத்துவிட வேண்டியதுதானே!

எதிர்பாராத சம்பவங்கள் நம் வாழ்க்கையில் அடிக்கடி நடந்து கொண்டே இருக்கின்றன. அவைகளை லட்சியம் செய்யாமல் அப்படியே நாம் மறந்து விடுகிறோம். மறந்து போகாதபடி ஒரு டைரியில் குறித்து வைப்போமானால் விசித்திரமாக இருக்கும். முடிவில் நண்பர் யாரிடமாவது டைரியைக் கொடுப்போமானால், ''இப்படியெல்லாமா நடந்திருக்கும்!'' என்று ஆச்சரியப்படுவார்.


''மகுடபதி'' கதையின் பெரும்பகுதி நிகழும் அதே கொங்கு நாட்டைக் களமாய்க் கொண்டது, ''பொய்மான் கரடு.'' இதிலும் அதிசயம், மர்மம் வகையறாக்கள் ஓரளவு உண்டுதான் என்றாலும், அவற்றை அல்லாமல், இந்த நாவல் சம்பந்தமான இன்னொன்றைக் கவனிப்போம்.

கல்கிப் பத்திரிகையில் தொடர் கதையாய் 1950-ல் வந்த பின், ஒரு புத்தகமாய் மறுவருடம் வெளியான போது, அதற்கு ஆசிரியரே முன்னுரை எழுதினார். ''சிவகாமியின் சபதம்'', ''அலைஓசை'' ஆகியவற்றில் உள்ள அவருடைய முன்னுரைகள் போல் இது பிரபலமானதல்ல; அதிகம் பேர் இதைப் படித்திருக்க முடியாது. ஆனாலும், பலரும் ரசிக்க வேண்டியதான அம்சங்கள் இதில் இருக்கின்றன — கதை தோன்றிய விவரம், முன்னே கொஞ்சம் வேடிக்கை, பின்னே கொஞ்சம் வேதாந்தம்:

...மேனாட்டுக் கீழ்நாட்டுப் பிரபல கதை ஆசிரியர் பலர் ''நான் கதை எழுதுவது எப்படி?'' என்பதுபற்றி எழுதியிருக்கிறார்கள். என்னையும் அப்படிப்பட்ட பிரபல ஆசிரியராக்கி விட வேண்டும் என்று சதியாலோசனை செய்த சில நண்பர்கள், ''நீர் கதை எழுதுவது எப்படி?'' என்று கேட்பதுண்டு. ''நான் கதை எழுதுவதில்லையே; என் கையில் பிடித்த பௌண்டன் பேனா அல்லவோ எழுதுகிறது?'' என்று பதில் சொல்லிச் சமாளிப்பேன். அதை கூடச் சிலர் நம்புவதில்லை. ''நீர் உண்மையில் பௌண்டன் பேனாவைக் கொண்டுதானா எழுதுகிறீர்? சில சமயம் நீர் போடுகிற போட்டைப் பார்த்தால், கடப்பாறையைப் பிடித்துக் கொண்டு எழுதுவது போலத் தோன்றுகிறதே!'' என்பார்கள்.

அது எப்படியாவது இருக்கட்டும். இந்தப் ''பொய்மான் கரடு'' என்னும் கதையை நான் எழுதியது எப்படி என்பதை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

ஆஸ்தானக் கவிஞர் ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு நாமக்கல்லில் நடைபெற்ற பாராட்டு விழாவுக்கு நான் சென்றபோது வழியில் 'பொய்மான் கரடு' என்னும் இடத்தைப் பார்த்தேன். அந்தக் காட்டின் குகையில் தோன்றிய மாய மானைப் பார்த்தேன். அந்த மாய மான் மலைக் குகையிலிருந்து என் மனக் குகையில் வந்து புகுந்துகொண்டது. மிகவும் தொந்தரவு படுத்திக்கொண்டிருந்தது. எத்தனைதான் நல்ல வார்த்தையாகச் சொல்லியும் என் மனத்தை விட்டுப் போக மறுத்து விட்டது. கனவிலும் நனவிலும் வேண்டாத இடங்களிலும் எதிர்பாராத சமயங்களிலும் அந்தப் பொய்மான் என் கவனத்தைக் கவர்ந்து பிராணனை வாங்கிக்கொண்டிருந்தது. ஒரு நாள் எனக்குக் கடுங் கோபம் வந்து, ''ஓ, பொய் மானே! நீ என் மனத்தை விட்டுப் போகிறாயா, இல்லையா? போகாவிட்டால் உன்னைப் பற்றி ஒரு கதை எழுதி ஊர் சிரிக்க அடித்துவிடுவேன்!'' என்று சொன்னேன். அதற்கும் அந்தப் பொய் மான் அசைந்து கொடுக்கிறதாக இல்லை. கடைசியில் ஒரு கதை எழுதியே தீர்த்தேன்.



இத்தாலி நாட்டில் சாலை நெருக்கடியைக் குறைக்க பெட்ரோல் பம்புகள் சனிக்கிழமை நடுப்பகல் முதல் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு வரை மூடப்பட்டிருக்கும்!

— 'எஸ்கொயர்' — பாபு

பாத்திரங்கள் பெரும்பாலும் சேலம் ஜில்லாவைச் சேர்ந்த பாத்திரங்கள். திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் நான் தங்கியிருந்த காலத்தில் பார்த்துப் பழகிய பாத்திரங்கள். பாத்திரங்களில் சிலர் முரடர்களாய் இருப்பதாகவும், கதையும் சில இடங்களில் கரடு முரடாய் இருப்பதாகவும் வாசகர்களுக்குத் தோன்றினால், அது கதை நடந்த இடத்தின் கோளாறே தவிர என் குற்றமன்று என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் சில சமயம் பொய் மான்கள் எதிர்ப்படுகின்றன. அந்தச் சமயத்துக்கு அவை உண்மையாகவே தோன்றுகின்றன. அந்தப் பொய் மான்களைத் துரத்திக் கொண்டு நாம் ஓடுகிறோம். துரத்திப் போகும்போது, அம்மம்மா, எத்தனை பரபரப்பு! எவ்வளவு மனக் கிளர்ச்சி! என்ன தீவிர உணர்ச்சி! ஆனால் எவ்வளவு தூரம் தேடிப் போனாலும் பொய்மான் வெறும் மாயைத் தோற்றம்தான் என்பதைக் கடைசியில் உணர்கிறோம்; ஏமாற்றம் அடைகிறோம்.

வேடிக்கையும் வேதாந்தமும் . வக்கணையாய்த்தான் இருக்கின்றன; ஆனால் கதையை எழுதியது எப்படி என்பதைப் பற்றிய பகுதி அப்படி இல்லை. ''பொய் மானைக் கண்டேன் . புனை மானைப் பிடித்தேன்'' என்கிற மாதிரியில்தான் ஏதோ சொல்லி யிருக்கிறார் ஆசிரியர். உண்மையில், அவராகட்டும் வேறு யாராகட்டும், ஒரு கதையின் கதையை முழுதுமாய்ச் சொல்லிவிட முடியுமா என்ன? அப்படியே சொல்ல முடிந்தாலும் அது அந்தக் கதையை விடப் பல மடங்கு நீண்ட புராணமாக அல்லவா போய் விடும்!

அதனால்தான், எழுதியது எப்படி என்பதை விடுத்து, எதைப் பார்த்து என்பதை மட்டும் கல்கி சொன்னார்; அதுவும் அது ஒரு பொய்மான் என்பதனால். ஒரு மெய் மானைப் பார்த்து எழுதியிருந்தாலும்தான் சொல்லி இருப்பார். ஆனால் ஒரு மெய் மனிதரைப் பார்த்து எழுதி யிருந்தால் சொல்லி இருப்பாரோ? மாட்டார்.

கல்கி புலப்படுத்தி இராவிட்டாலும், அவருடைய கதை மாந்தர் சிலருக்கு மூலமாய் இருந்தவர்களை, ஏற்கனவே நாம் முன் அத்தியாயங்களில் ''துப்பறிந்து'' கண்டு பிடித்திருக்கிறோம். இந்த அத்தியாயத்திலும் ஒருவரைக் கண்டு பிடிக்கலாம் — மிக எளிதாகவே.

''கடிதமும் கண்ணீரும்'' என்ற சிறு கதையில் தலைவியாய் வருபவர் இவர். இந்தக் கதையைப் படித்திராதவர் இருப்பார்களேயாகில், அவர்களுக்காக இதன் சுருக்கம்:

இளம் கைம்பெண்களுக்கும் அனாதைப் பெண்களுக்கும் புகலிடமும் கல்வியும் அளித்து சுயபலத்தால் அவர்கள் வாழ்வதற்கு உதவி செய்கிறது தேவி வித்யாலயம். அதை நிறுவி நடத்தும் அன்னபூரணி தேவி, ஒன்பதாவது வயதில் விதவையானவர். அவ்வளவு சிறு வயது காரணமாய் அலங்கோலம் செய்யப்படாமல், தப்பி, கல்வி கற்று, பி.ஏ. எல். டி. பட்டங்கள் பெற்றுத் தம்மைப் போன்ற அபாக்கியவதிகளைக் காப்பாற்றும் பணியில் ஈடுபடுகிறார்.

அந்த அம்மாள் ஒரு நாள், தமது உதவி ஆசிரியை சாவித்திரியிடம், தமது இளமைக் காலத்து நிகழ்ச்சி ஒன்றைச் சொல்லுகிறார்—

அன்னபூரணிக்குப் பதினாறு வயது ஆகியிருந்தபோது, அவளுடைய சித்தி பெண்ணுக்குக் கல்யாணம் நடந்தது. சம்பந்தி வீட்டு இளைஞன் ஒருவன் அவளைப் பற்றிய விவரங்களை உள்ளூர்க்காரர்களிடமிருந்து தெரிந்து கொண்டு, அவளுக்கு வாழ்வளிக்கத் துணிகிறான். தனக்கு வாழ்க்கைப்படுவதற்கு அவளுக்குச் சம்மதமா என்று கேட்டு அவன் ஒரு கடிதம் எழுதி யாரும் பாராத வேளையில் அதை அவளிடம் கொடுத்தான். சம்மதம் என்றால் அதற்கு அடையாளமாக, நலங்கின் போதோ ஊர்வலத்தின்போதோ ஒரு மல்லிகைப் பூவைக் கையில் வைத்திருக்கும்படி அதில் அவன் சொல்லியிருந்தான்.

அந்தக் கடிதத்தை அன்னபூரணி ஒளித்து எடுத்துக் கொண்டு வீட்டுக்கு ஓடினாள். தனி அறை ஒன்றில் இருந்து கொண்டு அதைக் கையில் ஏந்திப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் வடித்தாள். கல்யாணம் முடிந்து சம்பந்திகள் எல்லோரும் செல்கிறவரை, அவள் வெளியே தலைகாட்டவில்லை...

இவ்வளவு வரை அன்னபூரணி . தேவி சொல்லி முடிக்கும்போது, ''நீங்கள் .ஏன் அவர் சொன்னபடி செய்யவில்லை?'' என்று சாவித்திரி கேட்கிறாள்.

''அவருடைய கடிதத்தை அன்றைய தினம் நான் படிக்கவில்லை. ஒரு வருஷத்துக்குப் பிறகுதான் படித்தேன். அப்படிப் படிப்பதற்குள் எத்தனையோ நாள் அதைக் கையில் வைத்துக் கொண்டு கண்ணீர் சிந்தினேன்.''

''அம்மா, என்ன சொல்கிறீர்கள்? தங்களுக்கு அப்போது...''

''ஆமாம், சாவித்திரி! அவர் என்னிடம் கடிதத்தைக் கொடுத்த தினத்தில் எனக்குப் படிக்கத் தெரிந்திருக்கவில்லை!''

வேறு தமது சிறந்த கதைகளைப் போலவே இதையும் கல்கி நெடுங்காலம் மனத்தில் புரட்டிப் புரட்டிப் பார்த்த பிறகு எழுதினார். அப்படிப் புரட்டிக் கொண்டிருந்த சமயம் ஒன்றில் அவர் திருநெல்வேலியில் டி. கே.* சி. யுடன் தங்கி இருந்தார். ஒரு நாள் மாலை, அப்போது இளைஞராய் இருந்த மீ. ப. சோமுவுடன் அவர் தாமிர வருணி பாலத்தருகே உலாவிக் கொண்டிருந்த போது, இந்தக் கதையை


''பூனையும் சிங்கம்தான் — எலிக்கு'' (அல்பானியப் பழமொழி)

அனுப்பியவர் : எஸ். ஜி.



ஓர் அன்புக்குகந்த அழுக்கு-ஒட்டியை சுத்தமாக்குவது எப்படி?





புதிய ரம்யா

ஆழ்ந்து சுத்தமாக்கும் டிடர்ஜென்ட்

புதிய ரம்யா — விஞ்ஞானமுறையில் கலவையானது. ஒட்டிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு துளி அழுக்கையும் வெளியே இழுத்துச் சீரிய முறையில் சுத்தமாக்குவது.

இரண்டு ஆண்டுகால ஆராய்ச்சிக்கும் பரிசோதனைக்கும் தீவிர சோதனைகளுக்கும் பிறகு இதனை நாங்கள் உறுதியாகக் கூறுகிறோம். புதிய ரம்யா ஒரு தனித்தன்மைப் பொருளை (சர்பேக்டன்ட்) கொண்டுள்ளது. அது அழுக்கினைத் தாக்கி, எங்கு ஆழப்பதிந்திருந்தாலும் வெளியேற்றி, உங்கள் துணிகளை மிருதுவாகவும் சுத்தமாகவும் மாற்றுகிறது. பிரமிப்பூட்டும் அளவு கச்சிதமான சுத்தம்!



வில்லைகளாகவும் மிருதுவான பைகளிலும் கிடைக்கும்.

அழுக்குத் துணி வெளுக்க— பளீரென ஒளி வீச

அல்ட்ராமரீன் & பிக்மண்ட்ஸ் லிமிடெட்
ராணிப்பேட்டை, தமிழ்நாடு

SAA/UPL/1874

அவரிடம் சொன்னாராம். அதைப் பற்றிப் பல ஆண்டுகளுக்குப் பிறகு சோமு எழுதியதாவது:

> அந்தக் கதையின் முடிவிலே உள்ள 'திகைப்பு' இருக்கிறதே, அதைக் கடைசி வரையில் வாசகர்களுக்குச் சொல்லாமல் சம்பவத்தை எப்படிக் கொண்டு போவது, எப்படி ஆரம்பிப்பது என்று பல யோசனைகளைச் சொல்லிக் கொண்டே வந்தவர், பாலத்தின் அருகே சட்டென்று நின்றார். ''தம்பி, பேஷாய்ப் போச்சு! இப்படி ஆரம்பித்து விடுகிறேன்!'' என்று, கதையை இப்பொழுது எழுதியிருக்கிற உருவத்தில் உற்சாகத்தோடு சொன்னார். (கல்கி இதழ் 4-12-55)

இந்தக் கதையின் தலைவி அன்னபூரணியைக் கல்கி படைத்ததற்குக் காரணமாயும் மூலமாயும் இருந்தவர், உடன் காலத்தில் புகழுடன் வாழ்ந்த ஒரு மாதரசி. (1886—1969) அவரையும் அவருடைய அரும் பணிகளையும் பற்றி, அடிக்கடி கல்கி பாராட்டுக்குறிப்புகள் எழுதி வந்தார். கடைசியாக எழுதியது, 1951 அக்டோபர் ஏழாம் தேதியக் கல்கி இதழில். அந்த இதழின் அட்டையில் பதித்த அந்த அம்மையாரின் உருவப் படத்துக்கு விளக்கமாய் அமைந்தது அது. அதிலிருந்தே அவர் யார் என்ற விவரத்தையும் அவருக்கும் அன்னபூரணிக்கும் உள்ள ஒற்றுமை அம்சங்களையும் தெரிந்து கொள்ளலாம்.

> சின்னஞ் சிறு பெண். பிராயம் பதினொன்று. உலகம் அறியாத பேதை. வாழ்க்கைப் பாதையின் மேடு பள்ளங்களை வருத்து உணர முடியாத வயது. அத்தகைய சிறுமிக்கு விவாகம் ஆகிவிட்டது! இது என்ன அதிசயம் என்று கேட்கத் தோன்றும். அந்த நாளில், அதாவது ஐம்பது வருஷத்துக்கு முன்பு, இது அதிசயம் இல்லை. அடுத்த இரண்டு மாதங்களுக்கெல்லாம் ஒரு பெரும் அதிர்ச்சி அச்சிறு பெண்ணின் வாழ்க்கையில் நேர்ந்தது. விவாகம் என்றால் என்ன என்று தெரியும் முன்பே அவள் கணவனை இழந்து கைம்பெண் ஆகிவிட்டாள்.
>
> மகத்தான துரதிர்ஷ்டத்தில் ஓர் அதிர்ஷ்டம். அந்தச் சிறுமியின் தகப்பனார் அறிவாளி. தம் மகளுக்கு நேர்ந்துவிட்ட பெரும் விபத்துக்கு ஏதேனும் ஒரு பரிகாரம் தேட விரும்பினார். சிறுமிக்கு அவர் கணவன் இறந்த செய்தியை அறிவிக்கவில்லை. குழந்தை உள்ளத்தைப் படிப்பில் ஈடுபடச் செய்தார்.
>
> நம் நாட்டின் அதிர்ஷ்ட வசமாக, அச்சிறுமி பள்ளிப் படிப்பைப் பூர்த்தி செய்தாள். பின்னர், உறவினரின் பலத்த எதிர்ப்புக்கிடையே கல்லூரியிலும் சேர்ந்து கல்வி பயிலத் தொடங்கினாள். ஆர்வத்துடன் படித்து பி. ஏ. பட்டமும் பெற்றார்; ஹிந்து சமூகத்தில் முதன் முதல் பி. ஏ. பட்டம் பெற்ற பெண் என்ற கீர்த்தியை அடைந்தார்...
>
> இதற்குள் தம் நிலை இன்னதென்று அவருக்குத் தெரிந்து விட்டது. தம்மைப் போல் இளம் வயதிலே கணவனை இழந்து அநாதைகளான பெண்களின் சேவைக்குத் தம் வாழ்நாளையே அர்ப்பணம் செய்யத் தீர்மானித்தார். நாளதுவரை அத்தீர்மானத்தைச் செயலிலும் நிறைவேற்றி வருகிறார். அவர்தான் நமது அட்டைப் படத்தில் தோற்றம் அளிக்கும் சகோதரி ஆர். எஸ். சுப்புலக்ஷ்மி அம்மாள், பி.ஏ, எல்.டி.

சுப்புலக்ஷ்மி அம்மையார் நிறுவியவை, முதலில் விதவாசிரமம், பின்னர் ஸ்ரீ சாரதா வித்தியாலயம். அன்னபூரணி நிறுவியதாய்க் கதையில் உள்ளது தேவி வித்தியாலயம். அந்த அம்மையாரைத் தமது இலக்கியப் படைப்பிலே போற்றி ''அமரத்துவம்'' கொள்ளச் செய்ய விரும்பிய கல்கி, கதைக்குச் சுவையூட்டும் கற்பனை அம்சமாகக் கடித சம்பவத்தைப் புனைந்து அமைத்தார். நாலாம் வகுப்பு வரைச் சிறுமி சுப்புலக்ஷ்மி படித்திருந்தாள். எனினும், அன்னபூரணிக்குக் கொஞ்சமும் படிக்கத் தெரிந்திருக்கவில்லை என்பதாகக் கதையில் மாற்றினார். அப்படி மாற்றியதால் தான், மறுமண வாய்ப்பை அவர் இழக்க நேர்ந்தது என்றும், அதே சமயம் படிப்பின் அவசியத்தை அவள் உணரும்படி ஆயிற்று என்றும் கதையைக் கொண்டு போக முடிந்தது.

மற்றபடி சுப்புலக்ஷ்மி அம்மாளே தான் அன்னபூரணி தேவி.

முன் குறிப்பிட்ட கல்கி அட்டைப் படத்திலோ நேரிலோ சுப்புலக்ஷ்மி அம்மாளின் தோற்றத்தைப் பார்த்திருந்தவர்கள், கதையிலே வரும் அன்னபூரணி தேவியின் தோற்ற வர்ணனை அதனுடன் நன்கு பொருந்துவதாய் இருப்பதைக் கவனித்திருப்பார்கள்:

> பெண் குலத்தின் சேவையில் தலை நரைத்துப் போனவர் என்றால் அது சகோதரி அன்னபூரணிக்கு முற்றும் பொருத்தமாய் இருக்கும். அவருடைய நெற்றியைக் கவிந்து கொண்டு அடர்த்தியாய் வளர்ந்திருந்த வெள்ளிய கேசத்தைப் பார்க்கும்போது, மலைச் சிகரங்களின் மேல் அடுக்கடுக்காய்த் தங்கி நிற்கும் வெண்ணிற மேகங்களின் காட்சி ஞாபகத்துக்கு வரும். இவ்வாறு தலை நரைத்துப் போயிருந்தாலும், அவர் முகத்தைப் பார்க்கும்போது, அவர் ஐம்பது வயதைத்



இந்திய கிரிக்கெட் காப்டன் பேடியின் குழந்தை பெயர் 'கவாஸ் இந்தர்'. சுனில் கவாஸ்கார், இந்தர்ஜித் சிங்—இந்த இரண்டு கிரிக்கெட் நண்பர்களின் பெயர்களையும் இணைத்து வைக்கப் பட்ட பெயர் அது!

— பாலி

விவாத மேடை!

"என்ன இப்படி எழுதி விட்டாரே உங்கள் விமர்சகர்?"



'நிஷாந்த்' திரைப்படத்துக்கு விமரிசனம் எழுதிய திரு கௌசிகன் அந்தப் படத்தைப் பாராட்டுவோர்களிடத்தும் தமது கோபத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். வாழ்வின் யதார்த்தங்களோடும், தேவையான விமரிசனத்தோடும் திரைப்படங்கள் வெளிவரவேண்டும் என்று விரும்புவோர்க்கு 'நிஷாந்த்' மகத்தான காவியம் என்பதை மறுப்பதற்கில்லை. 'செத்த பாம்பை அடிப்பது போல் இன்று ஜமீந்தார்களின் கொடுமையை விவரிப்பதில் அர்த்தமில்லை' என்றும் குறிப்பிட்டிருக்கிறார். ஜமீந்தார் என்ற பெயர் மட்டுமே ஒழிந்திருக்கிறது. ஜமீந்தார் என்ற காலக் கொடுமைகளை இன்று வரை அநுபவித்துக் கொண்டிருக்கும் இந்தியக் கிராமங்கள் ஏராளம். சட்டங்களும், நியாயங்களும் ஏழை, எளிய மக்களுக்குப் போதுமான பாதுகாப்பினை இன்றுவரை தரவில்லை என்பதை உணர்த்தவே, உணர வேண்டிய வேளையில், 'நிஷாந்த்' வெளியிடப்பட்டிருக்கிறது. 'நிஷாந்த்' திரைப்படத்தில் நிகழ்கால இந்தியாவின் ஆன்மாவை என்றால் தரிசிக்க முடிகிறது. 'நிஷாந்த்' வெறும் பொழுது போக்குப் படமல்ல, பாடம் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை — 1
26—12—75 சே. சேவற்கொடியோன்

திரைப்படத் தூய்மை அவசியமா?

நிஷாந்த் திரைப் படத்தின் யதார்த்தப் போக்கு, சிறந்த டைரக்ஷன், நடிப்பு, உன்னதப் படப் பிடிப்பு முதலியவற்றைப் பாராட்டி வரவேற்கும் விமரிசகர் கௌசிகனின் குறை என்னவென்றால் கலைப் படைப்பு (ஆர்ட் ஃபிலிம்) என்று சொல்லிக் கொண்டு ஆபாசத்தை அளவுக்கு அதிகமாகப் புகுத்துகிறார்கள் என்பதுதான். களிப்பூட்ட எடுக்கப்படும் படங்களில் ஆபாசங்களை எடுப்பவர்கள்கூட ஆர்ட் ஃபிலிம் என்ற போர்வையில் ஆபாசங்கள் புகுத்தப்பட்டால் வாயை மூடிக் கொள்கிறார்கள். போதாக்குறைக்கு செக்ஸ் கல்வி புகட்டுவதாகக் கூறிக்கொண்டு வெளிவரும் ஆபாசப் படங்கள் வேறு.

'ஏதோ பொழுதுபோகத்தானே ஸார், சினிமா பார்க்கிறோம்? மடியான படங்கள் யாருக்கு வேண்டும்?' என்று கேட்போரும் இருக்கிறார்கள். காலப் போக்குக்கு ஏற்ப எது ஆபாசம் என்று நிர்ணயிப்பதில் பரந்த மனப்பான்மை தேவை என்று கூறுவோரும் உண்டு. உங்கள் கருத்து என்ன? திரைப்படத் தூய்மை அவசியமா? எந்த அளவுக்கு? சுருக்கமாக எழுதி அனுப்புங்கள். பிரசுரமாகும் கடிதங்களுக்குப் பரிசு உண்டு. கடிதங்களைத் திருப்பி அனுப்புவதோ கடிதப் போக்குவரத்தோ கிடையாது. உறையின்மீது 'விவாத மேடை' என்று குறிப்பிடவும். முடிவு தேதி: 31-1-76.

தாண்டியவர் என்று யாராலும் சொல்ல முடியாது. மாறாத இளமையின் இரகசியத்தைக் கண்டுபிடித்தவரோ அவர் என்று கூடத் தோன்றும். வெள்ளைக் கலையுடனும், வெண் மயிர் அடர்ந்த தலையுடனும், சாந்தம் குடிகொண்ட முகத்துடனும் தோன்றிய சகோதரி அன்னபூரணியைப் பார்ப்பவர்கள், அவரைச் சரஸ்வதி தேவியின் அவதாரம் என்றே நினைப்பார்கள்.

ஓர் உண்மைக் கதை அல்லது வாழ்க்கைக் கதைக்கு ஒப்பானது "கடிதமும் கண்ணீரும்". இதற்கு மூலமானது உண்மையில் வாழ்ந்த ஒருவருடைய வரலாறு என்பதை நாம் கண்டு பிடித்திருக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம்; அப்போதும் இதை நடந்திருக்கக் கூடிய ஒரு கதையாய், நம்பத் தக்கதொரு கதையாகக் கருதி இருப்போம் — "மகுடபதி" அல்லது "பொய்மான் கரடு" போல் அல்ல. படிக்கத் தெரியாததால் உண்டான விளைவு இருக்கிறதே. அதுவும் நடந்திருக்கக் கூடியதே; நமக்குச் சாதாரணமாய்த் தெரிந்ததாகவே, படிப்பில்லா அறியாமையால் ஏமாற்றம் அடைந்தவர் அல்லது ஏமாறிப் போனவர் பலர் உண்டு. தமக்குப் படிக்கத் தெரிந்திருக்கவில்லை என்பதைக் கதையின் இறுதியில் அன்னபூரணி வெளியிட்டதாய் உள்ள வியப்பு — உத்தி. பல கதைகளில் தேர்ச்சியுடன் கல்கி கையாண்டுள்ள ஒன்றேயாகும். ஆகவே அதுவும் அவரைப் பொறுத்தவரை இயல்பானதே.

இப்படிப்பட்ட இந்தக் கதை, "தழுவல் கதை" என்ற குற்றச் சாட்டுக்கு இலக்காயிற்று. அதைக் கல்கி வன்மையுடன் மறுதலித்தார். வேறு சில சிறு கதைகளைத் தழுவல் முறையில் எழுதியதாக ஒப்புக் கொண்ட அவர், இந்தக் கதை அப்படியானதல்ல என்றார்.

இந்தத் "தழுவல்" விவகாரத்தையும், அதன் தொடர்பான நிகழ்ச்சிகளையும், பொதுவாகப் படைப்பு மனம் இயங்குவது எப்படி என்பதையும், அடுத்தாற்போல் கவனிப்போம். (தொடரும்)



Creative Unit-A 1981-Tam



'ஜா கதை'
"என் கதை பிரசுரமானால் நான் உங்களுக்கு 'ரமான் போனஸ்' ஸ்டாம்பு தருவேன்!"
"இந்தக் கதையில் நாய், கரடி, கழுதை, பல்லி, பூரான் இவைகளே பாத்திரங்களாக வந்தாலும் நீங்கள் படம் போடும்போது ஒரு 'டீன் ஏஜ் பெண்ணை'ப் படம் போட்டு விடுங்கள்!"
'இவர்தான் எழுத்தாளர் 'பெருங்காப்பியன்'. டபிள் டபிளாகக் காப்பி குடிப்பார்! இதுவரை 90 நாவல்களையும் 617 சிறு கதைகளையும் காப்பி அடிச்சிருக்கார்!"
"ஆபீசில் ஏதோ நடந்திருக்கு! ஆசிரியர் கோபத்தில் வெறி பிடித்தவர் போலிருக்கிறாரே? ஒண்ணும் நடக்கவில்லே! நான் சில ஜோக்குகளைக் கொடுத்துட்டு வந்தேன்!"
"இவர்தான் தழுவல் எழுத்தாளர் தனி காசலம்! இதுவரை 101 பிறமொழி நாவல்களையும் 999 சிறுகதைகளையும் தழுவி எழுதி இருக்கிறார்!"



''இந்த நாவலை இன்னும் பரிசீலிக்கவில்லை. அதற்குள் யார் இதைக் கம்போஸ் செய்து 'காலி'யாக அனுப்பி இருக்கிறது?''


''இந்த நாவலை எழுதியவர் ஒரு கம்பாசிடர்! எழுதுவதற்குச் சோம்பல் பட்டுக் கொண்டு இப்படி அனுப்பி இருக்கிறார்!''




''மாமா! நீங்கள் கொடுத்த பதினையாயிரம் வரதட்சணையும் உங்கள் மகள் படிக்கும் பத்திரிகைகளுக்குச் சந்தா கட்டப் போதவில்லை!''

புருப் ரீடரின் கல்யாணப் பத்திரிகை அனுபந்தம்:

மணமகள் பேதவல்லி என்பதை வேதவல்லி என்று திருத்தி வாசிக்கவும்.



''வந்திருக்கிறது நல்ல வரன் தான்! ஆனால் பெண்ணைக் கொடுக்க மனசுக்குக் கலக்கமா இருக்கு! நான் பத்திரிகை ஆசிரியன்! அவரோ வேஸ்ட் பேப்பர் வியாபாரி!''






''இருக்கிற அத்தனை அவார்டுகளையும் வாங்கிய நீங்கள் வாலண்டரி டிஸ்க்ளோஷரில், உள்ள சொத்துக்களை கணக்கு கொடுத்தால் 315 சிறுகதைகளும் 114 நாவல்களும் தேறும்! எல்லாம் பிரசுரமாகாமல் பதுங்கியவை.''

லோகநாதன் கம கமவென்று மணக்கும் கரத்தை சுரம் போகுமுன் மோந்து பார்த்து அனுப வித்துவிட்டுக் கைக்குட்டையில் அழுந்தத் துடைத் தான். ஹோட்டல் சாப்பாட்டிலேயே அவன் வருஷக் கணக்காக வாழ்ந்து, வளர்ந்து, வருப வன். உடலுக்கு ஆரோக்கியமோ, இல்லையோ, தெரியாது. ஆனால் இந்த இந்திர பவன் சாப்பாட் டுக்கு ஈடானதாகச் சுவையிலும் மணத்திலும் வீட்டுச் சமையலைக்கூட ஏற்றுக் கொள்ள முடி யாது என்று ஒரு சமாதானத்தை முணுமுணுத்த வாறு, ஹோட்டல் உள்ளே யிருந்து வெளிவந்த லோகநாதன் சாலையைத் தாண்டி எதிர்ப்புறம் சென்றான். காரணம், எதிரே தபால்காரர் நின்று கொண்டு அவனைப் பார்த்துத் தம் சைக்கிள் மணியை ஒலித்து அழைத்ததுதான்.

லோகநாதன் தனக்கு வந்திருந்த கடிதத்தை வாங்கிக் கொண்டு நடையைக் கட்டினான். ஒரு கவர் அவன் பேருக்கு இருந்தது. அவனுக்கு வியப்புத் தாங்கவில்லை. ஊரிலிருந்து அம்மா தான் எழுதியிருந்தாள். கடிதத்தைப் பிரிக்காமல் மேலிருந்து கவனித்ததிலேயே நடுவில் என்னவோ கனத்தது. ஏதேனும் விபூதி குங்குமம் பொட்ட லங்களாக இருக்கும் என்றும் தோன்றவில்லை.

நீல மலர்



ஏனெனில் உள்ளே இருந்த வஸ்து பட்டையாகச் சிறிது பரவலாக நெருடியது.

அவன் கடிதத்தின் உறையைக் கிழித்துப் பிரித்தான். அவனுக்கு அங்கு ஓர் அதிசயம் காத்திருந் தது. ஒரு சிறு புகைப்படம் பளா பளாவென்று கண்ணைப் பறித் தது. லோகநாதன் படத்தில் இருந்த பெண்ணைப் பார்த்ததும் ஒரு கணம் பூரிப்பால் திகைத்துப் போனான். அம்மாதான் அனுப்பியிருந்தாள். கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறாள் பார்க்கலாம் என ஆவலோடு வாசிக்கலானான்.

''இத்துடன் ஒரு பெண்ணின் படம் வைத் திருக்கிறேன். உனக்குப் பிடித்திருக்கிறதா என்று பார். பார்த்து உடனே சம்மதம் என்று மறு தபாலில் பதில் போடு. பெண்ணைச் சேர்ந்தவர்கள் கல்யாணத்தைக் கூடிய சீக் கிரம் செய்து முடித்துவிட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிறார்கள். மனுஷ் யர்கள் மிகவும் நல்லவர்களாகத் தெரிகிறது.

பெண்ணுக்குக் காதில் வைரத் தோடு. கழுத்தில் நாலு வடம் சங்கிலி பண்ணிப் போடுகிறார்கள். எனக்கு அவர்களைப் பிடித்துப் போய்விட்டது. உடனே உன் பதிலை எதிர் பார்க்கிறேன். வரதட்சிணைகூட வாங்கியாகி விட்டது. பத்தாயிரம். — இப்படிக்கு உன் பிரியமுள்ள அம்மா.''

இந்தக் கடிதத்தை வாசித்தவன் மீண்டும் புகைப்படத்தைக் கண்ணெதிரே பிடித்து நோக்கினான். அம்மாவுக்குப் பெண்ணைப் பிடித்தாகி விட்டது என்றால், மேலே 'அப் பீல்' ஏது? பெண் என்றால், அவளுக்கு உரிய நகை நட்டும், பணம் சீர் வரிசைகளும் அம்மாவுக்குத் திருப்தி என்று ஆனபின் வேறு பேச்சு ஏது? பெண்ணைப் பிடித்திருக்க வேண்டியவன் அவன்?

குடைந்து குடைந்து ஆராய்ச்சி செய்து குற்றம் கண்டு பிடிப்பதற்கான தோற்றம் அல்ல. தாடை இரு புறமும் சற்று ஒடுங்கிச் சப்பிய பங்களூரான் மாங்கொட்டை மாதிரியான முகம். போதாக் குறைக்கு மோவாய் முன் பக்கம் முந்திக் கொண்டு வந்திருந்தது படத்தில் நன்றாகத் தெரிந்தது. இத்தனைக்கும் படம் நேர்முகத் தோற்றம்தான்! பக்க வாட்டில் எடுத்ததாக இருந்திருப்பின் வேறு வினையே வேண்டாம். அசல் நம் 'ஒரிஜினல்' மூதாதையரை நினைவூட்டும் சாயல் அப்படியே முத்திரையிட்டிருந்தது. மகா பாவம், அப் படியெல்லாம் யாரையும் சொல்லப்படாது. ஈசுவர சிருஷ்டியில் எவ்வளவோ இருக்க.

லோகநாதன் படத்தையும் கடிதத்தையும் உறையினுள் அடக்கம் செய்தான். 'பெண் பிடித்திருக்கிறது' என்று ஒரு பொய்யைச் சொல்லித் தொலைக்க வேண்டியதுதான்...அங்கே அம்மா 'அட் வான்ஸ்' வாங்கியாகி விட்டது என்பது மட்டுமல்ல காரணம். அவனுக்கு வயது நாற்பது தாண்டி நாலு ஆண்டு பூர்த்தியாகி விட்டது. அவன் என்ன, அவன் தம்பி பவானி சாகரிலே உதவிப் பொறியாளராக இருக்கிறானே, நரசிம்மன், அவனுக்கே பிராயம் நாற்பது தாண்டி நாலு மாதம் ஆகிறது. இந்த மாதிரியாகச் சில குடும்ப வாகு!


தன் பையனுக்கு ஒரு பெண்ணைப் பார்த்து முடிச்சுப் போட்டு வைக்க வேண்டும் என்ற ஞானோதயம் இப்போதாவது அம்மாவுக்கு வந்ததே என்று லோகநாதன் பூரிக்க வேண்டிய நிலையில் இருந்தான். காரியாலயம், நண்பர்கள் குழாம், நடுத்தெரு — இப்படி எங்கே போனாலும் எவ்வளவு அவமானம், கிண்டல் பேச்சுக்கள், கேலிக் காட்சிகள்!

ஒரு நாள் நண்பன் எவனோ வாயைக் கிளறுகிறான்: ''ஏண்டா, உன் தம்பிக்கு வயசு நாற்பது ஆகியிருக்குமே? உன்னுடைய அம்மா இன்னும் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாள்? ஒரு பெண்ணை இழுத்துக் கழுத்தில் கட்ட வேண்டியதுதானே?''

விளக்கெண்ணெயைப் பருகிய முகக் களையுடன் லோகநாதன் விடையிறுக்கிறான்: ''அது எப்படி முடியும்? எனக்கே இன்னும் கல்யாணம் ஆகவில்லையே?''

உலகமே அதிருகிறாற்போல் ஒரு சிரிப்புடன் பேசுகிறான், தோழன்: ''ஓஹோஹோ! உனக்குக் கலியாணம் என்று ஒன்று நடக்கப் போகிறது என்று நம்பி, அந்த நம்பிக்கையில் தம்பி காத்துக் கொண்டிருக்கிறானா? பலே!''

'கொல்'லென்று யாவரும் சிரிக்க, அவன் அவமானம் தாங்காமல் தலை குனிந்தான். இதற்குள் இன்னொருவன் பேசுகிறான்: ''வயசு நாற்பது ஆனால் என்ன? இவன் தம்பி சூப்பிரண்டிங் என்ஜினிய



ர. வெங்கடரத்தினம்

சிறப்புச் சிறுகதை

நம்பி

ராக ஆனைப்புறம் கல்யாணம் பண்ணினால் வரதட்சிணை இரண்டு லட்சம் வாங்கலாம் என்று அம்மா யோசனை பண்ணி வைத்திருப்பாள்.....!

''சரியான ஜோக்! சூப்பிரண்டிங் என்ஜினியருக்குக் கல்யாணமா? சாதாரணமாய் எஸ். ஈ. ஆனவர்கள் பேரன் பேத்திகளுக்குக் கல்யாணம் பண்ணுவார்கள். கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படியானால், சீஃப் என்ஜினியர் ஆகவே ஆகிவிடட்டும் உன் தம்பி. ஒரு கோடி ரூபாய் அடிக்கலாம் அம்மா!''

தன் பிழைப்பு இப்படிச் சந்தி சிரிக்கிறபோது, தாடை முன்புறம் எவ்வளவுதான் நீண்டிருந்தால் என்ன, பெண்ணைப் பிடிக்கவில்லை என்று மறுதளிக்க அவனுக்குப் பைத்தியமா? முதற் காரியமாக அம்மாவுக்கு இசைவு தெரிவித்துவிட வேண்டும்.

வெளிப் பூட்டைத் திறந்து கதவைத் தள்ளிக்கொண்டு கூடத்தில் நுழைந்தவன் வழக்கமாக முற்றத்துக் கதவையும் திறந்து வைப்பான். அங்கே கொடியில் உலர்த்தியுள்ள துணி மணிகள் காய்ந்திருந்தால் எடுத்து மடித்து வைப்பான். இப்படியொரு வழக்கம் வருஷக் கணக்கில் வந்தது. கொடியில் பனியனும் உள்ளாடையும் பத்திரமாக இருந்தன. பக்கத்தில் ஓர் அதிசயக் காட்சி!

அவன் இரண்டாம் தடவையாக அன்று திகைத்து நின்றான். கொடியில் அவனுடைய பனியனை யொட்டி ஒரு நீலத் துணி! தயங்கிக்கொண்டே அதைக் கையில் எடுத்தான். மொட மொடவென்றிருந்த அந்த நீலத் துணி, பெண்ணின் பிளவுஸ் எனக் கண்டதும் அவன் கைகள் வெட வெடவென்று நடுங்கலாயின. மறு விநாடி அவன் சமாளித்துக்கொண்டான். நல்ல சகுனம்தான் இது. இந்த வீட்டுக்கு ஒரு பெண்மணி வரப்போகிறாள் என்பதை முன்கூட்டிக் கட்டியம் கூற வந்த முன் அறிவிப்பு இது!

நீல பிளவுஸை மடித்து வைத்தான்.

காகிதத்தை எடுத்துக் கடிதம் தயாரிக்க அமர்ந்தான். சந்தேகத்துக்கே இடம் இராவண்ணம் பெண்ணைப் பிடித்திருக்கிறது என்று வீணில் ஒரு பொய்யும் சொல்லாமல், வெகு சாமர்த்தியமாகப் பழியைப் பெற்றவள் தலைமீதே போட்டு, ''உனக்குப் பெண் பிடித்திருந்தால் போதும். எனக்கும் பிடித்தாற்போலத்தான்'' என்று எழுதினான்.... இரண்டு முறை வாசகத்தை வாசித்துவிட்டுக் கடிதத்தை உறையில் அடக்கம் செய்தான்.

தன்னைத் தெருவில், ஓட்டலில், அலுவலகத்தில், நண்பர் வீட்டில் எல்லாம் பலரும் பரிகசித்த காட்சிகள் அவன் கண் முன் தோன்றி மறைந்தன. அதற்கெல்லாம் ஒரு விடிவு காலம் இதோ வந்துவிட்டது. தபாலைக் கட்டில் சேர்க்கக் கிளம்பினான். கடைசியாக அன்று நடந்த காட்சி கண் எதிரே தெரிந்தது.

லோகநாதன் தன்பாட்டுக்கு வீதியில் போய்க் கொண்டிருக்கிறான். எதிரே ஒருவர் மீது ஒருவர் இடித்துக் கொண்டு, ஒரு தம்பதி வருவது தெரிகிறது. லோகநாதனுக்குக் கால்கள் நடுக்கம் எடுக்கின்றன. பயந்துகொண்டே நடக்கிறான். எதிரே வருபவர்கள் நெருங்குகிற கட்டம். அவன் நினைத்தது சரியாகப் போய்விட்டது. வந்தது அவனுடைய நண்பன் வேதாந்தமும் அவன் மனைவியும் தான். என்ன செய்வது என்று தோன்றவில்லை. லோகநாதன் சட்டென்று பக்கத்தில் இருந்த சந்தில் நுழைகிறான். பின்னாலிருந்து தெருவே இடிந்து விடுகிற குரலில் ஓர் அழைப்பு: ''டேய் பழிகாரப் பிரம்மசாரி!''

தலையைத் திருப்பாது தப்ப முடியவில்லை. லோகநாதனைப் பார்த்து வேதாந்தம் ஓர் ஆவர்த்தம் முழுசாக விளாசினான். ''ஏன்டா இப்படி அவதிப்படுகிறாய்? அம்மா கிட்டே சொல்லி ஒரு கல்யாணத்தைப் பண்ணித் தொலைக்கிறதுதானே? இது கூடவா ஊரார் சொல்லித் தரவேண்டும்? நாங்கள் பாட்டில் வந்து கொண்டிருக்கிறோம். அதற்காக நீ ஏன் கண்ட சந்து பொந்தில் எல்லாம் நுழைந்து, பதுங்கி ஓடி ஒளிய வேண்டும்?''

லோகநாதனுக்கு இனி அந்தத் தலைகுனிவெல்லாம் தனக்கு ஏற்படாது என்று மனத்துக்குள் திருப்தி. வெளியில் அலமாரியில் வைத்திருந்த நீல பிளவுசை ஒரு தடவை கையில் எடுத்தான். எந்த அழகி அணிந்து கொண்டதோ என்ற எண்ணம் அவனை நீலக் கொள்ளா இன்ப உலகுக்குக் கொண்டு சென்றது. மறு கணமே அவன் விழிப்புற்று, மரியாதையாக அதை எடுத்து உள்ளே பெட்டியடியில் வைத்தான். பெண்ணின் ரவிக்கை இங்கு எப்படி வந்தது என்று நாளைக்கு வரக்கூடிய புகைப்படக்காரி கேட்பாளோ?

லோகநாதன் வீட்டைப் பூட்டிக்கொண்டு கிளம்புகிற தருணம். ''சாமீ! சாமீ!'' என்ற குரல் வீட்டு வாசலிலிருந்து கேட்டது. லோகநாதன் யாரென்று பார்த்தான். இவன் ஏன் நம்மைத் தேடி வந்தான்? வீட்டுக்கே வந்து ஜால வித்தை காட்டப் போகிறானோ? என்று லோகநாதன் திகைத்தான், குரங்காட்டியைக் கண்டதும்.

''சாமி, இங்கே எதுனாச்சும் நீல ரவிக்கை வந்துதா?''

லோகநாதன் பேயறைந்தவன் போல நின்றான்.

''கொஞ்சம் பார்த்துடு சாமீ. ரவிக்கை புச்சு. கஞ்சி மொட மொடப்பு நம்ம கண்மணிக்கு உறுத்துமினுட்டு நனச்சுப் போட்டேன். காத்துலே பறந்து போச்சு!''


லோகநாதன் பெட்டியின் அடியிலிருந்து உருவிக் கொண்டு வந்து நீட்டினான் அந்த நீல ரவிக்கையை.

''இதுதான் சாமீ, நீ நல்ல ஆளு!''


தான் கண்ணில் ஒற்றி, உச்சி மோந்து, பரம பக்தியுடன் பத்திரப்படுத்திய நீல பிளவுஸை இப்போது குரங்காட்டியின் கண்மணி அணிந்து கொண்டு வீதியில் நடந்து செல்வதைப் பார்க்கும்போது, லோகநாதனுக்கு வெளியே சொல்லிக் கொள்ள முடியாத வேதனையும் வெட்கமும் பிடுங்கித் தின்றன!

''ஓர் ஆண் சாதாரணமாகத் தன் மனைவியைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் அன்பாக நடத்துகிறான்.''

— காரவான் — பாபு




உடலின் மேலோடு உள்ள தொல்லையை



ஆழ்ந்து அகற்றும் களிம்பு—
அமிர்தாஞ்சன் டெர்மல் ஆயின்ட்மென்ட்

சாதாரண களிம்புகள் சருமத்தின்
ஆழம்வரை எட்டாது. ஆனால் அமிர்தாஞ்சன் இதை எட்டும்
ஏனென்னில், சக்திவாய்ந்த சரும நிவாரணிகளின்
அபூர்வக் கலவை இது. சாதாரண
சரும நோய்களின் ஆதாரத்தை
அது எட்டும்; உடனடியாக அகற்றும்;
இயல்பான ஆரோக்கிய சருமத்தை
வெளிப்படுத்தும்.



அமிர்தாஞ்சன் டெர்மல் ஆயின்ட்மென்ட்,
படை, சொரி, மற்றும் பல சரும
நோய்களுக்கும் ஏற்ற லட்சிய நிவாரணி.
இன்றே ஒன்று வாங்குங்கள்!

அமிர்தாஞ்சன் லிமிடெட் 14/15 லஸ் சர்ச் ரோடு, சென்னை 600 004

SAA AM/1906

வாழ்க்கைத் துணைவிகளுக்கு ஓர் வாழ்நாள்-துணை!

ஆறு அளவுகளில் கிடைக்கிறது

Prestige

பிரார்த்தனைகள், தருமணங்கள். இசை, சிரிப்பு, சந்தேகன்னீரும் கூட. உங்கள் பெண்ணுக்குத் திருமணம். உணர்ச்சிகளை அடக்கப் பாடுபடுகிறீர்கள். மனத்திலே ஆயிரம் எண்ணங்கள் ஓடுகின்றன. நீங்கள் வழங்கிய சிறப்பானசீர் வரிசை: பிரஸ்டீஜ் பிரஷர் குக்கர், உங்கள் மகளின் சமையல் பிரச்னைகளைக் கவனித்துக் கொள்ளும் சிறப்புப்பரிசு அது. வாழ்க்கைத் துணைவிகளுக்கு என்றும் வாழ்நாள்-துணையாக விளங்கும் பரிசு.

சிக்கனமாக வாழ்க்கை நடத்தும் இளம் தம்பதிகளுக்கு காலமும் எரிபொருளும் மிச்சப்படுத்தும், பரிசும்,,பாதுகாப்பும் வசதியும்,சுத்தமும் ஒருங்கே இணைந்த பரிசுப் பொருள்.

பிரஸ்டீஜ் பயன் படுத்தும் 15 லட்சத்துக்கு அதிகமான குடும்பத் தலைவிகளுக்கு இந்த பிரஷர் குக்கர் ஒரு வாழ்நாள்-துணையாக இருப்பதில் என்ன வியப்பு?

எனவே, இன்றைய இனிய நாளை என்றும் நினைவில் இருக்கச்செய்ய, அவர்கள் என்றும் மறக்கமுடியாத பரிசினை அளியுங்கள்.

இரட்டிப்பு வசதியுள்ள மூடி, மூன்று கட்டங்களில் அமைந்துள்ள பிடியுடன் கூடிய ரப்பர் பாதுகாப்பு அடைப்பான் ISI தர முத்திரை. நாடெங்கிலும் ஸர்வீஸ் நிலையங்கள் — பிரஸ்டீஜின் சிறப்பு அம்சங்கள்.



கவனிக்கவும்: பிரஸ்டீஜின் அடிப்புறம் அதி கனமானது— நீண்ட ஆயுள். சீரான உஷ்ணத்தை அளிக்கிறது.


Prestige

பிரஸ்டீஜ் விற்பனையிலும் மக்கள் விருப்பத்திலும் இன்று இந்தியாவில் உயர்ந்து நிற்கும் பிரஷர்குக்கர்.

Prestige PREETT

டிடி. (பிரைவேட்) லிமிடெட்
பெங்களூர் 560 016

SAA/TTP/1784



கதை: **கௌசிகன்**
சித்திரம்: **மணியம் செல்வன்**

முன்னுரை

விஷ்ணுபிரசாத் ஒரு விஞ்ஞான மேதை. அணு சக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தும் ஆராய்ச்சித் துறையில் அளப்பரிய சாதனைகளைக் கண்டவர். பாரதம் பெருமைப்படும் இந்த அணு விஞ்ஞானியின் உலகமெல்லாம் அவருடைய ஒரே பெண் சாருமதிதான். ஹாஸ்டலில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தாள் சாரு. அவள் தன் கல்லூரிப் படிப்பை முடிக்கும் சமயத்தில் தகப்பனாரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. வடநாட்டில் ஏதோ ஓர் ஊரைக் குறிப்பிட்டு அங்கு தன்னிடம் வந்துவிடும்படி அதில் எழுதியிருந்தார் அவர். சாரு தகப்பனாரின் கடிதப்படி கிளம்புவதற்குத் தயாராகிக் கொண்டிருந்த போது ஒரு மனிதன் அவளைச் சந்திக்கிறான். தான் விஷ்ணு பிரசாத்தின் அந்தரங்க நண்பர் என்றும் தம் மகளைக் கையோடு அழைத்து வர அவர் தன்னை அனுப்பி இருப்பதாகவும் கூறுகிறான் அவன்.

சாருவுக்கு அதை நம்புவதைத் தவிர வேறு வழியில்லை. முன்பின் பார்த்திராத மனிதருடன் கிளம்ப நிச்சயித்து விடுகிறாள். அந்த அளவுக்கு அவன் அவள் தந்தையைப் பற்றிக் கூறி அவள் மனத்தைக் கவர்ந்துவிடுகிறான்.

லக்ஷ்மண் என்ற அந்த மனிதனுடன் சாரு தன் தந்தையை நாடிக் கிளம்புவதற்கு முதல் நாள் ஓர் இளைஞன் சாருவைச் சந்திக்கிறான். கள்ளம் கபடமற்ற அவன் தோற்றமும் பார்வையும் அவனை ஒரு நாட்டுப்புறத்து நல்லவனாகக் காட்டுகிறது. விஷ்ணுபிரசாத்தின் கைப்பட எழுதிய கடிதம் ஒன்றைச் சாருவிடம் கொடுக்கிறான். அதில் அவள் தந்தை அந்த வாலிபனுடன் அவள் கிளம்பித் தம் இருப்பிடம் வரும்படி எழுதி இருக்கிறார். சாருவுக்குக் குழப்பமும் பீதியும் ஏற்படுகிறது. இவ்விருவரில் யாரை நம்புவது ?

மாதவன் என்ற அந்த இளைஞன் அவள் மனக் குழப்பத்தை அறிந்து, ''உன் தகப்பனார் அபாயத்தில் இருக்கிறார். சில தீய சக்திகள் அவரது திறமையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள முயற்சி செய்கின்றன. அதற்கு அவர் இணங்காததினால் அவர் உயிராக நேசிக்கும் உன்னைக் கடத்திப் போய் உன்னைக் கருவியாக்கி அவரைப் பணிய வைக்கப் பார்க்கிறார்கள். உன் தகப்பனார் அவர்கள் பிடியிலிருந்து தப்பி அவர்களுக்குத் தெரியாத ஓரிடத்தில் மறைந்திருக்கிறார். இன்றைக்கு உன் தகப்பனாருடைய உயிரின் விலை ஒரு கோடிக்கும் மேலே ! அவரை வெளிவரச் செய்து தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ளவே உன்னைக் கடத்திப் போகத் திட்டமிட்டிருக்கிறார்கள். அவர்கள் விரித்த வலையில் விழுந்து விடாமல் உன்னை விடுவித்துத் தம்மிடம் அழைத்து வரவே அவர் என்னை அனுப்பியுள்ளார். நீ ஒரு விநாடியும் தாமதிக்காதே... என்னுடன் கிளம்பு. அந்தக் கயவர்களின் பார்வையில் படாமல் நாம் தப்பிவிட வேண்டும்'' என்கிறான் மாதவன். ஆனால் இவர்கள் திட்டமிட்டுத் தப்ப நினைப்பது லக்ஷ்மண் பார்வையிலிருந்து தப்பவில்லை. இனி சாருவுடனும் மாதவனுடனும் நீங்களும் கிளம்பலாம்.


இனிப் பயமில்லை. அவர்கள் நம்மைப் பின் தொடரவில்லை.
இவனை மட்டும் எப்படி நம்புவது? என் தகப்பனாரின் கையெழுத்தை இவன் 'ஃபோர்ஜரி' செய்திருந்தால்...?
ஏன், எதற்காகத் தயங்குகிறாய்.
உஷ்... யாரோ நம்மைப்பின் தொடருகிறார்கள்..
எனக்கு எவ்வித ஓசையும் கேட்கவில்லையே. யாரோபின் தொடருவதாக இவன் இப்படிக்கலவரமடைவானேன்?
நிச்சயமாகச் சொல்லுகிறேன் அவர்கள் இந்தப்பக்கமாகத்தான் வந்தார்கள், பாஸ்!
முட்டாள்! அந்தப் பெண் மட்டும் தப்பினாளோ, உன்னை நான் என்ன செய்வேனோ தெரியாது...
காலடிகளை மெதுவாக வைத்துச் சத்தப்படுத்தாமல் நடந்து வா....
அந்த இருளில் எத்தனை நேரம் நடந்தோம் என்பதே தெரியாத நிலையில்...
பாதுகாப்பான இடத்துக்கு வந்து விட்டோம் சாரு. எனக்கு வேண்டியவர்கள் இங்கிருக்கிறார்கள். இரவை இங்கு பயமின்றிக் கழிக்கலாம்.


மாதவன் கிராமத்தில் ஒரு குடிசையின் கதவைத்தட்ட, அது திறக்கிறது.
கங்கா பாயின் மகன் மாதவன் நான். சில கொடியவர்களிடமிருந்து தப்ப, இன்றிரவு இங்கு எங்களுக்குப் பாது காப்புத்தர வேணும்.
உள்ளே வாருங்கள்.
குடிசையிலுள்ளவர்கள் யாரும் அவனுடன் பேசாவிட்டாலும் அவர்கள் தன்னை வெறுக்கவில்லை என்பதை உணர்ந் தாள் சாரு.
உன் தகப்பனை இவர்களுக்குத் தெரியும். மிகவும் நல்லவர்கள். இந்த எளிய உணவு காலையில் உனக்கு செயல்படத் தெம்பூட்டும், சாப்பிடு.
கூழ் மாதிரி இருந்தாலும் அது சுவையாக இருந்தது. விடியும் வரை பயப்படத் தேவையில்லை. அது சரி, அப்பாவிடமிருந்து அந்த மனிதன் லக்ஷ்மன் எதை எதிர் பார்க்கிறான்? என்னையும் மாதவனையும் இப்படி விரட்டி வருவானேன்? ம்.. தூக்கம் கண்ணைச் சுற்...
இருள் விலகாத காலை வேளை. மாதவன் சாருவை எழுப்பினான்.
சாரு, எழுந்திரு. அதிகாலையில் கிளம்பினால் தான் விரைவாகச் செயல்பட முடியும். கிளம்புமுன் நாம் உருமாற்றம் செய்து கொள்ள வேண்டும்.
ரயில்வே ஸ்டேஷனில்-
நேற்றிரவுதான் கோட்டைவிட்டாய். இப்போது கவனமாகப்பார். இந்த ஸ்டேஷனிலிருந்து மேற்கே செல்லும் ஒரே வண்டி இது தான். அவர்கள் நிச்சயம் இதில் ஏற வந்தேயாகவேண்டும்.

தொடரும்-

அரைத் தூக்கத்தில் இருந்த சவிதா தொலைபேசி மணியோசை கேட்டு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

"யாரு பேசறது?"

"............"

"நீங்களா? என்ன விசேஷம்?"

"........."

"அப்படியா? தாராளமாய் அழைத்துக் கொண்டு வாருங்களேன்! என்னைக் கேட்பானேன்?"

"............"

"இதில் நினைத்துக் கொள்ள என்ன இருக்கிறது? எனக்குத் தெரிந்த ஆண் பிள்ளை யாராவது என்னைத் தேடிக் கொண்டு நம் வீட்டுக்கு வந்தால் நீங்கள் தப்பாக நினைப்பீர்களா, என்ன?"

"......."

"சரி! அந்தப் பெண் வந்ததும் சூடாக அடை தட்டினால் போயிற்று. காப்பிப் பொடி இல்லையே? போர்ன்விடா குடிப்பாளா?"

"........"

"காப்பி சாப்பிட மாட்டாளா? அப்படியானால் ரொம்ப நல்லதாய்ப் போச்சு.... ஐந்தரைக்கெல்லாம் நீங்கள் வந்து விடுவீர்கள், இல்லையா?"

சுந்தரம் ஒலி வாங்கியை வைக்கிற ஓசை காதில் விழுந்ததன் பிறகு சவிதாவும் ஒலி வாங்கியை வைத்துவிட்டு வாய்க்குள் சிரித்துக் கொண்டாள். 'அடியம்மா! ஒரு பெண்ணைத் தம்முடன் அழைத்துக்கொண்டு வருகிறாராம். இதற்கு இவ்வளவு குழைகிறார். நான் ஒன்றும் தப்பாக நினைத்துக் கொள்ளக் கூடாதாம். அவள் ஒரு ரசிகையாம். நல்ல பேச்சாளியாம். நன்றாகச் சிரிக்கத் தெரிந்தவளாம். என்னையும் பார்க்க வேண்டும் என்று ரொம்பவும் ஆசைப்படுகிறாளாம். அதனால் வேறு வழியில்லாமல் — தட்டிக் கழிக்க முடியாமல் அழைத்துக் கொண்டு வருகிறாராம்...'

சவிதா கல்லுரலில் அரிசியைப் போட்டு அரைக்கத் தொடங்கினாள். 'இவருக்குத் தான் எத்தனை ரசிகர் ரசிகைகள்! தமக்கு வருகிற தொலைபேசி அழைப்புக்களைத் தாள முடியாமல் அதையே எடுத்துவிடலாமா என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்....'— அவளுக்குத் தானும் ஒரு காலத்தில் அவனது எழுத்தில் மயங்கி அவனுடைய ரசிகையானதும் அந்த ரசிகைத்தன்மை அவன் கதைகளை அவளும் அவளது ரசனையை அவனும் ரசிப்பதோடு நில்லாமல் ஒருவர் மீதொருவர் ரசனை கொள்ளுகிற அளவுக்கு மிகக் குறுகிய காலத்துக்




சொந்தம் கொண்டாடுதல்!

சிறப்புச் சிறுகதை

குள் வளர்ந்து பெற்றோரின் முழு இணக்கத்துடன் திருமணத்தில் முடிந்ததும் இப்போது ஞாபகத்துக்கு வந்தன...

ஆனந்தம் என்ற அந்தப் பெண் எப்படி இருப்பாள் என்ற கற்பனையில் சவிதா



மூழ்கிப் போனாள்.

அவளை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வருவதற்கு அவன் அவளது சம்மதத்தை முன்கூட்டியே பெற்றான் என்றால் அதற்கு ஏதேனும் நல்ல காரணம் இருக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றிற்று. அவள் ஆவலுடன் அவர்களின் வரவை எதிர்நோக்கி நின்றாள்.

கடைசியில் ஐந்தரை மணிக்கு ஸ்கூட்டர் ஓசை கேட்டு அவள் வாசலுக்கு வந்தாள். அவன் ஸ்கூட்டரை அலுவலகத்திலேயேவிட்டுவிட்டு டாக்ஸியில் அந்தப் பெண்ணுடன் வருவான் என்று எதிர்பார்த்த அவளுக்கு அந்த ஸ்கூட்டர் சத்தம் வியப்பை அளித்தது. அவள் ஓடோடிச் சென்று கதவைத் திறந்தாள். ஸ்கூட்டரின் பின்னிருக்கையிலிருந்து தொப்பென்று குதித்த ஓர் இளம் பெண்ணைக் கண்டதும் சவிதாவுக்குக் கொஞ்சம் தூக்கிவாரித்தான் போட்டுவிட்டது. அவனுக்குப் பின்னால் அவனது ஸ்கூட்டரிலேயே உட்கார்ந்து கொண்டு அவள் வரக்கூடும் என்று அவள் நினைத்தே பார்க்கவில்லை. தன்னையும் அறியாமல் மாறிப் போய்விட்ட முகத்தை மறுபடியும் அதன் இயல்புக்குக் கொண்டு வரப் பெரு முயற்சி செய்து அதில் வெற்றியும் கண்டவாறு அவள் புன்னகையுடன் அவர்களை வரவேற்கத் தயாரானாள்.

ஒரு கைப் பையுடன் சுந்தரத்தை முந்திக் கொண்டு அந்தப் பெண் – ஆனந்தம்—வாய் எல்லாம் சிரிப்பாக மிக விரைந்து வந்து அவளது வலக் கையைப் பற்றி அன்புடன் அழுத்திப் பிடித்துக் கொண்டாள். அவளது சிரிப்பிலும் அன்புமிக்க செய்கையிலும் அவள் தன் கணவரோடு ஸ்கூட்டரின் பின்னிருக்கையில் உரசுகிறாற் போல் உட்கார்ந்து கொண்டு வந்ததைப் பார்த்துவிட்டதால் தனக்குள் விளைந்திருந்த எரிச்சலைச் சவிதா ஓரளவுக்கு மறந்துவிட்டாள் என்றே சொல்ல வேண்டும்.

அவள் தட்டுக்களில் அடைகளையும் தொட்டுக் கொள்ள வெல்லம், மிளகாய்ப் பொடி அடங்கிய சிறு கிண்ணங்களையும் எடுத்துக் கொண்டு சென்று அவர்களுக்கு முன்னால் ஓர் அகன்ற முக்காலியை நகர்த்தி அதன்மீது அவற்றை வைத்துப் புன்னகையுடன் உபசரித்தாள்.

"....உங்கள் மிஸஸ் அழகாக இருக்கிறார்கள்!"

"அதை அவளிடமே சொல்லுங்கள்,' மிஸ் ஆனந்தம்! ஏனென்றால் ஒரு பெண் இன்னொரு பெண்ணைப் பார்த்து அவளது அழகைப் புகழ நான் கேட்பது இதுதான் என் வாழ்க்கையில் முதல் தடவை....."

சுந்தரத்தின் சிரிப்பும் அந்தச் சிரிப்போடு கலந்து தனியாக ஒலிக்க ஆனந்தத்தின் சிரிப்பும்கூட அவள் செவிகளில் நன்றாக விழுந்தன. சுந்தரம் அவளைக் கூப்பிட்டான். அவள் அவர்களுக்கு முன்னால் போய் நின்றாள்.

"சவிதா! நீ மிகவும் அழகாய் இருக்கிறாயாம்! மிஸ் ஆனந்தம் சொல்லுகிறாள்.."

சவிதாவுக்கு முகம் சிவந்தது. "நீங்கள் இருவரும் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டீர்களாமே? கேள்விப்பட்டேன்" என்று ஆனந்தம் தொடரவும் சவிதாவுக்குச் சிறிது வெட்கமாக இருந்தது.

"இன்று நாங்கள் பல விஷயங்களைப் பற்றிப் பேசினோம், மிஸஸ் சுந்தரம்! என்னுடைய பல சந்தேகங்களை உங்கள் கணவர் மிக அழகாகப் போக்கினார்.....".

"அப்படியா?"

கைகளைக் கழுவிக் கொண்டதன் பிறகு ஆனந்தம் தண்ணீர் குடித்தாள். சவிதா மறுபடியும் எழுந்து சென்று போர்ன்விடா கொணர்ந்து வைத்தாள். அதைப் பருகிக் கொண்டே ஆனந்தம் கேட்டாள்: "....ஓர் ஆணும் பெண்ணும் காலம் முழுவதும் கணவனும் மனைவியுமாகச் சேர்ந்து வாழ்வது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

அவளது கேள்வியின் முழுப் பொருளும் சவிதாவுக்கு விளங்காததால் அவள் ஒரு கணம் போல் சுந்தரத்தின் பார்வையைச் சந்தித்துவிட்டுக் கேட்டாள்: "நீங்கள் என்ன கேட்கிறீர்கள்?"

"அதாவது ஓர் ஆணும் பெண்ணும் ஒருவர் மீது ஒருவர் நிலையான ஆதிக்கத்தை வாளுள்



"கீழே சமையலறை, மாடியில் படுக்கை அறை என்று இருந்ததை, கீழே படுக்கை அறை, குளியலறை, மாடியில் சமையலறை என்று மாத்திட்டியாமே! ஏண்டி?"

"என் மாமியாருக்கு பிரஷர் என்று தெரிந்தது!"

முழுவதும் செலுத்தலாமா? அதில் என்ன சுவாரசியம் இருக்க முடியும்? ஒரு பெண் தன் கணவன் தனக்கு மட்டுமே சொந்தம் என்று நினைப்பதும், அதேமாதிரி ஓர் ஆண் தன் மனைவி தனக்கு மட்டுமே உரியவள் என்று நினைப்பதும் அநாகரிகமாக எனக்குத் தெரிகின்றன. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உங்கள் கணவர் உங்களுக்கு மிகுந்த கருத்துச் சுதந்திரம் அளித்திருப்பார் என்பது எனக்குத் தெரியும். அதனாலேயே அவர் முன்னிலையிலேயே இந்தக் கேள்வியை நான் கேட்கிறேன்......"

"அவரை முதலில் கேளுங்கள்" என்று சவிதா சிரித்தாள். அந்தக் கேள்வியே அவளுக்குப் பிடிக்கவில்லை என்பதை அவள் முகம் போன போக்கிலிருந்து சுந்தரம் புரிந்து கொண்டான்.

"நான் அப்புறம் அவரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுகிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள்!"

தன் கணவனோடு ஸ்கூட்டரில் உட்கார்ந்து கொண்டு வந்த அவளது செய்கை தனக்குப் பிடிக்கவில்லை என்பதை அவளுக்கு உணர்த்த ஒரு சரியான வாய்ப்பு அது என்று சவிதாவுக்குத் தோன்றினாலும் முதன் முதலாக வீட்டுக்கு வந்துள்ள விருந்தாளி என்பதனாலும் கொஞ்சம் வெகுளித்தனமாகத் தோன்றுகிற அவளைத் தன் பதில் புண்படுத்தி விடக்கூடும் என்பதாலும் அவள் அந்தக் கேள்வியையே தவிர்ப்பது என்று முடிவு செய்தாள்.

"ரொம்பவும் யோசித்துப் பதில் சொல்ல வேண்டிய கேள்வி இது. எனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்!"

"அதுவும் சரிதான்!...." என்று ஆனந்தம் ஒப்புக் கொண்ட மாதிரியில் புன்னகை செய்தாள். சுந்தரம் அவர்களின் உரையாடலில் கலந்து கொள்ளாமல் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு சும்மா இருந்தான். அதற்குப் பிறகு மூவரும் எதை எதையெல்லாமோ பேசினார்கள். கடைசியில் இரவு ஏழு மணிக்கு ஆனந்தம் விடைபெற்றுச் சென்றாள்.

அவள் போனதன் பிறகு, "நல்ல பெண் இவள்!" என்றாள் சவிதா. அவள் கண்களில் தெறித்த கேலியிலிருந்து அவளை இவளுக்குப் பிடிக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்ட சுந்தரம், "என்ன சவிதா? கொஞ்சம் வெகுளித்தனம் நிறைந்த பெண். வேறொன்றுமில்லை" என்று பதில் சொல்லிவிட்டு அவளைக் கூர்ந்து பார்த்தான்.

"......அது சரி, அவளைப் பின்னால் வைத்துக் கொண்டு ஸ்கூட்டரில் ஏன் வந்தீர்கள்? டாக்சியில் வந்திருக்கலாமே? அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் என்ன நினைப்பார்கள்?" என்று அவள் நேரடியாகக் கோதாவில் இறங்கியதும், அந்தக் கேள்வியை எந்தக் கணமும் எதிர்பார்த்துக் கொண்டே இருந்தவனுக்கு உரிய நிதானத்துடன், "அக்கம் பக்கத்தில் இருப்பவர்களைவிட நீ என்ன நினைக்கிறாய் என்பதுதான் எனக்கு முக்கியம், சவிதா!" என்று அவன் குழைவாகப் பதில் சொல்லிவிட்டு அவள் கண்களையே பார்த்தான்.

"எனக்கும் அது சரியாகத் தோன்றாததாலேயே இந்தக் கேள்வியை நான் கேட்கிறேன் என்பது உங்களுக்குப் புரியாவிட்டால் வேறு யாருக்குப் புரியும்?"

"அப்படி நேர்ந்துவிட்டது, சவிதா! நான் ஸ்கூட்டரைப் பூட்டியபோது, 'ஏன் பூட்டுகிறீர்கள்? நாம் ஸ்கூட்டரிலேயே போய்விடலாமே — உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால்?' என்று அவள் கேட்டுவிட்டாள். 'பெட்ரோல் இல்லை' என்று பொய் சொல்லியிருக்கலாம். ஏனோ எனக்குத் தோன்றவில்லை. அப்படியே சொல்லியிருந்தாலும்கூட அவள் புரிந்துகொள்ளாமல், 'பெட்ரோல் போட்டுக் கொண்டுவிடலாமே?' என்றுகூடச் சொல்லி என்னைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்தியிருப்பாள். மிகவும் வெகுளிப் பெண்ணாக இருக்கிறாள். ஆனால் பேசுகிற பேச்சென்னவோ மிகவும் முதிர்ச்சியான பேச்சாகத்தான் இருக்கிறது......"


அவள் பேசாமல் இருந்தாள். அவனே தொடர்ந்து பேசினான். "என் பதிலுக்குக் கூடக் காத்திராமல் அவள் சட்டென்று பின் இருக்கையில் ஏறி உட்கார்ந்துகொண்டுவிட்டாள்!" — முறையிடுகிற குழந்தையின் குரலைப் போல் அவன் குரல் ஒலித்ததைக் கவனித்துவிட்டு அவள் சிரித்தாள்.

"நல்ல பெண் இவள். சமயம் வரட்டும். இவளுக்குச் சரியான பாடம் கற்பிக்கிறேன்" என்று அவனைப் பார்த்துப் பதில் சொன்னாள்.

"அவள் மனம் புண்படும்படி ஏதாவது பேசிவிடப் போகிறாய்! அவள் ஒரு வெகுளி. அவ்வளவுதான். வேறொன்றுமில்லை....." என்று அவன் அவசரமாகச் சொன்னபோது அவள், "இன்னொருத்தியின் கணவனோடு ஸ்கூட்டரில் ஏறி வருகிற ஒரு பெண் — அதுவும் இருபத்தைந்து வயசுக்கு மேல் அப்படிச் செய்கிறவள் — ஒரு வெகுளி என்பதை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். நீங்கள்தான் வெகுளி" என்று சொல்லிவிட்டு மேற்கொண்டு அதைப் பற்றிப் பேச விரும்பாதவள் போல் சடக்கென்று உள்ளே போய்விட்டாள்.


அதற்குப் பிறகு ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று அவள் தொலைபேசியில் தகவல் சொல்லிவிட்டு மாலை நான்கு மணிவாக்கில் அவர்கள் வீட்டுக்கு வந்தாள். சில ஆப்பிள் பழங்களும் ஒரு பிஸ்கட் பொட்டலமும் வாங்கி வந்திருந்தாள்.

சிற்றுண்டி முடிந்ததும் மூவரும் உட்கார்ந்து அளவளாவத் தொடங்கினார்கள்.



அதிகாலையில்
ஸ்டேன்ஸ் காபி!
நாள் முழுவதும்
புத்துணர்ச்சி!!
ஒவ்வொரு கோப்பையிலும்
அதிக புத்துணர்ச்சி!
Stanes
தி யுனைடெட் காபி சப்ளை கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்

MAC(B) 1/75



வெற்றிகரமாக அழுக்கைப்போக்கும்
புதிய ரம்யா
தீவிரமாகச் சுத்தப்படுத்தும்
டிடர்ஜன்ட் வில்லை
NEW RAMYA
அழுக்குத்துணி
வெளுக்க—
பளீரென ஒளிவீச
மற்றொரு
தயாரிப்பை அளிப்போர்:
அல்ட்ராமரீன் & பிக்மண்ட்ஸ் லிமிடெட்
ராணிப்பேட்டை, தமிழ்நாடு
SAA/UPL/1922 TAM



ஜி.இ.ஸி. ஆஸ்ரம் டியூப்லைட்
ஆண்டுக் கணக்கில் உபயோகித்த பிறகும்கூட
பிரகாசமான ஒளியுடன் புதியதாயும் இருக்கின்றது
மங்காமல் அதிக காலம், ஒரே சீரான ஒளி:
இருபுற நுனியிலும் ஒருபோழுதும்
கருமை அடையாது!
GEC
Osram
Trade Mark GEC and Osram Permitted User—The General Electric Company of India Limited
OBM-4378A/3 TAM

தற்காலத் திரைப் படங்கள், இயக்குநர் பாலசந்தரின் திறமை, ஜெயகாந்தனின் தனித்துவம் வாய்ந்த எழுத்துக்கள் இவற்றை யெல்லாம் தொட்டுவிட்டுக் கடைசியில் ஆனந்தம் அன்று சவிதாவைப் பார்த்துத் தான் கேட்ட கேள்விக்கு வந்து நின்றாள்: "என்ன மிஸஸ் சுந்தரம்! அன்றைக்கு நான் கேட்டேனே ஒரு கேள்வி — அதைப் பற்றி இப்போது பேசலாமா?"

"ஓ! பேசலாமே?"

"அதாவது அன்றைக்கு நான் என்ன கேட்டேன் என்றால், ஒரு கணவனும் மனைவியும் வாழ்நாள் முழுவதும் ஒருவருக்கு ஒருவர் மிகவும் சொந்தம் பாராட்டிக் கொண்டு வாழ்வது பற்றிக் கேட்டேன்...."

"ஆமாம். ஆனால் அது மிகவும் இயல்பானது என்று நான் நினைக்கிறேன். அதில் கேள்வி கேட்பதற்கு எதுவுமே இல்லை என்று நினைக்கிறேன். அப்படி நன்றியும் சொந்தமும் பாராட்டி வாழாமை குறித்து நீங்கள் கேட்டிருந்தால் நான் மகிழ்ச்சி அடைந்திருப்பேன்......"

சவிதாவின் பதிலால் ஆனந்தம் சிறிது அதிர்ச்சி அடைந்ததாகத் தோன்றிற்று. ஆயினும் அதை மறைத்துக் கொள்ள முயலாதவாறே அவள் கேட்டாள்: "என் கேள்வி உங்களுக்குப் புரியவில்லை என்று நினைக்கிறேன். நான் சொல்லுவது, 'இவன் எனக்கு மட்டுமே சொந்தமானவன்' என்ற ஒரு மனைவியின் சொந்தம் கொண்டாடுகிற குறுகிய புத்தியையும், அதேபோல் 'இவள் எனக்கு மட்டுமே உரிமையானவள்' என்று ஒரு கணவன் தன் மனைவியின் மீது ஏகபோக உரிமை பாராட்டுவதையும் பற்றித்தான் கேட்டேன். அந்த உரிமை பாராட்டுதல் எனக்கு அசிங்கமாகத் தோன்றுகிறது. அதாவது அந்தக் குறுகிய எண்ணம் — 'பொஸெஸ்ஸிவ்நெஸ்' என்று ஆங்கிலத்தில் சொல்லுகிறோமே அது — மிகவும் அவமானகரமாகத் தோன்றுகிறது. மன வளர்ச்சி பெறாதவர்களே அப்படிச் சொந்தம் பாராட்டுவார்கள் என்று எனக்குப் படுகிறது. அந்தக் குறுகிய புத்தியை நான் வெறுக்கிறேன்....."

சவிதா இடிஇடி யென்று சிரித்துவிட்டுச் சொன்னாள்: "இவன் எனக்கு மட்டுமே சொந்தம் என்று ஒரு பெண் நினைப்பதிலும், இவள் எனக்கு மட்டும்தான் சொந்தம் என்று ஒரு ஆண் நினைப்பதிலும், குறுகிய புத்தி என்ற சொல்லுக்கே இடம் இல்லை. இந்தப் 'பொஸெஸிவ் நெஸை' விடுத்து நாம் வாழத் தொடங்கினால், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளின் நாகரிக வளர்ச்சியை நொடியில் புறக்கணித்து விட்டுக் கற்கால மனிதர்களாகி விடுவோம்."

"தயவுசெய்து தப்பாக நினைக்காதீர்கள். நான் உங்களை ஒரு கேள்வி கேட்கட்டுமா?"

"கேளுங்கள், மிஸஸ் சுந்தரம்!"

"பொஸெஸ்ஸிவ்நெஸ் என்ற உணர்ச்சியைக் குறுகிய மனப்பான்மை என்று கேலி செய்யும் நீங்கள் என் கணவரோடு எல்லை மீறிப் பழக முற்படுகிறீர்கள் என்று ஒரு பேச்சுக்கு வைத்துக் கொள்ளுவோம். எனக்குச் சொந்தமான என் கணவர் மீது நீங்கள் உரிமை பாராட்டுவது மட்டும் எந்த நாகரிகத்தைச் சேர்ந்தது? உங்கள் கணவர் அல்லாத ஒருவர்மீது நீங்கள் எவ்வாறு சொந்தம் கொண்டாடலாம் — அதாவது நீங்கள் எவ்வாறு 'பொஸ்ஸெஸ்ஸிவ்நெஸ்' என்ற அந்த உணர்ச்சிக்கு அவர்பால் ஆளாகலாம்? இது மட்டும் என்ன நியாயம்? பொஸெஸ்ஸிவ் நெஸ் என்ற அந்த ஏகபோக உரிமை உணர்ச்சி எல்லோருக்கும் எல்லார் மீதும் ஏற்படத் தொடங்கினால் இந்தச் சமூகம் என்ன ஆகும்?"

சுந்தரம் வியப்புடன் சவிதாவைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவளது கூற்றை நன்கு புரிந்துகொண்டு அதை ஏற்றுக் கொண்டதற்குமான ஒரு சம்மத உணர்ச்சி ஆனந்தத்தின் முகத்தில் பரவி நின்றதையும் அவன் கவனித்தான். அங்கே சட்டென்று ஓர் இறுகிய மௌனம் நேர்ந்துவிட்டது.

சவிதாதான் அந்த இறுக்கத்தைத் தளர்த்தினாள்: "என்ன பேசாமல் இருக்கிறீர்கள்? நான் சொன்னதை நீங்கள் ஒப்புக் கொள்ளவில்லையா?"

"ஒப்புக் கொள்ளுகிறேன், மேடம்!" என்று ஆனந்தம் புன்னகை செய்தவாறு வேறு பேச்சுக்குத் தாவினாள்.

அதற்குப் பிறகு ஒரு நாள் அவள் அவனைத் தேடிக் கொண்டு அலுவலகத்துக்கு வந்தபோது, "உங்கள் வீட்டுக்கு நாம் டாக்ஸியில் போகலாமே?" என்று அவளாகவே சொல்ல முன் வந்தபோது சுந்தரம் சவிதாவின் கெட்டிக்காரத்தனத்தை நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

இன்பத் தென்றல்

குல்ஷன் நந்தா

தமிழாக்கம்: ரா. வீழிநாதன்

16

"அநூப் எப்பொழுது வருகிறானும் ?"

அஜீத் திடுமென்று ஒரு கேள்வியைப் போடவே, சாரதா சுய உணர்வு பெற்றாள்.

"வந்துவிட்டானே ?"

"எப்பொழுது ?"

"இன்றுதான் !"

" எங்கே இருக்கிறான்?"

"நண்பர்களோடு கிளப்புக்குப் போயிருக்கிறான் !"

"அந்தப் பெண்ணைப் பற்றி அவன் என்ன சொன்னான் ?"

" என்ன சொல்வான் ? நீங்கள் நினைக்கிறாற்போல் இல்லை அவன். அவன் அக்காவுக்கு எந்தப் பெண்ணைப் பிடித்திருக்கிறதோ, அவளைத்தான் இந்த வீட்டுக்கு மருமகளாக அழைத்து வருவான் !" என்றாள் சாரதா.

இதே சமயம் தொலைபேசி மணி அடித்தது. எல்லோருடைய கவனமும் அதை நோக்கிச் சென்றது.

சாரதா ஓடிப் போய் ரிஸீவரை எடுத்தாள். ஏதோ ஒரு காவல் நிலையத்திலிருந்து வந்திருந்தது அந்த ஃபோன். அஜீத்தும் க்ஷமாவும் 'காவல் நிலையம்' என்ற பெயரைக் கேட்டதுமே திடுக்குற்றனர். சாரதாவின் முகத்தில் தோன்றி மறைந்த உணர்ச்சிகளைப் படித்துப் புரிந்து கொள்ள முயன்றனர்.

"என்ன ஆயிற்று, மன்னி ?"

சாரதா ரிஸீவரை வைத்ததும் வைக்காததுமாகக் கேட்டாள் க்ஷமா.

" அநூப்புக்கு ஆக்ஸிடெண்டாம் !" சாரதா பரபரத்த குரலில் கூறினாள்.

" என்ன, ஆக்ஸிடெண்டா ? எங்கே, எப்பொழுது, எப்படி? காயம் கீயம் படவில்லையே !" அஜீத்தும் பதறிப் போய்க் கேட்டான்.

"மயிரிழையில் பிழைத்து விட்டானும். சாதாரணச் சிராய்ப்புக் காயம்தானும்!"

" ஆண்டவன் காப்பாற்றினார் !" .

"ஆனால் கார் உருத் தெரியாமல் உடைந்து விட்டதாம். காவல் நிலையத்துக்குப் போக வேண்டும்."

" எந்தக் காவல் நிலையத்துக்கு ?"

" அம்பாலா – கால்கா எல்லையில் உள்ள காவல் நிலையத்துக்கு !"

சாரதாவின் தவிப்பைக் கண்ட அஜீத் ஆறுதல் கூறினான். அதே கையோடு காவல் நிலையம் போவதற்குத் தயாராகி விட்டான்.

அநூப் தன் தமக்கையுடன் வீட்டுக்குத் திரும்பிய பொழுது நள்ளிரவு ஆகிவிட்டது. அவன் வெட்கத்தினால் குனிந்த தலையை நிமிர்த்தவே இல்லை. சாரதா அந்த விபத்தைப் பற்றி எதுவுமே அவனிடம் கேட்கவில்லை. கேட்டிருந்தால் இந்த விபத்துக்கு முன்னால் அக்காளுக்கும் தம்பிக்கும் சண்டை என்ற விஷயம் மைத்துனனுக்கும் அவன் மனைவிக்கும் தெரிய வாய்ப்பு ஏற்பட்டிருக்குமே! அதற்கு இடம் கொடாமல் தவிர்த்து விட்டாள்.

அஜீத் சண்முகருக்கும் நங்கலுக்கும் இடையே உள்ள ஒரு பண்ணையில் இருந்தான். தொலைவையும் நேரத்தையும் எண்ணி அவன் புறப்பட உத்தரவு கேட்டான். சாரதா க்ஷமாவை மட்டுமாவது தங்கிப் போகுமாறு கூறினாள். அவள், "குழந்தைகள் தனியாக இருப்பார்கள். போய்த்தான் ஆகவேண்டும்" என்று கூறி அஜீத்தோடு புறப்பட்டு விட்டாள்.

இருவரும் சென்றபின் சாரதாவும் அநூப்பும் மட்டுமே தனித்துவிடப்பட்டனர். பழைய மௌனம் மீண்டும் அந்தச் சூழலை ஆட்கொண்டது. அநூப் தலை குனிந்தவாறே கணப்புக்கருகில் சென்றான். உடலில் பட்ட காயங்களுக்குத் தானாகவே ஒத்தடம் கொடுத்துக் கொண்டான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் சாரதா அவன் அருகில் வந்து நின்று கொண்டாள். குனிந்த தலை குனிந்தபடி இருந்தாலும் அநூப் இதை உணர்ந்தான். ஆனால் அவளை நிமிர்ந்து பார்க்கத்தான் அவனுக்குக் கூச்சமாயிருந்தது. சாரதா ஒரு கோப்பையை அவனிடம் நீட்டி, "இந்தா, இதைக் குடி!" என்றாள். அதில் ஆவி பறக்கும் தேநீர் மணத்துக் கொண்டிருந்தது. அநூப் "வேண்டாம்!" என்று மறுத்தான். "உன் பிடிவாதம் எல்லாம் அப்புறம் ஆகட்டும். இப்பொழுதுஇதைக் குடி!" என்று வாஞ்சையும் கண்டிப்பும் கலந்த குரலில் கூறினாள் சாரதா.

அநூப் நடுங்கும் கைகளோடு கோப்பையை வாங்கித் தேநீர் பருகலானான்.

"அநூப்!"

"உம்."

"அநூப்! என் வாழ்க்கைதான் வெறிச்சோடி விட்டது. நம் வீடாவது 'கலகல'

வென்று இருக்க வேண்டும் என்று ஆசைப்படு கிறேன். உனக்குத் திருமணமாகி மருமகள் வீட்டுக்கு வந்தால்...''

''அக்கா! நீ என்ன சொல்ல விரும்பு கிறாய்?''

''நீ என்னிடம் எதிர்பாராத ஒரு விஷயத் தைச் சொல்ல விரும்புகிறேன்.''

''நீ என்ன சொல்ல விரும்புகிறாய் என்பது எனக்கு விளங்கவில்லை.''

''நீ ரூபாவைத்தான் உன் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொள்ளுவதென்று முடிவு செய்திருந்தாயானால், நான் உன் எண்ணத்துக் குக் குறுக்கே நிற்க மாட் டேன்!''

''நிசமாகவா, அக்கா?'' கேட்கும்பொழுது அநூப்பின் கண்களில்தான் மின்வெட்டினாற் போல் என்ன ஒளி! சாரதாவின் விழிகளில் அன்பு ஆறாகப் பிரவாகம் எடுத்தது. இரு வருடைய பார்வையும் ஒன்றை ஒன்று சந் தித்த பொழுது, சாரதா தன் இணக்கத்துக்கு அறிகுறியாகத் தலை அசைத்தாள். அதைத் தொடர்ந்து ஏதோ யோசித்தவளாக, ''ஆனால் ஒரு நிபந்தனை!'' என்றாள்.

''என்ன?''

''கொஞ்ச நாட்களுக்கு நீ பேசாமல் இருக்க வேண்டும். அவசரக் காரியம் அள்ளித் தெளிக் கப் போய், நான் என் புக்ககத்தாரின் பார்வையில் தாழ்ந்து போய்விடக் கூடாது!''

''சரி, எப்படியும மனாலும் ஒரு முடி வுக்கு வர வேண்டுமே. அது எப்படி?''

''அதைப் பின்னால் பார்த்துக் கொள் வோம். எந்தக் காரியத்துக்கும் முடிவு காண ஒரு வழி உண்டு.'' சாரதா அவ னுக்கு ஆறுதல் சொன்னாள். அந்தப் பேச்சு எல்லையில்லாமல் வளரக் கூடாது என்பதற்காகச் சனன் சிங்கை அழைத்து உணவு பரிமாறச் சொன்னாள். இரு வரும் உணவருந்த அமர்ந்தனர்.

இந்த நற்செய்தியை அன்றே காதற் கடிதமாக வடித்து ரூபாவுக்கு அனுப்பி வைத்தான் அநூப். அந்தக் கடிதத்தைப் படித்த பொழுது ரூபாவின் வாழ்க்கையிலே இதுகாறும் மொட்டாக இருந்த நம்பிக்கை வெடித்து மலர்ந்தது.





"சாமி! பொங்கல் இனாமுங்க!"
"இனாமா!... பொங்கல் இனாமா கொடுக்கிறதில்லேப்பா.... அறுபது பைசாவை எடு, சொல்றேன்!"

—தரஜா

நாட்கள் ஓடின. அநூப்பின் காதற் கடிதங்கள் அவளுடைய மூச்சுக் காற்றில் காதல் மணத்தைப் பரப்பின. உள்ளத் துடிப்பில் ஓர் இனிமையான தவிப்பு நர்த்தனமாடியது. நேற்று வரை கனவாயிருந்த ஒரு விஷயம் இன்று நனவாக உருப்பெற இருந்தது.

அவளது அறைத் தோழி அஞ்சு அடிக்கடி அவளுக்கு வரும் காதற் கடிதங்களைப் பற்றிக் கேட்பாள். ஆனால் ரூபா பதில் ஏதும் கூறாமல் தவிர்க்கப் பார்ப்பாள். அன்றும் அப்படித்தான். அவள் அநூப்பின் கடிதத்தை வைத்துக்கொண்டு படுக்கையில் மெய் மறந்து படுத்திருந்தாள். அஞ்சு ஓசைப்படாமல் அவள் அருகில் வந்து நின்றாள். ரூபா அவளைத் தன் அருகில் கண்டதும் புரண்டு குப்புறப் படுத்துக் கொண்டாள். அந்தச் சாக்கில் கடிதத்தை ஒளித்து வைத்தாள்.

அஞ்சு அவள் அருகில் அமர்ந்து, "உன் அநூப் உனக்கு என்ன எழுதியிருக்கிறான்?" என்று கேட்டாள்.

"ஒன்றும் இல்லை."

"உனக்கு விருப்பம் இல்லையானால் நீ சொல்ல வேண்டாம். இனி இது பற்றி உன்னைக் கேட்டால் என்னை ஏன் என்று கேள்!" அஞ்சு சற்றுக் கோபமாகவே சொன்னாள்.

"பொய் இல்லை, அஞ்சு! கோபித்துக்கொள்ளாதே. உன்னிடம் சொல்வதற்கென்ன? சொல்லுமளவுக்கு விசேஷமாக ஒன்றும் எழுதவில்லை!" என்றாள் ரூபா.

"சொல்லுமளவுக்கு விசேஷமாக எழுதவில்லையென்றாலும், சொல்ல முடியாத அளவுக்குச் சாதாரணமாக ஏதேனும் எழுதியிருக்கலாமே!" என்றாள் அஞ்சு கேலியாக.

"என்னைக் காணத் துடிப்பதாக ஒவ்வொரு கடிதத்திலும் எழுதுகிறார்."

"அப்படியானால் நேரில் வருவதற்கென்னவாம்?"

"என் படிப்பில் குறுக்கிட விரும்பவில்லையாம்!"

"பேஷ், பேஷ்! என்ன கரிசனம்! படிப்புக்கும் காதலுக்கும் என்ன சம்பந்தம்? ஒன்று தேவை, இன்னொன்று போதை."

"தேவை, போதை இரண்டும் வாழ்க்கையில் தேவைதானே? இப்பொழுதே போதையில் ஆழ்த்தி விட்டால் தேவை என்ன ஆவது என்று கேட்கிறார்!"

"ஆனால் என் வாழ்க்கையில் நேர்மாறாக ஆகிவிட்டது. தேவையை போதை விழுங்கிவிட்டது!"

"அது எப்படி?"

"புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு படிக்கிறேன் என்றால் அவர் படத்தை மறைத்து வைத்துக் கொண்டு பார்க்கிறேன் என்று பொருள்!" என்ற அஞ்சு தன் கையிலிருந்த ஒரு புத்தகத்தின் ஏடுகளைப் புரட்டி ஒரு புகைப்படத்தை எடுத்து அதை ரூபாவின் கையில் கொடுத்தாள். அது அவளுக்குக் கணவனாக வரப் போகிறவனின் படம்.

ரூபா ஆவலோடு அந்தப் படத்தைப் பார்த்தாள். "அடியே, படத்துக்கென்ன, என்னிடம் கூடத்தான் படம் இருக்கிறது!" என்றாள்.

"ஆனால் உன்னைப் போல் நான் ஒளித்து மறைத்து வைக்கவில்லையே! ஊர் அறிய உலகம் அறிய அல்லவா வைத்துக் கொண்டிருக்கிறேன்!" என்றாள் அஞ்சு.

"ஆமாம், உனக்கு 'லைசென்ஸ்' கிடைத்துவிட்டது. எனக்கு இன்னும் அது கிடைக்காமல் இருக்கும்பொழுது நான் எப்படித் தம்பட்டம் அடித்துக் கொள்ள முடியும்?"

"வெளியிட முடியாத காதலைக் காதல் என்று கூறிவிட முடியாது. அது வெறும் கனவு, கற்பனை, எந்நேரமும் அழிந்துவிடலாம்!" என்று கூறிக் கொண்டே அஞ்சு பால்கனியில் போய் அமர்ந்து கொண்டாள்.

ரூபா சிறிது நேரம் பேசாமல் மௌனமே உருவாக அமர்ந்திருந்தாள். அஞ்சு அவள் காதலைக் கேலி செய்வதாகப் பட்டது. 'இன்று கூட அஞ்சு அவளைக் காட்டிலும் தன்னை பாக்கியசாலியாகக் கருதுகிறாள்! அவள் காதலை ஒரு நிலையற்ற கற்பனையாக எடை போடுகிறாள்.' இதை எண்ணிப் பார்த்த பொழுது ரூபா உற்சாகம் குன்றிப் போனாள். ஆனால் தலையணைக்கு அடியில் இருந்த கடிதம் அவள் உணர்வைத் தட்டி எழுப்பி மீண்டும் உற்சாகம் கொள்ளத் தூண்டியது. அவள் அநூப்பின் காதல் கடிதத்தை எடுத்துப் படிக்கலானாள். அதில் தொனித்த நம்பிக்கையையும் தெளிந்த வாக்குறுதியையும் துய்த்து உணர்ந்தபொழுது அஞ்சுவின் பேச்சு அத்தனையும் காற்றில் பறந்துவிட்டது. அவள் கனவு நனவாகும் நாளைக் கற்பனை செய்து பார்த்தபொழுது அவள் மனப் பறவை சிறகடித்து உயர உயரப் பறந்தது.

பி. ஏ. தேர்வுக்கு அன்றோடு கடைசி நாள். பரீட்சை எழுதி முடித்துவிட்டு வெளியே வந்த ரூபா நிம்மதியாய்ப் பெருமூச்சு விட்டாள். கடந்த ஒரு மாதமாகப் பரீட்சைக்குப் படித்துப் படித்து அவள் மனம் சோர்ந்து போயிருந்தது. அந்தச் சோர்வைப் போக்கிக் கொள்ள அவள் அதே பழைய அருவிக் கரையை நோக்கி நடந்தாள். மனம் சுமையேறிக் கனக்கும் பொழுதெல்லாம் அவள் ஆதரவு தேடிச் செல்லும் இடம் ஆயிற்றே!

அருவிக் கரையை அடைந்ததும் அவள் ஒரு பாறையில் தன் உடலைக் கிடத்தித் தன் உள்ளச் சோர்வையும் உடற் சோர்வையும் போக்கிக் கொள்ள முயன்றாள். அருவியிலிருந்து தெறிக்கும் நீர்த் திவலைகள் பனி முத்தென இளம் சூடான அவள் கன்னங்களில் விழுந்து ஒளியைச் சிதறின.

அவற்றின் சில்லிப்புத் தீண்டல் அவளுக்கு இனந்தெரியாததொரு மகிழ்ச்சியை அளித்தது. காற்றின் மெல்லிய அலைகள் அவளது கூந்தலை அசைந்தாடவிட்டுத் தாமும் மகிழ்ந்து அவளையும் இன்புறச் செய்தன. அவள் மல்லாந்து படுத்தவாறே துல்லியமான வானத்தை நோக்கினாள். பொழுது சாயும்

நேரமாதலால் வானம் பல நிறம் காட்டி அவளைக் களி கொள்ளச் செய்தது.

அநூப்பைப் பற்றிய சில கற்பனைகள் அவளை வேறு உலகுக்கே இட்டுச் சென்று ஆட்டிப் படைத்தன!

திடீரென்று யாருடைய சிரிப்பொலியோ அந்தச் சூழலில் நிலவியிருந்த மௌனத்தைக் கலைத்தது. அவள் திரும்பிச் சிரிப்பொலி வந்த திசையை நோக்கினாள். எதிரில் ஒரு மரத்தின் மீது சாய்ந்து நின்றவண்ணம் நிஷாவும் ரோஸ்லினும் சிரித்து கொண்டிருந்தார்கள். அவர்களை அங்கே கண்டதும் அவளுக்கு வெட்கமாகப் போய்விட்டது. பயந்த விழிகளோடு இங்கும் அங்கும் பார்வையை ஓடவிட்டாள். ஆனால் அநூப் அங்கே எங்கே இருந்தான்? எல்லாமே அவள் கற்பனையில் எழுந்த நிகழ்ச்சிதானே? அவள் மனப் பதற்றத்தை முகத்தில் கண்டுவிட்ட தோழிகள் அவளை நெருங்கி வந்து, ''எந்த யோசனையில் அப்படி ஆழ்ந்து கிடந்தாய்?'' என்று கேட்டனர்.

''ஒன்றும் இல்லை. சட்டென்று ஒரு குட்டித் தூக்கம்'' என்று கூறியவாறே ரூபா தன் சேலைத் தலைப்பைச் சரி செய்து கொண்டாள்.

''அடியே! இந்த இளமைப் பருவத்தில் வெல்வெட்டு மெத்தையில்கூட உறக்கம் கொள்ள முடியாதே! உனக்கு இந்தப் பாறையில் எப்படி உறக்கம் வந்தது?'' என்று நிஷா வேடிக்கையாகக் கேட்டாள் என்றாலும் உள்ளுக்குள் ஒரு வினா இருந்தது.

''உன்னையுமே இங்கே அருமையாகத் தூங்க வைக்க முடியும், தெரியுமா?'' அவள் வினைக்கு வேடிக்கையாகப் பதில் அளித்தாள் ரூபா.

''தெரியவில்லையே! அப்படி ஒரு வழி இருந்தால் சொல்லு, தெரிந்து கொள்ளுகிறேன்!''

''யாரையாவது ஒருவனைக் காதலிக்கத் தொடங்கு!'' அலட்சியமாகக் கூறிவிட்டுத் தன் கூந்தலைக் கோதிச் சரி செய்தவாறே ரூபா ஹாஸ்டலை நோக்கி நடக்கலானாள்.

ரோஸ்லினும் நிஷாவும் அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். இதற்கு முன் ரூபா அவர்களிடம் இப்படி நடந்துகொண்டதில்லை. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அப்புறம் ஏககாலத்தில் ''ரூபா, ரூபா!'' என்று கூவி அழைத்தனர்.

நடந்து கொண்டிருந்த ரூபாவின் கால்கள் நின்றன. அவள் திரும்பிக் கடைக் கண்ணால் அவர்களை நோக்கினாள். இருவரும் அவளிடம் ஓடிவந்தனர். ''நாங்கள் உன்னை வெகு நேரமாகத் தேடிக் கொண்டிருக்கிறோம்'' என்றனர்.

''எதற்கு?'' என்று கேட்டாள் ரூபா.

''உன்னைத் தேடி யாரோ வந்திருக்கிறார்கள்!''

''யார்?''



''பாங்க் காஷியர் எங்கே?''

''வெளியே போயிருக்கிறார்.''

''ரெஸ்ட் எடுக்கவா?''

''அரெஸ்டைத் தவிர்ப்பதற்காக!''

— 'காரவான்' - எஸ். கோபாலன்

''எங்களுக்கு என்ன தெரியும்! சிஸ்டர் தெரேஸா உன்னைத் தம் அலுவலகத்துக்கு வரச் சொன்னார்.''

அவர்கள் சொன்னதைக் கேட்டு ரூபா யோசனையில் ஆழ்ந்தாள். இந்த நேரம் அவளைப் பார்க்க யார் வந்திருப்பார்கள்? அவள் அம்மாவுக்கோ வெகு நாட்களாக உடல்நலம் சரியில்லை. அம்மாவை விட்டால் அவளுக்குத் தெரிந்தவர்கள் அந்த நகரத்தில் வேறு யாருமே இல்லை. அப்படியானால் அவள் பகற் கனவு நினைவாகிறதோ? அவள் அநூப் அவளைச் சந்திக்க சிம்லாவுக்கு வந்திருப்பானோ? இந்தக் கற்பனை எழுந்த மாத்திரத்திலே அவள் மனம் மலர்ந்தது. அவள் பித்துப் பிடித்தவள் போல் தலை தெறிக்க அலுவலகத்தை நோக்கி ஓடினாள். நிஷாவும் ரோஸ்லினும் கண்களில் வியப்பு தாண்டவமாட அவளையே பார்த்துக்கொண்டிருந்தனர்.

ரூபா மூச்சு வாங்க அலுவலகக் கதவை மெல்லத் திறந்தாள். ''மே ஐ கம் இன் ஸிஸ்டர்?'' என்று கேட்டவாறே உள்ளே எட்டிப் பார்த்தாள்.

ஸிஸ்டரின் நாற்காலி காலியாக இருக்கவே, அவளுக்கு வெட்கமாகப் போய்விட்டது. ஆயினும் உள்ளத் துடிப்பை அடக்கிக் கொண்டு அறைக்குள் நுழைந்தாள். ஸிஸ்டரின் ஆசனத்துக்கு எதிர் ஆசனத்தில் சால்வை போர்த்திய ஒரு பெண்மணி உட்கார்ந்திருந்தாள். ரூபா அவளை இதற்கு முன் பார்த்ததில்லை. உள்ளே நுழைந்த ரூபாவை அவள் வியப்போடு நோக்கினாள். ரூபா அவளிடம் ஸிஸ்டர் தெரேஸாவைப் பற்றிக் கேட்டாள். அவள் மதர் சுப்பீரியரிடம் ஸிஸ்டர் போயிருப்பதாகக் கூறினாள்.

ரூபா தன் கைவிரல்களைச் சொடுக்கி விட்டுக் கொண்டே இங்கும் அங்கும் பார்வையை ஓட்டினாள். அப்புறம் அங்கிருந்து வெளியே செல்லத் திரும்பினாள். புறப்பட்டவளை நோக்கி, ''நீதான் ரூபாவா?'' என்று கேட்டாள் அந்தப் பெண்மணி.

''ஆமாம்!'' அந்தப் பெண்மணியை உன்னிப்பாக நோக்கிய வண்ணம் விடை அளித்தாள் ரூபா. (தொடரும்)

''அட! ஓட்டப் பந்தயத்திலே இந்தச் சிவப்புக் காளை மற்றக் காளைகளை முட்டித் தள்ளிட்டு முதல்லே வந்துடுத்தே!.... இதுக்குச் சொந்தக்காரர் யாரு? அவரைக் கூப்பிடுங்க!''

''அவரைத்தாங்க இது முதல்லே முட்டித் தள்ளிட்டு வந்திருக்குது!''


—எஸ். வி.



போட்டிக் கதை–19

வேரில் பழுத்த பலா

கே.கே.ராஜன்



சங்கு ஊதும் சத்தம் கேட்குது.

மணி அடிக்கிற சத்தமும் சேர்ந்து கேட்குது.

அமங்கல ஒலி!

ஆமாம்! தெருவில் ஏதோ பிணம் வருகிறாப்போல இருக்கு.

அடுப்பில 'குபீர்'னு தீப்பத்திக்கிட்டு எரியுது. இவ்வளவு நேரமும் ஊதிக்கிட்டிருந்தேன். புகைஞ்சு புகைஞ்சுதான் வந்துக்கிட்டிருந்துச்சு.

திடீர்னு இதுக்கு என்ன வந்தது?

பிண ஊர்வலத்துக்கும் இந்த நெருப்புக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டோ?

என் மனசுக்கு நெருப்பின் மேலே பொறுமையே வந்திட்டுது.

விறகுக் கட்டைகளை அழுத்தி, வெளியே இழுத்து, ஜ்வாலையைத் தணிக்க முயற்சி பண்ணினேன். ஜ்வாலை தணியலே.

பிணம் வீட்டை நெருங்கிக்கிட்டே இருக்கு. புகைச்சலால் கண்ணிலே நீர் வடிஞ்சுது. எரிச்சல் வேறு. முந்தானையில் முகத்தைத் துடைச்சுக்கிட்டேன். விடுவிடு வென்று வராந்தாவுக்கு வந்து நின்னுட்டேன்.

அந்தப் பாதையில் இரண்டு பக்கமும் இருக்கிற வீடுகளிலிருந்து என்னை மாதிரியே பொம்பளைங்க ஆம்பிளைங்க எல்லோரும் வெளியே வந்து நின்னுக்கிட்டிருக்காங்க.

பிணத்தைப் பார்க்கத்தான்.

என் கண்கள் மட்டும் பட்டாம் பூச்சி மாதிரி யாரைப் பார்க்க இப்படிப் பறக்குது?

அதோ! பிண ஊர்வலத்துக்கு முன்னாலே சங்கு ஊதிக்கிட்டு ஒருத்தன் வர்றான். அவனே தான் இன்னொரு கையிலே மணியையும் அடிச்சுக்கறான்.

உடம்புக்கு மட்டும்தான் உத்யோகம்னா அவன் ஒரு மிலிட்டரி கேப்டனாகி யிருக்கலாம். அவன் எப்படி இந்த வேலைக்கு வந்தான்?

அவன்தான் — ஆறு மாசத்துக்கு முன்னாலே இந்த வீட்டுக் காரியத்துக்கும் வந்தவன்.

ஆறு மாசத்துக்கு முன்னாலே...


நெஞ்சு படார்னு வெடிக்கிற மாதிரி இருக்கு. அதுக்குள்ளே இருந்து ஏதோ ஒரு விநோதப் பறவை ஆயிரம் இறக்கைகளோட உயரமாப் பறக்கிற மாதிரி இருக்கு.

நிலாவிலேயிருந்து செய்தி அனுப்பற 'ராக்கெட்' மாதிரி அந்த விநோதப் பறவை என் பழைய நினைவுகளை எனக்கு அனுப்பிகிட்டே இருக்கிற மாதிரி தோணுது...

அந்தச் சேதி என் காதிலே என்னமா பட்டது?

அப்பா! இனி என் வாழ்நாளில் — யாருடைய வாழ்நாளிலும் — இந்த மாதிரி ஒரு பயங்கரச் செய்தியைக் கேட்கவே கூடாது.

கூறைப் புடவை கட்டி ஆறு மாசத்துக்குள்ளே வெள்ளைப் புடவை மாத்திக்கிற தானு இந்தக் கொடுமையை யாராலே தாங்கிக்க முடியும்?





நடக்கிறபோது காலுக்கடியிலே மிதிபட்டுச் சத்தம் போடாம சாகிற எறும்புங்க மாதிரி என் உணர்ச்சிங்க அப்படியே செத்துச் செத்து மடிஞ்சிக்கிட்டிருக்கு.

அப்பா என்ன செய்வார், பாவம்!

எனக்கு அம்மான்னும் உறவினருங்கன்னும் சொல்லிக்கிறதுக்கு என் அப்பா ஒருத்தர்தானே!

என்னைப் பெத்ததும் அவசரம் அவசரமாய்ப் போய்ச் சேர்ந்திட்டாள் அம்மா.

அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதிலே என் அப்பா பெத்தவங்களையும் மத்தவங்களையும் ஒரேயடியா பகைச்சிக்க வேண்டியதாப் போச்சாம்.

என் தலைவிதியா அது?

தன்னந் தனியா என்னை வளர்த்து ஆளாக்கத் தன்னையே மெழுகு வர்த்தியாக்கிக்கிட்டிருந்தவரு அப்பா.

நாங்க வாழுற அளவுக்கு மட்டும் ஒரு கம்பெனியில் அவர் சம்பாதிச்சார். அதற்காக என்னைப் படிக்க வைக்காமலில்லே. பெரிதாகவும்படிக்க முடியலே. வீட்டிலே குந்தி அஞ்சாண்டுகளுக்கப்புறம் அப்பாவுக்குப் பிடிச்ச மாப்பிள்ளை எனக்கும் ரொம்பவும் பிடிச்சிருந்திச்சு.

இதிலே என்ன பொய்? — எனக்குப் பிடிச்ச மாப்பிள்ளையைத்தான் அப்பா பார்க்கும்படி பண்ணினேன்.

'அவர்' பக்கத்து வீட்டுக்கு வருவார். ரொம்ப நாளாகவே வந்துக்கிட்டிருந்தார்.

பார்த்தாயிற்று — மூக்கும் முழியுமா, அங்கம் ஒவ்வொண்ணும் இரட்சியா ரொம்ப அழகா யிருந்தார். பேசியாயிற்று — மனம் திறந்து பேசியாயிற்று. அவரும் ஒரு கம்பெனியில் மாதம் அறுநூறு ரூபாய் சம்பாதிச்சார். வேறே என்ன?

பக்கத்து வீட்டு அக்கா மூலமா 'அவர்' என்னைப் பெண் பார்க்க வரும்படி பண்ணினேன். சொல்லப் போனா அப்பா அந்த வரனை ஒரு அதிர்ஷ்டம்னே நெனைச்சார். ஆனா கடைசியிலே மாப்பிள்ளை கொடுத்தாரே ஒரு தொல்லை!

'இந்த மாப்பிள்ளை வேண்டாம்'னு சொல்லிடலாம் என்றுகூட எனக்குப் பட்டது.

ஆமாம்! ஸ்கூட்டர் வேணுமாம்! அப்பாவாலே எப்படி முடியும்? ஆனா அவராலே வரனையும் விட முடியலே.

திருமணம் முடிஞ்சு ஒரு மாசத்திலே வாங்கித் தர்றதா அப்பா ஸ்தர்யமா ஒத்துக்கிட்டார். வாங்கியும் தந்திட்டார். ஒரு 'செகண்ட் ஹாண்ட்' ஸ்கூட்டர். அந்த வகையிலே ஏற்பட்ட கடன் இப்பத்தான் தீர்ந்திச்சு.

ஆனா அப்பாவுக்கு அன்னிக்கு எப்படித் தெரியும், பாவம், அவர் வாங்கிக் குடுத்தது ஸ்கூட்டர் இல்லே — 'எமன்' என்கிறது?

ஆறே மாசம் — விபத்து!

அப்பா! இந்த மாதிரி ஒரு பயங்கரச் சேதி என் எதிரிக்கும் கேட்கக் கூடாதுன்னு நான் கடவுளை வேண்டிக்கிறேன்.

அந்த விபத்துக்குப் பிற்பாடுதான் என் விதி தலைகீழாக மாறிடுச்சு. பஞ்சதந்திரக் கதையிலே வேதாளம் மீண்டும் முருங்கை மரத்திலே ஏறி உட்கார்ந்துக்கிற மாதிரி, நான் அப்பா தோள் மேலே மறுபடியும் ஏறி உட்கார்ந்துக்கிட்டேன்.

இனி என்னை அவர் எப்படி இறக்கிவைப்பார்?

நானாகத்தான் இறங்க முடியுமா?

என் வீட்டுக்கு நேராகப் பிணம் வந்திடுச்சு. எல்லாரும் பிணத்தைப் பார்க்கிறாங்க. அந்த 'இவன்' இந்தப் பக்கமாப் பார்க்கிறான்... அவனை யார் பார்க்கச் சொன்னது?



''எங்க ஊரிலே கரும்பு தின்கிற போட்டியிலே ஜெயிக்கிறவங்களுக்குப் பரிசு கிரிசு எதுவும் கொடுக்க மாட்டோம்.....''

''வேறே என்னதான் கொடுப்பீங்க ?''

''ஒரு பொய்ப்பல் செட்!''

— தராஜா

போயும் போயும் அவன்தானு என்னைப் பார்ப்பது?

என் கணவர் காரியத்துக்கு அவன்தான் வந்தான். என் நிலைமை அவனுக்குத் தெரியும். அதனுலே பரிதாபத்தோட என்னைப் பார்க்கிறுன். எனக்கு அழுகை முட்டிக்கிட்டு வராப் போல இருக்கு. அவன் அன்னிக்கு எனக்கு எப்படி ஆறுதல் சொன்னுன்?

பிண ஊர்வலம் வீட்டைத் தாண்டிப் போயிடுச்சு.

அவனும் போயிட்டான்.

அவன் ஊதற சங்கு ஒலியும், அடிக்கிற மணிச் சத்தமும் கொஞ்சம் கொஞ்சமாக ஒஞ்சுக்கிட்டிருக்கு. அவன் மறுபடியும் இன்னெரு பிணத்தோட வருவான்.

என் வீட்டுக்காரர் செத்துப்போன அன்னிக்கு யார் வந்தாங்க, யார் போனுங்கன்னு எனக்குத் தெரியாது. அப்பாவும், இன்னும் பல பேரும் எனக்கு ஆறுதல் சொன்ன மாதிரி இருந்திச்சு.

ஆறுதல் சொல்லித் தீர்கிற இழப்பா இது?

பதினறு நாளு கழிஞ்சு 'காரியம்' அன்னிக்கு நான் வராந்தாவில் உட்கார்ந்து அழுதுக்கிட்டிருந்தேன். அவருடைய அம்மாவும், அப்பாவும் இன்னும் சிலபேரும் என்கூடச் சேர்ந்து அழுதுக்கிட்டிருந்தாங்க.

கொஞ்ச நேரம் கழிச்சு அவங்கெல்லாம் ஒருத்தர் ஒருத்தரா எழுந்து காரியத்தைக் கவனிக்கப் போயிட்டாங்க.

வீட்டு வெளியிலே நாலு கொம்புங்களை நட்டு, காஞ்சு போன ஓலைங்களால பந்தல் போட்டு வச்சிருந்தாங்க.

அந்தப் பக்கம் யாரோ ஒரு ஆள் உட்கார்ந்து என்னையே பார்த்துக்கிட்டிருந்தான். அவன் கண்ணிலே தாரை தாரையா நீர் வடிஞ்சுக்கிட்டிருந்திச்சு. வேறு யார் அழுறதைப் பத்தியும் எனக்கு ஒண்ணும் படலே.

அப்பா என் பக்கமா வந்தார். அவரைக் கேட்டேன்.

''அப்பா, யாரு அது?''

''அவன்தாம்மா சாவுக்கு மணி அடிக்கிறவன். காரியத்துக்கு வந்திருக்கான்.''

எனக்கு ஆச்சரியமாப் போயிடுச்சு. ஒருத்தர் செத்தாத்தான் அவனுக்குப் பிழைப்பு. யாராவது செத்துட்டாங்கன்னு அதுக்காக சந்தோஷப்படற ஒரே ஆள் அவன்தானே!

அவன் ஏன் இப்போ அழுதுக்கிட்டிருக்கான்....?

''நீ ஏம்பா அழுறே?'' நான் அவனைப் பார்த்த பார்வையிலேயே அவன் புரிஞ்சுக்கிட்டான் போல இருக்கு.

எழுந்திருச்சு என் பக்கத்தில வந்தான். அப்பத்தான் நல்லாப் பார்த்தேன். அவனுக்கு அருவருப்பான உடம்பே இல்லே.

''மனுஷானு ஒருத்தர் ஒருத்தருக்கும் என்னமா கஷ்டங்கள்ளாம் வந்துக்கிறு கீது. அம்மாடி! உன்னை அந்தக் கடவுளு இந்த மாதிரி ட்ரசிப் பார்க்கிறுன். என்னைக் கூட இப்படித்தான் சோதிச்சுக்கினு அந்தப் பாவி!

''அம்மாடி! என் கதையும் இப்படித்தான் முடிஞ்சு போச்சு தாயே!

''இந்த வேல மேலே நான் இருந்துக்கினு இருந்ததிலே எனக்கு மனுஷானுங்க வாய்க்கையெல்லாம் ஏதோ பயாஸ்கோப்பு மாதிரிதான் தெரிஞ்சுது. அதனுல எனக்குக் கண்ணலம் கட்டிக்கினு வாயணும்னு நெனப்புக்கூட இல்லே தாயே!

''ஆனு என் அய்த்தே மவதான் என்னை அப்பிடியே மாத்திப்புட்டா. சொன்னுக்க நம்பமாட்டேம்மா. அவ பத்துவரை படிச்சவ. நானு ஒரு ஊசுமும் இல்லாதவன். ஆனு என்னைத்தான் கட்டிக்கணுமுனு அவ நலியா நின்னு. நான் இன்னு பண்றதும்மா? அவளைக் கண்ணலம் கட்டிக்கிட்டேன்.

''நெசந்தான் – அதுக்கு அப்புறமாத்தான் வாய்க்கை இன்னன்னன்னு புரிஞ்சுது. சாகிற போது சாகிறதுதான். ஆனு வாயறபோது நல்லா வாயணுமினு எனக்குப் புரிஞ்சுது.

''அம்மா! நான் அவளுக்கு ஒரு கொறையும் வைக்கிலே. அவ சொல்லுவா – ஒரு கொறையும் வைக்கிலேங்கிறதுதான் எனக்குக் கொறைன்னு சொல்லிக்கினு சிரிப்பா.

''வயித்திலே மூனு மாசம் – டைபாயிடு ஜொரம் வந்திச்சு – 'பட்'டுன்னு போயிட்டாம்மா...என்னை இப்படித் தனியா விட்டுட்டு 'பட்'டுன்னு போயிட்டா – ஒரு வருஷம் ஆச்சு. அவ போயிச் சேர்ந்து –

''அவ போயிச் சேர்ந்ததிலேருந்து எனக்கு ஒண்ணும் சொகப்படலே. எல்லாரும் வேறே ஒருத்தியெ கண்ணலம் கட்டிக்கச் சொல்லி வம்பு பண்ணினுங்க. நான் முடியாதுன்னுட்டேன்.

''நான் ஆம்பிளை – என்னுலேயே அந்தப் பாவியப் பிரிஞ்சு இருக்க முடியலியே–

''பாவம்! நீ பொம்பளை–? அதை நெனச்சுக்கினு எனக்குத் தெரியாம அய வருது தாயே – அய வருது.''

அவன் வார்த்தைங்களோட போட்டி போட்டுக்கிட்டு அவன் கண்ணிலே நீர் ஊற்று மாதிரி வடிஞ்சுக்கிட்டே இருந்திச்சு.

இது என்ன கொடுமை!

'அவன்' உள்ளம் உண்மையில் இவ்வளவு மிருதுவானதா? இல்லே – இந்த வெள்ளைப் புடவை வாழ்க்கை அவ்வளவு கொடுமையானதா?

எனக்கு ஒண்ணும் புரியலே.

அப்போ அவன் முகத்தை ஒரு முறை நல்லாப் பார்த்தேன். தெளிவான, கள்ளமில்லாத முகம். அழுகிறபோதுகூட அவன் பார்வை கொழந்தை மாதிரி உருண்டு உருண்டு பார்த்திச்சு.


அந்தத் தொழிலுக்கு அவன் ஒரு அபூர்வமானவனாகத்தான் எனக்குப் பட்டான்.

அதிலிருந்து இந்தப் பாதையில் போற பிணத்துக்குக் கூட அவன் வருவான் — சங்கு ஊதிக்கிட்டு; மணி அடிச்சுக்கிட்டு.

எனக்கும் அவனே அப்பப்போ பார்த்துப் பரிதாபப்படணும் போல தோணும். பாவம்! அவன் மனைவிமீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறான்!

நான் மட்டுமென்ன, என் கணவர் மீது உயிரையே வெச்சிருந்த தாலதானே இப்போ நெனைச்சு நெனைச்சு மனசு மரத்துப் போச்சு.

பாழாய்ப்போன உணர்ச்சிங்க ஓரேயடியா மரத்துத் தொலைய மாட்டேங்குதே?



அன்று அப்பாவுக்கு லீவு நாள்.

அவருக்கு ரொம்ப வேண்டியவரு ஒருத்தர் விருந்துக்கு வந்திருந்தார். இரண்டு பேரும் வராந்தாவிலே உட்கார்ந்து பேசிக்கிட்டிருந்தாங்க. நான் உள்ளே இருந்தேன்.

எனக்கு அவங்க பேசறது கேக்கக் கூடாதுன்னு நெனைச்சு அவங்களுக்குள்ளே அடக்கமாப் பேசுகிற மாதிரி இருக்கு.

ஆனா எனக்கு நல்லாக் கேக்குது.

''என்னய்யா சமுதாயம்; வெங்காயம். ரதி மாதிரி ஒரு இளம் பெண்ணைக் காலம் பூராவும் கண்கலங்க வைக்கிறதுதான் இந்தச் சமுதாயத்துக்குச் சட்டமா என்ன?'' வேகமாகப் பேசினார் விருந்தாளி.

''அதை நெனைச்சு நெனைச்சுத்தான் நான் யாருக்கும் தெரியாம அழுது அழுது செத்துக்கிட்டிருக்கேன்.''

''உறுதியாச் சொல்றேம்பா. உன் மகளை என் மகளா நினைச்சுச் சொல்றேன். எல்லா விதத்திலும் அதுக்கு அனுகூலமாயிருக்கும் சீக்கிரமா ஒரு நல்ல இடத்தில...''

''நீ சொல்றது எனக்குப் புரியுதுப்பா. முதல் கல்யாணத்தை முடிக்கிறதுக்குள்ளே நான் பட்ட கஷ்டமெல்லாம் உனக்குத்தான் தெரியுமே? இருபது வயசுகூட முடியாம ரதிமாதிரி இருந்தாலும் விதவை விதவை தானே? அவளுக்கு இன்னொரு...?''

அதுக்குள்ளே அவங்களுக்கு முன்னாலே வந்து நின்னுட்டேன், சாப்பிட அழைக்க வந்த சாக்கில்—

உண்மையில் அதோட அவங்க அந்தப் பேச்சை நிறுத்திக்கணும்னு எனக்குத் தோணிச்சு.

அதே மாதிரி அவங்க வேறே சமாசாரம் பேச ஆரம்பிச்சுட்டாங்க. ஆனா என் மனசுதான் வேறே எதைப் பத்தியும் நினைக்கலே.

அப்பாவும் விருந்தாளியும் சாப்பிட உட்கார்ந்தாச்சு.

''கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே, அங்கே வேரில் பழுத்த பலா.''

வெளியிலேயிருந்து யாரோ பாட்டுப் பாடறாங்க.

''பிச்சைக்காரன் போல இருக்கு, போய்க் கொஞ்சம் சாதம் போடம்மா'' அப்பா சொல்றார்.

நானும் கொஞ்சம் சாதத்தை எடுத்துக்கிட்டுப் போய்ப் போட்டுட்டு வர்றேன்.

அப்பாவும், விருந்தாளியும் சாப்பிட்டு முடிச்சு, வெளியே புறப்பட்டாங்க.

எனக்குச் சாப்பிட கொஞ்சம்கூட விருப்பமில்லே. ஆனாலும் வேலையோட வேலையா தட்டுலே கொஞ்சம் சாதத்தைப் போட்டு, ரசத்தை ஊத்திப் பிசைஞ்சுகிட்டே இருந்தேன்.

வெளியே சங்குச் சத்தம் கேக்குது. மணி அடிக்கிற சத்தமும் சேர்ந்து கேக்குது. அமங்கல ஒலி!

ஆமாம்! தெருவிலே பிணம் வருது.

கையைக் கழுவிக்கிட்டு வராந்தாவிலே வந்து நின்னுட்டேன்.

அந்த 'இவன்'தான் சங்கு ஊதிக்கிட்டு வர்றான்.

வீட்டுக்கு எதிரிலே வந்ததும்தான் இந்தப் பக்கம் திரும்புவான்.

இடுப்பிலே ஒரு வேட்டியைக் கட்டிக்கிட்டு இருக்கான். மேலே சட்டை போட்டுக்கலே. ஒரு துண்டை போட்டுக்கிட்டிருக்கான்.

சிவப்பா — அங்கம் ஒவ்வொண்ணும் திரட்சியா.... இவன் எப்படி இந்த வேலைக்கு வந்தான்?

வீட்டுக்கு எதிரிலே பிணம் வந்தாச்சு.

எல்லாரும் பிணத்தையே பார்க்கிறாங்க.

நான் அவனையே பார்க்கிறேன்.

இப்போ அவன் இந்தப் பக்கம் திரும்பப் போறான்.

''பூம்... டங் டங் டங்...''

சங்கு சத்தமும், மணி சத்தமும்!

அவன் திரும்பியே பார்க்கலியே, ஏன்?

பிணம் வீட்டைத் தாண்டிப் போயிடுச்சு.

எனக்குப் பயங்கரமான அவமானம்; ஏமாற்றம்.

ஒரு முறை செத்துப் போயிட்ட பிணத் தோட அவன் போறான்.

செத்துச் செத்துப் பிழைக்கிற இந்த அதிசயப் பிணத்தை மறந்துட்டான்...?

போகட்டும். இந்த முறை போகட்டும்.

அடுத்த முறை அவனே — ச்சே, என்ன மரியாதைக் கெட்டத்தனம் — அவரை இந்த வீட்டுக்கு வரவழைப்பது எப்படிங்கிறது எனக்குத் தெரியும்.

என் மனசிலே ஏதோ ஓர் உறுதி தெறஞ்சிட்ட மாதிரி திருப்தியா இருக்கு.

எனக்கு 'போர்' அடித்தது — பின்னே? எத்தனை நாழிகைதான் ஒன்றுமே செய்யாமல் அந்த அறைக்குள் அடைந்து கிடப்பது? காலையில் சற்றுத் தாமதமாக எழுந்திருக்கலாமென்றால் பாழும் பழக்கமானது ஆறுக்குக் கண்ணைப் பிரித்து விடுகிறது.


எழுந்தோமோ — பல் தேய்த்துக் காப்பி குடித்தோமா என்று இல்லை — வீட்டுச் சௌகரியங்கள் எல்லாம் ஹோட்டலில் எதிர்பார்த்தால் எப்படி?

பஸ்ஸரை அமுக்கி, பையன் காப்பியைக் கொண்டு வருவதற்குள் மணி ஆறரை ஆகிவிடுகிறது. வந்து இறங்கின முதல் நாளில் மணியைத் தட்டினால் பையன் வருவதும், தினுசு தினுசாய்ச் சமையலறையில் மன்றுடாமல், டிபன் வரவழைத்துச் சாப்பிடுவதும், ஸிங்காரிக்கப்பட்ட அறையில் தங்குவதும் அலுங்காமல், நலுங்காமல் நான் உட்கார்ந்திருப்பதும் நன்றாய்த்தான் இருந்தது. ஆனால் இரண்டாம் நாள் மாலை ஆவதற்குள் ஓடியாடி வேலை செய்தவளைக் கட்டிப் போட்டாற் போல இருப்பது கொஞ்சமும் பிடிக்காமல் போயிற்று.

இன்றைக்கு முழுசாய் ஐந்து நாட்கள் ஆகின்றன. — சுத்தமாய் 'போர்' அடிக்கிறது.

இவருக்குக் கான்பரன்ஸ் — காலையில் எட்டு மணிக்குப் போனால் மாலை ஆறு ஆகிவிடுகிறது, அறைக்குத் திரும்ப. முதல் இரண்டு நாட்கள் ஊர் சுற்றிப் பார்க்கப் போனேன். அவ்வளவுதான். அதன் பிறகு கான்பிரன்ஸிலிருந்து திரும்பும்போது கட்டுப் பேப்பர்களோடு வந்து அறை முழுக்கப் பரப்பி வைத்துக் கொண்டு அதிலேயே மூழ்கிப் போகும் இவரிடம் என்ன எதிர்பார்ப்பது?

நேற்று மாலை ஹோட்டலுக்குத் திரும்பியவர் காப்பி சாப்பிட்ட பின் காலை நீட்டிப் படுக்கையில் சாய்ந்தார்.



'என்ன பண்ணினாய் மத்தியானம்?' என்று ஒரு வார்த்தை? ம்ஹூம். இல்லை!

தடக்கென்று நினைத்துக் கொண்டு ஒன்று மட்டும் கேட்டார்.

''உனக்கு வெளியே போகணுமா? எனக்குக் களைப்பா இருக்கு... நாளைக்கு முக்கியமான பேப்பர் டிஸ்கஷனுக்குத் தயார் பண்ணணும்... உனக்குப் போகணும்னா போகலாம்...''

நான் பதிலே பேசவில்லை.

''உனக்கு 'போர'டிக்கிறதா? நான் என்ன பண்ணறது அருணா... வேலை அப்படியிருக்கு. இதுக்குத்தான் உன்னை வரவேண்டாம்னு சொன்னேன்....''

இப்போது எனக்கு ரோஷம் மூண்டது.

'' எனக்கொண்ணும் போரடிக்கலை... புஸ்தகம் நிறைய இருக்கு..... இந்தப் பக்கம் ஸ்விம்மிங் பூல்... அந்தப் பக்கம் கடைத் தெரு... வேடிக்கை பார்க்கறதுக்குள்ளேயே பொழுது போயிடறது...''

அதோடு பேச்சு முடிந்து விட்டது.

அவர் சொல்வது வாஸ்தவம்தான்.

இவருக்கு வந்திருந்த கான்பிரன்ஸ் அழைப்பிதழில் 'மனைவியுடன் அழைக்கிறோம்' என்று போட்டிருந்ததால் 'நானும் ஹைதராபாத் வரேனே!' என்று பிடிவாதம் பிடித்து வந்தது நான்தான்.

• • •

ஹைதராபாத் ஒன்றும் அமெரிக்கா இல்லை. நினைத்தால் எங்களால் வர முடியும் என்றாலும் எதற்காக நான் புது வழக்

அமைதியான நதி

கமாய்ப் பிடிவாதமாய் இவருடன் புறப்பட்டு வந்தேனென்றால் அதன் நிஜக் காரணத்தை என் மனசு மட்டும்தான் அறியும்.

எனக்குக் கல்யாணம் ஆகி எட்டு வருஷங்கள் ஆகிவிட்டன. ஆறு வயதில் பையன், மூன்று வயசில் பெண் — அருமையான குழந்தைகள் — இவருக்குக் கோயமுத்தூர் மில் ஒன்றில் ரிசர்ச் ஆபீசர் வேலை — நல்ல சம்பளம், வீடு, வாசல் எல்லாம்...

இவர் அழகர் — குட் பர்ஸனாலிடி. 'ஜம்' மென்று மாப்பிள்ளை மாதிரி இருப்பார்.

நானும் அழகி என்று எல்லோராலும் பாராட்டப்பட்டவள்.

'ஜோடியாய்ப் போனால் திருஷ்டி படும்' என்பார்கள் பெரியவர்கள்.

'உங்கள் குழந்தைகள் விக்கிரகங்கள் மாதிரி அழகாய் இருப்பதில் என்ன ஆச்சரியம்? நீ ராணி, அவர் ராஜா' என்றும்—

'நீங்கள் ஒரு அழகுக் குடும்பம்' என்றும் எங்களுக்குப் புகழ் மாலை கிடைத்திருப்பது ஏராளம்.

இத்தனை யெல்லாம் இருந்தும் கூடக் கொஞ்ச நாளாய் என் மனசில் ஏதோ ஏக்கம் வளருவது எனக்குப் புரிந்தது. யோசித்துப் பார்த்ததில் அவருக்கும் எனக்கும் நடுவில் ஒரு பள்ளம் தோண்டப்பட்டு விட்டாற் போன்ற பிரமை. இவருக்கு என் மேல் உள்ள நாட்டம் கொஞ்சம், கொஞ்சமாய்க் குறைந்து விட்டாற்போல உணர்வு. எனக்கு நன்றாய் ஞாபகம் இருக்கிறது.

கல்யாணத்தன்று 'கையைப் பிடிச்சுக் கோங்கோ' என்று சாஸ்திரிகள் சொல்வதற்காகவே காத்துக் கொண்டிருந்தவர், பிடியை விடச் சொன்னபோதுகூட விடாமல் பிடித்துக்கொண்டே இருந்ததும், 'சேஷ ஹோமத்தின்போது சாஸ்திரிகள் என்னை அணைத்துக் கொள்ளச் சொல்லி மந்திரம் சொன்னபோது இத்தனை பேர்கள் பார்க்கிறார்களே என்ற வெட்கம் துளியும் இல்லாமல் இறுக அணைத்ததும் — முதல் இரவு ஆன மறு நாள் என் அக்கா இவரிடம் வந்து, 'என் தங்கை எப்படி?' என்றபோது, கண்களைச் சிமிட்டி 'ஜோராய் இருக்கா' என்றதும்... ஒன்றா இரண்டா? எதையெல்லாம் சொல்ல?

இப்படி யெல்லாம் குறும்பு பண்ணி, அன்பைப் பொழிந்தவர் கொஞ்சம் அடங்கிப் போனது நான் பிள்ளையை உண்டானபோது தான்.

பிள்ளையாண்டிருப்பதிலும், பிள்ளை பெறுவதிலும், பிள்ளை வளர்ப்பதிலும் ஒரேயடியாய் ஆழ்ந்து போன எனக்கு ஏன் அவர் கொஞ்சம் என்னை விட்டுத் தள்ளிப் போனது புரியாமல் போயிற்று?

பிள்ளைகளைப் பெற்று முடிந்து நிமிர்ந்த போது அவர் எங்கோ ஒரு மூலையில் நிற்பதாகவே எனக்குத் தோன்றியது.

முன்பு இருந்த சுவாரஸ்யம் என்னிடம் இல்லையே!

அலுவலகத்தில் பொறுப்பு அதிகரித்துப் போனதால் என்னிடம் ஈடுபாடு குறைந்து விட்டதா?

முதன் முதலில் — அவருக்கும் என்னிடம் பிடித்தம் குறைந்து விட்டது என்பதை உணர்ந்த அன்று — கண்ணாடி முன் நின்று என்னை நானே அழகு பார்த்தேன்.

என் அழகு போய் விட்டதா?

மேனி தளதளப்பு?

உடல் தொய்ந்து விட்டதா?

ம்ஹூம்... இல்லையே.... எல்லாம் அப்படியே... பழையபடியே... இரண்டு குழந்தைகளைப் பெற்ற மாதிரியா? ம்ஹூம்.... இல்லையே!

இந்த நினைப்பு வந்த ஒரு வருட காலமாய் முன்னைவிட நான் அலங்கரித்துக்கொள்ள அதிக நேரம் எடுத்துக் கொள்கிறேன்... கல்யாணமான புதுசில் இவருக்குப் பிடித்ததை எல்லாம் செய்து பார்க்கிறேன்....


அப்படித்தான் ஒரு நாள்... இவர் எனக்குத் தேனிலவில் வாங்கிக் கொடுத்த புடவையை உடுத்திக் கொண்டு மணக்க மணக்க நின்றேன்.

இரண்டு நண்பர்களுடன் அலுவலகத்திலிருந்து வந்தவர் என்னென்னவோ பேசினாரே தவிர, புத்தி என்னிடம் போகவேயில்லை.

இரவு படுக்கும்போது பொறுக்காமல் கேட்டுவிட்டேன்.

ஜெலஸி

சிறப்புச் சிறுகதை



"இந்தப் புடவை — புரியலே?"

புருவத்தை நெருக்கினவருக்கு ஞாபகம் வரவில்லை.

ஏமாற்றத்தால் கண்களில் நீர் திரள விலக்கினேன்.

"ஸாரி அருணா.... வருஷமாச்சு இல்லையா?.... அதனாலே மறந்துடுத்தும்மா" என்று தேற்றினார்.

ஏன் இப்படி?

எனக்குப் புரியவில்லை.

பல நாட்கள் இவருக்குத் தெரியாமல் அழுததுண்டு.

எப்படி இருந்தவர் எப்படி மாறிவிட்டார்?

எதையாவது செய்து இவரைத் திரும்ப என் பக்கம் இழுத்துக் கொள்ள வேண்டும் என்ற வெறி அதிகமாகப் போனதால் போன வாரம் இந்தக் கான்பிரன்ஸ் அழைப்பு வந்ததும் நானும் கிளம்பினேன்.

இவருக்கு ஒரே ஆச்சரியம்.

"நீயா? வரப் போகிறாயா? குழந்தைகள்?"

"அம்மா கிட்டே விட்டுட்டு வரேன்... ஒரு வாரம்தானே...."

என் பெற்றோரும் கோயமுத்தூரிலேயே இருந்தது சௌகரியமாய்ப் போயிற்று.

கோயமுத்தூர் — சென்னை — ஹைதராபாத் விமானத்தில் பறந்தோம்.

இங்கு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்க வசதி...

முதல் இரண்டு நாட்கள் வேலை மும்முரம் அவ்வளவாய் இல்லாததாலோ என்னமோ இவர் கொஞ்சம் ஓய்வாக இருந்தார். மறு நாளிலிருந்து வேதாளம் முருங்கைமரம் ஏறி விட்டது.

இன்று 'போர்' அடிப்பதைப் பார்த்தால் ஏன் வந்தோம் என்று எனக்கு இருந்தது.

ஜன்னல் கதவைத் திறந்து கொண்டு, வெளியே எட்டிப் பார்த்தேன்.

'ஹோ' என்ற சிரிப்பு.

'நோ...நோ' என்று கெஞ்சிக் கொண்டே சிரிக்கும் ஒரு பெண் குரல்.

அவர்கள்தான்.

நான்கு நாட்களாக என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளும் அவர்களேதான்.

அவள் ஹிந்திக்காரி போலிருக்கிறது.... வெட்டிவிட்ட கூந்தல் — கொடி உடம்பு சிவந்த நிறம் — எப்பொழுது பார்த்தாலும் மணிகளைச் சிதறினாற் போலச் சிரிப்பு.

அவன் — அவளோடு ஒப்பிடும்போது சுமார்தான். ஆனாலும் கட்டுமஸ்தாக இருந்தான்.

அவளுக்கு முப்பது வயசு; அவனுக்கு முப்பத்தைந்து, நாற்பது இருக்கும். வயசைப் பார்த்தால் திருமணமாகி நாளாகியிருக்குமோ என்று எழுந்த சந்தேகம், அவர்கள் நடந்து கொள்ளும் முறையைப் பார்த்து அந்தச் சந்தேகம் நீங்கிப் புதிதாய் மணந்தவர்களே என்ற எண்ணத்தை ஊர்ஜிதப் படுத்தியது. ஒருவேளை ஒருவர் மேல் ஒருவர் கொண்டுள்ள காதலால் வருஷங்கள் ஆகியும் இப்படி இருக்கிறார்களோ?

நான் பார்த்தபோது அவளைத் தண்ணீருக்குள் போட்டு விளையாட்டாய் அவன் அமுக்கிக் கொண்டிருந்தான். அவள் ஜலத்தின் அடியில் போனதும் இவனும் முங்கி அவளிடம் வம்பு பண்ணுவது மேலே இருந்து பார்த்த எனக்கு நீரின் தெளிவால் புரிந்தது.

மறு விநாடி "ஹா... லீவ்... மீ..." என்று வெளியில் வந்த அவள் கத்தினாள். வேகமாய் நீந்திக் கொண்டு அவள் போக அவன் பின் தொடர இருவரும் கரை ஏறினார்கள்.

குடையின் அடியில், உடை மாற்றும் அறைக்குப் போகும் வழியில், என்று நிறுத்தி நிறுத்திக் குறும்புகள்—

பார்க்கும் எனக்கு உடம்பு கிளுகிளுத்தது. நான்கு நாட்களாய்த் தினம் இப்படித்தான்.

மாலையில் டைனிங் ஹாலில் பாண்டுக்குத் தக்கபடி இணைந்து ஆடுவார்கள்.

நான் நிறையப் பார்த்து விட்டேன். பார்க்கப் பார்க்க அவர்களை எங்களோடு ஒப்பிட்டுக் கொண்டதால், ஏற்கனவே ஏங்கிக் கிடந்த மனசில் வருத்தம் இன்னும் கூடிப்போயிற்று.

அவர்கள் கொடுத்து வைத்தவர்கள் — இப்படிக் கொண்டாடும் கணவன் கிடைத்த அவள் தவம் பண்ணி இருக்கிறாள்.

அன்று மாலை எனக்கு இலேசாய்த் தலை வலிக்க ஆரம்பித்து விட்டது.

கான்பிரன்ஸிலிருந்து திரும்பும்போது, இவர் உற்சாகமாகவே இருந்தார்.

"வெளியே போகலாமா?" என்றார்.


"தலையை வலிக்கிறது" என்றேன்.

அவர் கண்களில் சட்டென்று ஒரு கனிவு.

"பேசாமல் படுத்துக்கோ — என்ன? மருந்து ஏதாவது வேணுமா?"

நான் ஒன்றும் பேசவில்லை. — இழுத்துப் போர்த்துக் கொண்டு படுத்து விட்டேன். இரவு ஜுரம் அடிக்க ஆரம்பித்து விட்டது.

நடு இரவு என்னைத் தொட்டுப் பார்த்து ஜுரம் இருப்பதைப் புரிந்து கொண்ட இவர்



சுவரில் இருவிழிகள்

"மர்மக் கதை முடிவு" போட்டி விஷயம் என்ன ஆயிற்று? யாருக்குப் பரிசு? 'சஸ்பென்'ஸைத் தாங்க முடியவில்லையே! என்று பல அன்பர்கள் எழுதிக் கேட்டிருக்கிறார்கள்.

"**சுவரில் இருவிழிகள்**" நாவலின் முடிவை ஊகிக்க முயன்று பல்லாயிரக் கணக்கானவர்கள் எழுதியுள்ளார்கள். மலையாகக் குவிந்திருக்கின்றன கடிதங்கள். அத்தனையையும் பரிசீலனை செய்ய இன்னும் சற்று அவகாசம் தேவைப்படுகிறது. நேயர்கள் தயவுசெய்து பொறுத்துக் கொள்ளவும்.

ஆசிரியர், கல்கி

சிறுகதைச் சிறப்பு

எழுத்தாற்றல் எண்ணம் விதைக்க
மலரும்மனம் நூலினை மூடும்!

நடையழகு நளினச் சிலையாக்கும்,
நயமனைத்தையும் மனமசை போடும்!

வடித்தகரு வாழ்வோடு ஒன்றும்,
கதைத்திறனும் காரிகையை வெல்லும்!

மேலட்டை வண்ணப்படம்: **உத்ரா**



ஹோட்டல் மானேஜருக்கு போன் பண்ணி உடனே டாக்டரை வரவழைத்தார்.

காலையில் ஜுரம் குறையவில்லை.

''முக்கியமான போர்டு மீட்டிங்..... போயிட்டுச் சுருக்க வந்துடறேன்...'' என்று சொல்லிவிட்டு இவர் போனார்.

பகலில் மூன்று தடவை போன் செய்து எப்படி இருக்கிறாய் என்று கேட்டார்.

போகிறது – உடம்புக்கு வந்த பிறகாவது கொஞ்சம் அக்கறை பிறக்கிறதே!

நடுவில் ஒருதடவை பாத்ரூம் போக எழுந்த போது எட்டி நீச்சல் குளத்தைப் பார்த்தேன். அவர்களைக் காணோம். எங்கே போனார்கள்?

மாலையிலும், இரவிலும் ஜுரம் விடாமல் அடித்துக் கொண்டேயிருந்தது.

மறுநாள் காலை கொஞ்சம் குறைந்தது. அன்றைக்குக் கான்பரன்ஸ் கடைசி நாள். இவர் சீக்கிரமே போய் விட்டார்.

படுத்துப் படுத்து உடம்பு வலித்தது.

சற்று எழுந்து நடந்தேன். ஜன்னல் வழியாக நீச்சல் குளத்தைப் பார்த்தேன்...

'ஹோ' என்று சிரிப்பு – அவள்தான்– டைவிங் போர்டில் ஏறிக் குதித்தாள். பின்னால் அவனும் குதித்தான். நீந்தி இருவரும் கரையில் ஏறினார்கள்.

அவன் உட்கார அவன் மேல் அவள் சாய்ந்து கொண்டாள். ம்... ஆதர்ச தம்பதி! என் எண்ணம் தடைப்பட்டு எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. கவனித்துப் பார்த்தேன். அவள் அவள்தான்... ஆனால் அவன்? அவனில்லையே...

ஒரு நாள் ஜுரத்தில் என் பார்வை மங்கி விட்டதா?

இல்லை....இல்லை.... இவன் வேறு ஆள் தான்.... சிவப்பாய், ஒல்லியாய்... இவன் வேறு ஆள்தான்....

இது என்ன?

ஏனோ எனக்கு உடல் பரபரத்தது.

காப்பி கொண்டுவந்த ஹோட்டல் பையனை ஜன்னலிடம் அழைத்தேன்.

தப்புத்தான். ஆனாலும் கேட்டேன்.

''அவர்கள் யார்? அவள் யார்?''

அவன் தயங்கினான் – ஒரு மாதிரி கூசிக் கொண்டு பேசினான்... ''அந்தம்மா ஹோட்டல் முதலாளிக்குத் தெரிந்தவங்கம்மா.... இங்கே ஹோட்டலுக்கு முதலாளிக்கு வேணுங்கிறவங்க வந்தா இந்தம்மா 'கம்பெனி' கொடுப்பாங்க...'' அவன் போய் விட்டான்.

ஓ! காட் –இன் அதர் வோர்ட்ஸ் ஷி சஸ் எ பிராஸ்டிட்யூட்....

அவளையும் அவனையும் சிறந்த தம்பதி என்று எண்ணி அவர்களோடு [illegible] நம்மை ஒப்பிட்டுக் கொண்டேனே!

எனக்கு அழுகை வந்தது.

கட்டிலில் அமர்ந்து விசித்தேன்.

கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தால் இவர் நிற்கிறார்.

''வாட் ஹேப்பண்ட், அருண்''

அவர் கையில் கொத்து மலர்கள்.

படுக்கையில் அமர்ந்து [illegible] என் மடியில் வைத்துவிட்டு இறுக [illegible] துக்கொண்டார்.

''உடம்பு வலிக்கிறதாம்மா? [illegible] கிறதா? மருந்து சாப்பிட்ட[illegible] யாவிடும்......கமான் பீ சியர்புல்!

அவர் தேற்றத் தேற்ற என் [illegible] அதிகமாகியது.

''ஒரு குட் நியூஸ் அருணா [illegible] மீட்டிங்கில் ஏகமனதாய் [illegible] கம்பெனி டைரக்டராகத் தேர்ந்[illegible]... இதுக்காகத்தான் இத்தனை [illegible] பாடு பட்டேன். இனிமே ஜா[illegible]... உனக்கும், குழந்தைகளுக்கும் [illegible] வாழ்க்கையை அமைச்சுட்டேன் [illegible].... அவர் சற்றுத் தயங்கினார் [illegible] உடம்பைச் சரியண்ணிக்கோ [illegible] புறப்பட்டு அருந்தா [illegible] பார்த்துட்டு [illegible], என்ன?'' என்றபோது ஒரு [illegible] அவர் குரலில் [illegible] இழையோடியது எனக்குத் [illegible].

முன்பு அவர் இருந்தார் [illegible] லைப்படாத [illegible] கணவர், தந்தையும் [illegible] இல் அவர் பொறுப்புக்களையும் [illegible] விட்டார் – இதை நான் என் புரிந்து [illegible] விக்லை?

அருவி கொட்டும்போதுதான் [illegible] கும். [illegible] நதியாய் மாறி [illegible] அமைதியான. ஆழமான ஓட்டம்தான் – முன்பு அவர் அருவி. இப்போது நதி – இது என் எனக்குப் புரியவில்லை?

போலியைப் பார்த்து [illegible] கொண்டேனே?... என் [illegible] என்னவென்பது?

நான் ஒரு முட்டாள்! [illegible] என்று புரிய எனக்கு எட்டு வருஷ[illegible] பட்டன?



ஒரு நாள்...

நான் காலையில் சீக்கிரமாகவே படுக்கையிலிருந்து எழுந்திருக்கப் பழகியவன். இஞ்சினீயரிங் கல்லூரியில் படித்தவனாயிற்றே! காலை ஐந்து ஐந்தேகாலுக்கு எழுந்திருந்தால் தானே ஆறரை மணி வகுப்புக்குப் போக முடியும்? அந்தப் பழக்கம் நிரந்தரமாகத் தங்கிவிட்டது.

இப்போது இந்தப் பழக்கத்தைக் கடந்த ஓரிரண்டு மாதமாகக் குழந்தை விக்கிரம் ஊர்ஜிதப்படுத்துகிறான். என் குழந்தையைத்தான் சொல்கிறேன். மூன்று மாதக் குழந்தைக்குக் குஷியாக விழித்துக் கொண்டு விளையாடவும் அழவும், கிடைக்கும் நேரம் அதிகாலை மூன்றிலிருந்து ஐந்து வரை! வீட்டையே ஒரு கலக்குக் கலக்குகிறான்! அப்புறம் தூக்கமாவது ஒன்றாவது?

இன்று என்ன கிழமை? சனிக்கிழமை! இன்றைக்குத்தானே சேப்பாக்கம் எம். ஏ. சிதம்பரம் ஸ்டேடியத்தில், தமிழ்நாட்டு அணிக்கும், ஹைதராபாத் அணிக்கும் இடையே ரஞ்சிக் கோப்பைக்கான கிரிக்கெட் பந்தயம் ஆரம்பமாகிறது? தமிழ்நாட்டு அணிக்கு நான் காப்டன் ஆயிற்றே!

படுக்கையிலிருந்து எழுந்த சற்று நேரத்துக்கெல்லாம் சில நிமிடங்கள் சூரிய நமஸ்காரம், ஆதித்திய ஹிருதயம் போன்றவை சொல்லுதல் சிறு வயதிலிருந்தே வீட்டுப் பெரியவர்கள் மூலம் கிடைத்த பழக்கம். வெளிநாட்டுப் பிரயாணங்களிலும், இந்தப் பழக்கத்தைத் தாற்காலிகமாகவாவது ஒத்திப் போட இதுவரையில் நேர்ந்ததில்லை. எந்தச் சூழ்நிலையிலும் இந்த வழக்கங்கள் என் கூடத் துணை வருகின்றன.

காலை ஆகாரம். எனக்கு ரொட்டி இருந்தாலே போதும். கொஞ்சம் காப்பி! இல்லை வீட்டில் தயாராகும் ஏதாவது பலகாரங்கள்.

அவசரம் அவசரமாக டிபனை முடித்துக் கொள்கிறேன். மனம், சிந்தனை, யோசனை, எல்லாம் எப்போதோ சிதம்பரம் ஸ்டேடியத்துக்குப் போய்விட்டன. பொறுப்பைச் சுமக்க முன்வந்தால் ரசிகர்களுக்குப் பயந்து நடந்துகொண்டாக வேண்டுமே!

சூரிய நமஸ்காரம், ஆதித்திய ஹிருதயம் முதலியவற்றுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை, நான் என்னுடைய காரைப் பராமரிப்பதிலும் காண்பிக்கின்றேன். காலையில் அலுவலகத்துக்குப் புறப்படுவதற்கு முன் காரின் 'கண்டிஷன்' சரியாக 'செக்' பண்ணிக் கொண்டுதான் கிளம்புவேன். இன்று அதற்குப் போதுமான அவகாசமுமில்லை, பொறுமையுமில்லை.

அடையாறு முதல் மெயின் ரோட்டிலுள்ள என் வீட்டை விட்டுக் கிளம்பியதும், பக்கத்திலுள்ள பத்மநாப சுவாமி

எஸ். வேங்கடராகவன்



கோவிலை வலமாக வந்து மீண்டும் மெயின் ரோட்டுக்கு வருகிறேன். இதுவும் ஒரு பழக்கம். 'செண்டிமெண்ட்' காரணமாக இருக்கலாம். இதேபோல் சேப்பாக்கம் ஸ்டேடியத்துக்குப் போகும் வழியில் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி கோவிலைச் சுற்றிச் செல்லும் தெரு வழியாகத்தான் கிரிக்கெட் மைதானத்துக்குப் போவேன். இதுவும் பழக்கத்தின் அடிப்படை.

நல்ல வேளை! சென்னையிலிருக்கும் போது வீட்டை விட்டுக் கிளம்பிப் பதினைந்து அல்லது இருபது நிமிடங்களில் சேப்பாக்கம் மைதானத்தை அடைந்து விடலாம். நான் இங்கிலாந்திலுள்ள டார்பிஷயர் கிளப்புக்காக ஆடிக் கொண்டிருக்கும்போது இந்தக் கார் பிரயாணம் பல சந்தர்ப்பங்

களில் நீண்டதாகவே இருக்கும்! அங்கேயும் என் உபயோகத்துக்குக் கார்வைத்திருந்தேன்.

ஒன்பது மணி அளவிலேயே சிதம்பரம் ஸ்டேடியத்தை அடைகிறேன். அந்த நேரத்தில் பச்சைப் பசேரென்று கண் குளிரக் காட்சியளிக்கும் மைதானம் ஒருவித மன நிறைவை உண்டாக்குகிறது; குதூகலத்தையும் கொடுக்கிறது.

நம் ஊர் கிரிக்கெட் மைதானம் என்பதற்காகச் சொல்லவில்லை. நானும் இங்கிலாந்திலும், மேற்கிந்தியத் தீவுகளிலும், நிறைய ஸ்டேடியங்களைப் பார்த்திருக்கிறேன். அங்குள்ள சீதோஷ்ண நிலையை உத்தேசித்து அங்கு அதிகமாக மேலே 'கவரிங்' கிடையாது. மழை வந்தால் குடைகளை விரித்துக் கொள்வார்கள். வெய்யில் உறைக்காது. ஆனால் இங்கே முற்றிலும் 'கவரிங்' ஆன ஸ்டேடியம். கடற்காற்றின் ஜிலுஜிலுப்பு. இது ஒரு விதத்தில் கவர்ச்சியாகவும் ரம்யமாகவும் இருக்கிறது.

நண்பர்கள் சூழ்ந்து கொள்கிறார்கள். இந்தக் கிரிக்கெட்டே விநோதமான ஆட்டம். மதில் மேல் பூனை என்பார்களே! அதுபோல் அந்த அதிருஷ்டப் பூனை எந்தப் பக்கம் குதிக்கும் என்று சொல்ல முடியாதே!

எனக்குக் கட்டுப்பாட்டில் ஆர்வம் ஜாஸ்தி. எந்த நேரத்தில் எந்தவித காலணி அணிய வேண்டும் என்பதைக் கூட வற்புறுத்துவேன். ஆகவே அது போன்ற ஏற்பாடுகளைக் கவனிக்கிறேன்.

''பூவா தலையாவில் சரியானபடி கேட்க அதிருஷ்டம் உங்களுக்கு உதவட்டும்'' என்கிறார் ஒரு நண்பர்! நான் மனத்துக்குள் சிரித்துக் கொள்கிறேன். இந்த மாதிரி நேரங்களில் 'எதையும் தாங்கும் இதயம்' வேண்டும் என்று எனக்குத் தெரியும்.

''நியூசிலாந்து மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுப் பயணக் கோஷ்டிக்கு உங்களையே காப்டனாக நியமித்திருப்பதாகக் கனவு கண்டேன்'' என்கிறார் உற்சாகம் நிறைந்த மற்றொரு நண்பர்! அவர் ஆசை எனக்குப் புரிகிறது. அன்று பிற்பகல்தான் 'காப்டன் செலக்ஷன்' அறிவிக்கப்பட இருக்கிறது.

இதற்கு நான் வெளிப்படையாகவே சிரிக்கிறேன்.

''ஊஹ்ம்!... நான் காப்டனாக நியமிக்கப்பட்டால் மற்றவர்கள் ஒத்துழைப்பை வேண்டிப் பெறுவேன். இல்லாவிடில், என் ஒத்துழைப்பை நியமிக்கப்படும் காப்டனுக்கு மனமுவந்து கொடுப்பேன். இதுதான் கிரிக்கெட் ஆட்டத்தின் தத்துவம்!'' என்கிறேன். நண்பர் மௌனமாகிறார். நான் ஒரு 'இந்தியன்' என்ற உணர்வைத்தான் கிரிக்கெட் ஆட்டம் என்னிடம் வளர்த்திருக்கிறது.

சென்ற வாரம் பங்களூரில் துலீப் கோப்பைப் பந்தயத்தில் நானும் அபீத் அலியும் மத்தியப் பகுதி ஆட்டக்காரரை எதிர்த்துத் தென்பகுதிக்காக ஆடினோம். இன்று அதே அபீத் அலி, எனக்கு எதிர் அணியில் ஹைதராபாத்துக்காக ஆடுகிறார். சீக்கிரமே, மீண்டும் துலீப் கோப்பை பைனல்ஸ் ஆட்டத்தில் அபீத் அலி என்கூடச் சேர்ந்து ஆடுவார். ஆகையால் இந்த ஆட்டத்தைத் தேசியக் கண்ணோட்டத்தோடு நான் பார்க்க வேண்டுமே தவிர அந்தப் பகுதி இந்தப் பகுதி என்று பார்க்கக் கூடாது.

டாஸ் போடப்படுகிறது.

ஜயசிம்மாவுக்கு இதில் வெற்றி. அவர் தலைமை தாங்கும் ஹைதராபாத் கோஷ்டி பாட் செய்யத் தொடங்குகிறது.

எதிர்பாராதவிதமாக என் 'பௌலிங்' நண்பர் வி. வி. குமாருக்கு உடம்பு சௌகரியமில்லை. ஆட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை. இது சற்றுச் சோர்வை அளிக்கிறது. ஆனால் மற்றொர் இளைஞர் பட்டேல் சமாளிக்கிறார். பட்டாடி நவாப் ஆரம்பத்திலேயே அமர்க்களமாக ஆட ஆரம்பித்து விட்டார். அவர் ஆட்டம் களை கட்டி விட்டது. அவருடைய பழைய திறமை இன்று வெளிப்படுகிறது. இளைஞர்கள் கவனித்துக் கற்றுக் கொள்ள வேண்டிய ஆட்டம். ஸ்கோர் போர்டில் எண்கள் ஏறிக் கொண்டே போகின்றன.

இடைவேளை 'லஞ்ச்'. 'எப்படி ரன்களைக் குறைக்கலாம்' என்ற யோசனை! ஆனாலும் அன்றைய ஆட்டம் முடிந்த போது பாட்டாடி நவாப் அவுட் ஆகவில்லை. 167 ஓட்டங்கள் எடுத்திருக்கிறார். மறு நாள் தொடர்ந்து எவ்வளவு போடப் போகிறாரோ?

அன்றைய ஆட்டம் முடிந்தபோது ஒரு விதத்தில் நிம்மதி. இளைஞர் பட்டேல் நன்றாகவே பந்து வீசி அன்று விழுந்த ஆறு விக்கட்டுகளில், சரி பாதியைச் சாய்த்திருக்கிறார்.

நண்பர்கள் மீண்டும் கூடுகிறோம்! 'அப்படி வீசியிருக்கலாம்! இப்படி நிறுத்தியிருக்கலாம்' என்ற வழக்கமான 'போஸ்ட் மார்ட்டம்' பேச்சுக்கள். நல்லவேளை! வஞ்சிலோ, டிபனிலோ காசி ஹல்வா இல்லை. இந்த ஒரு அயிட்டம் எனக்குப் பிடிக்காது.

வீட்டுக்கு வருகிறேன். திரும்பும் போது பாதையைப் பற்றி அவ்வளவு சிரத்தை இல்லை.

குழந்தையைப் பார்த்தவுடன் அன்று முழுதும் நின்று, பந்து வீசி, பந்து பொறுக்கி ஓடிய களைப்பு, திடீரென்று மறைகிறது. இது ஒருவகை 'டானிக்'.

இரவுச் செய்தியில் என் நண்பர் பிஷன்சிங் பேடி இந்தியக் காப்டனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறார்கள்! நல்ல முடிவு. எனக்கு மகிழ்ச்சி!


இரவு சாப்பாட்டில் அவ்வளவு ருசியில்லை. மறுநாள் சிந்தனை எட்டிப் பார்க்கிறது படுக்குமுன் பத்திரிகைகளைப் புரட்டுகிறேன். இதுவும் பழக்கத்தின் காரணம். அவகாசம் அப்போதுதான். இப்போது உடம்பில் களைப்பு பரவுகிற மாதிரி உணர்ச்சி. இமைகள் தடிக்கின்றன. தூக்கம் வரும் போலிருக்கிறது. குட்நைட்!

கேட்டு எழுதியவர் : **கோமதி ஸ்வாமிநாதன்**



பெட்ரோலை மிச்சப்படுத்த ஆஸ்திரியா நாட்டில் கார்களை வாரத்தில் ஒரு நாள் ஓட்டக் கூடாது என்ற தடை உண்டு! ஒவ்வொரு காரின் நம்பர் பிளேட்டிலும் எந்த எந்தக் கிழமையில் ஓடாது என்று எழுதப்பட்டிருக்கும். அந்த நாளைச் சொந்தக்காரர் தம் சௌகரியத்துக்கு ஏற்பத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்!

— எஸ்கொயர் - ''பாபு''



அப்பாடா, சர்வதேசப் பெண்கள் ஆண்டு ஒருவாறாக முடிந்தது! எங்கு பார்த்தாலும் 'பெண்கள் ஆண்டு' 'பெண்கள் ஆண்டு' என்று டமாரம் போட்டுக் கொண்டிருந்த இரைச்சல் ஓய்ந்தது! (''பெண்கள் என்றால் அதில் இரைச்சல் இல்லாமல் எப்படி இருக்க முடியும்?'' என்று கேட்கிறார் நண்பர் நாகு!)

பெண்களைப் பற்றி சிலருடைய அபிப்பிராயங்களைத் திரட்டித் தருகிறேன். எப்போதோ செய்திருக்க வேண்டிய காரியம் இது. தாமதமாக வருஷம் முடிந்த பிறகு செய்கிறேன். (''பெண்கள் என்றால் அந்த தாமதம் ஏற்படாமல் எப்படி இருக்க முடியும் ?'' — நண்பர் நாகுவின் கேள்வி இது!)

பெண்கள் ஆண்டு பெண்கள் பத்தாண்டாக நீடிப்பதால் இன்று இந்தக் கருத்துத் தொகுப்பு பிரசுரமாவதும் ஒருவிதத்தில் பொருத்தமே.

அர்ஜுனன்: இந்த மாதிரி விஷயங்களில் நான் அபிப்பிராயம் சொல்வதில்லை. இருந்தாலும் நீங்கள் வற்புறுத்துவதால் நாலைக்குச் சொல்கிறேன், என் மனைவி அல்லியின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு !

சத்தியவான்: பெண்கள் உயிரை வாங்குவதில் அபார சாமர்த்தியசாலிகள்.... நான் தவறான கருத்தில் கூறவில்லை. எமன் எடுத்துக் கொண்டு போன என் உயிரைச் சாவித்திரி வாங்கினது மறந்துவிட்டதா ?


இந்திரன்: ஐயோ, சாமி! ஆளை விடுங்கள். நான் ஒன்றும் கூறப் போவதில்லை. நான் ஏதாவது சொல்லி யாருக்காவது கோபம் வந்து சாபம், கீபம் கொடுத்தால் ஆபத்து...!

துஷ்யந்தன்: பெண்களைப் பற்றி நிறைய கருத்துக்களைச் சொல்லலாம் என்றுதான் நினைத்திருந்தேன். ஆனால் எதுவுமே ஞாபகத்தில் இல்லை. யார் இட்ட சாபமோ !

தசரதர்: பெண்கள் மிகவும் நல்லவர்கள். ஆபத்தில் நமக்கு உதவுவதற்குத் தயங்கமாட்டார்கள். ஆனால் ஒன்று. அவர்களுக்கு வரம் கொடுப்பது தொல்லையில் கொண்டு போய் விட்டுவிடும். இது அனுபவபூர்வமான உண்மை.

விசுவாமித்திரர்: பெண்கள் சிறந்த கலைஞர்கள். அவர்கள் பாடுவதைக் கேட்கலாம். ஆனால் நாட்டியம் ஆடுவதைப் பார்த்து ரசிப்பது நல்லதல்ல. அவர்கள் என்னதான் அழகிகளாக இருந்தாலும், ரம்பை, ஊர்வசி, திலோத்தமை அல்லது மேனகை மாதிரி இருப்பினும், அவர்கள் நாட்டியம் ஆடுவதைப் பார்க்க வேண்டாம் என்று ஆண்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதை எச்சரிக்கையாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

துரியோதனன்: தயவுசெய்து என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். பாஞ்சாலி என்ற பெண்ணைப் பற்றி ஒரு சமயம் அபிப்பிராயம் சொன்னேன். அதன் பலனை நான் அனுபவித்தேன். அன்று முதல் எந்தப் பெண்ணைப் பற்றிய அபிப்பிராயமும் கூறுவதில்லை என்று தீர்மானித்து விட்டேன்.





பரமசிவன்: தாராளமாகச் சொல்கிறேன். ஆனால் என்னுடைய கருத்துக்களுக்கு யாரும் மதிப்பு கொடுக்கமாட்டார்கள் 'ஒரு பெண்ணைத் தலையில் வைத்துக் கூத்தாடுகிறவன்' என்ற பெயரைப் பெற்றிருக்கிறேன். ஆகவே நான் எது சொன்னாலும், ''ஹூம், அவன் அப்படித்தான் பாராட்டாகச் சொல்வான்'' என்பார்கள் !

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசிய காசு